விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

30°c - 23°c
தெளிவான வானம்

சுடர் 31 கதிர் 70 வள்ளுவர் ஆண்டு 2047 தை 21, வியாழக்கிழமை 04.02.2016

## ரணிலுடன் கைகோர்த்தார் பொன்சேகா

கொழும்பு, பெப்.4
பீல்ட் மார்சல் சரத்பொன்சேகாவின் ஜனநாயக கட்சி நேற்று ஐக்கிய தேசிய முன்னணியுடன், கூட்டணி உடன்பாட்டில் பக். 25

## உடுப்பிட்டி நலன்புரி முகாம் மக்களை வெளியேற்றுமாறு நீதிமன்றில் வழக்கு

### தாக்கல் செய்துள்ளார் காணி உரிமையாளர்

வடமராட்சி, பெப்.4
வலிகாமம் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து 26 வருடங்களாக உடுப்பிட்டி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 13 குடும்பங்களை வெளியேற்றி, குறித்த காணியைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு காணி உரிமையாளரால் பருத்தித்துறை மாவட்ட நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பான வழக்கு அடுத்த மாதம் 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருப்பதாக, குறித்த நலன்புரி முகாமில் தங்கியுள்ள மக்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட் பக். 22

## யாழ்.நீதிமன்றில் சரணடைந்தார் முன்னாள் அமைச்சர் கெஹலிய

### லலித், குகன் காணாமற்போனமை குறித்த வழக்கில் பிறப்பித்த பிடியாணையை அடுத்து



யாழ்ப்பாணம், பெப். 4
லலித், குகன் காணாமற்போன வழக்கில் யாழ்.நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தனது சட்டத்தரணி ஊடாக நேற்று நீதி மன்றில் பக். 23

# ஹுசேனை சந்திக்க மகிந்த குழு முயற்சி

### இலங்கை மீதான ஐ.நாவின் தலையீட்டுக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தவே என்கிறார் பீரிஸ்



கொழும்பு, பெப்ரவரி 4
இலங்கைக்கு வருகைதரும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல்ஹுசேனை சந்தித்துப் பேச்சு நடத்தப்போவதாக மகிந்த ஆதரவு கூட்டு எதிர்க்கட்சி நேற்று அறிவித்துள்ளது.
இதன்போது, இலங்கைப் படையினருக்கு எதிராகப் போர்க் குற்றம் சுமத்தி அறிக்கை வெளியிட்டு, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கான எதிர்ப்பை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் நேரில் வெளிப்படுத்தவே மேற்படி முயற்சியை எடுத்துள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
பொரளை என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில்:-
இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா பக். 22

## பருத்தித்துறை நீதிவானின் வாசஸ்தலத்தில் கைக்குண்டு

### பொதி ஒன்றிலிருந்து மீட்டனர் பொலிஸார் படையினர் பயன்படுத்துவது எனக் கண்டறிவு

யாழ்ப்பாணம். பெப். 4
பருத்தித்துறை நீதிவான் பெ. சிவகுமாரின் உத்தியோகபூர்வ இல்ல வளாகப் பகுதியில் வெடிக் கக்கூடிய நிலையில் இருந்த கைக்குண்டு ஒன்று நேற்றுக் காலை மீட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த கைக்குண்டு, இராணுவத்தினரால் பயன் படுத்தப்படுவது பக். 22

## குற்றமிழைப்பவர் யாராகினும் தண்டனை பெற்றாக வேண்டும்

### யோஷித ராஜபக்ச கைது குறித்து கெஹலிய



யாழ்ப்பாணம், பெப். 4
உலகிலுள்ள நீதித்துறையில் செயற்திறன்மிக்க நீதித்துறையாக இலங்கை நீதித்துறை உள்ளது என்று தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய, யார் குற்றம் செய்தாலும் தண்டனை பெற்றுத்தான் ஆக வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். பக். 24

## முச்சந்தி முரளி



எப்போது திருந்துவினம் எங்கட பஸ் காரர்...

## கட்டுப்பாட்டையிழந்த மினிபஸ் மோதித்தள்ளியது ஓட்டோவை

### இ.போ.ச பஸ்ஸை முந்துவதற்கு முயற்சித்ததால் விபரீதம் சிறுவன் உட்பட மூவர் படுகாயம்



மேலும் படங்கள் 2ஆம் பக்கத்தில்

யாழ்ப்பாணம், பெப். 4
இ.போ.சபை பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டு வேகக்கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ், எதிரே வந்த ஓட்டோவை மோதித் தள்ளிச் சென்று நிதி நிறுவன பெயர்ப் பலகை பொருத்தப்பட்ட இரும்புக் குழாயில் மோதுண்டு, வேகத்தைக் கட்டுப்படுத்தி நின்றது.
இந்த விபத்தில் சிக்குண்ட தாய் ஒருவருக்கு இரண்டு கைகளும் முறிந்து பக். 22

## தமிழ் கைதிகளின் விடுதலையை வலியுறுத்துகிறது கூட்டமைப்பு

கொழும்பு, பெப்.4
இலங்கையிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கு ஜனாதிபதி, அரசியல் பக். 23

## பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டங்கள் ஒத்திவைப்பு

### இணைத்தலைவர்களின் திடீர் அறிவிப்பால் அதிகாரிகள் அலைச்சல்

யாழ்ப்பாணம், பெப். 4
சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நேற்றுத் திடீரென ஒத்தி வைக்கப்பட்டன. இதனால் அதிகாரிகளும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வீண் அலைச்சலுக்கு உள்ளாகினர்.
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் பக். 22

## புதிய அரசமைப்புக்கான கருத்துக்களை வழங்க முன்வர வேண்டும் தமிழ் மக்கள்

### கருத்தறியும் குழுவின் உறுப்பினர் சி.தவராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 4
இலங்கையின் புதிய அரசமைப்பு உருவாக்குவது தொடர்பில் மக்களின் கருத்தறியும் குழுவின் பகிரங்க அமர்வுகளில், தமிழ் மக்களின் பங்களிப்பு குறைவாக உள்ளமை கவலையளிக்கின்றது.
இவ்வாறு மக்களின் பக். 22

## காலிமுகத்திடலில் 68ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம்

கொழும்பு, பெப்.4
இலங்கையின் 68ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் இன்று காலிமுகத்திடலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்தநிகழ்வில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஆளும் கட்சி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.
இன்று காலை காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ள சுதந்திர தின பக். 22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண சபை உறுப்பினரின் கருத்தை கண்டித்து கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம்

*கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் நடத்தினர்*

கிளிநொச்சி, பெப். 4

வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு எதிராக நேற்று கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்கள் கிளிநொச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.



கிளிநொச்சி-கரடிப்போக்குச் சந்தியில் அமைந்துள்ள பனை, தென்னை வள அலுவலகத்தில் நேற்று மு.ப. 11 மணியளவில் குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண சபை அமர்வின் போது மதுவரித் திணைக்களத்தினருக்கு இலஞ்சம் கொடுக்க சங்க ஊழியர்களிடம் முற்பணம் பெறும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இது தொடர்பில் அங்குள்ள கூட்டுறவுப் பரிசோதகர்கள் மேலதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்திருந்தார்.



மாகாண சபை உறுப்பினர் மாகாண சபை அமர்வில் தெரிவித்த விடயம் மறுநாள் (27 ஆம் திகதி) உதயன் பத்திரிகையில், "மதுவரித் திணைக்களத்தினருக்கு இலஞ்சம் கொடுக்க சங்க ஊழியர்களிடம் முற்பணம்" என்று தலைப்பில் வெளியாகியிருந்தது.

இந்தநிலையில் நேற்று குறித்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. மாகாணசபை உறுப்பினருக்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பற்றித் தெரியுமா? என்று ஆர்ப்பாட்டம் மேற்கொண்டோர் கோசம் எழுப்பினர். குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறும் ஊழியர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் 'உதயன்' பத்திரிகைக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் தாங்கியிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக் காரணமாக தமது பணியாளர்கள் சிரமத்தை எதிர்கொள்வதாகவும், இதற்கான சரியான தீர்வு கிடைக்கும் வரை பணியில் ஈடுபடுவதில்லை எனவும் தெரிவித்துள்ள அவர்கள், இந்தப் பிரச்சினைக்கான சரியான தீர்வை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர். (ற-5-21-ரி3)

## கூட்டுறவுச் சங்க ஊழியர் போராட்டத்தால் ரூ. 5 லட்சம் பெறுமதியான கள் வீணானது

*சங்க அங்கத்தவர்கள் நட்டஈடு கோரி முற்றுகை*

கிளிநொச்சி, பெப்.4

கிளிநொச்சி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள், குறித்த சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு அறியத் தராது நேற்று தன்னிச்சையாக மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் காரணமாக ரூபா 5 லட்சம் பெறுமதியான கள் வீணாகியுள்ளது என்றும், அதற்கான நட்டஈட்டைத் தருமாறும் கோரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் நேற்றுக் குறித்த சங்கத்தை முற்றுகையிட்டனர்.

குறித்த இடத்துக்கு வந்த கூட்டுறவு ஆணையாளரின் வேண்டுகோளை அடுத்து அங்கு நிலைமை சுமுகமாக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினருக்கு எதிராகவும், உதயன் பத்திரிகையில் வெளியான செய்தியைக் கண்டித்தும் கிளிநொச்சி-கரடிப்போக்குச் சந்தியில் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களால் மேற்கொள்ளப் பட்டிருந்தது.

குறித்த ஊழியர்கள் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளருக்கும், சங்கத்தினுடைய 516 அங்கத்தவர்க்கும் தெரியப்படுத்தாமல் கூட்டுறவுச் சங்கங்களை பூட்டி ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக 5 லட்சம் ரூபா பெறுமதியாக கள் வீணாகியுள்ளது என்றும், அதற்கான நட்டஈட்டைப் பெற்றுத் தருமாறும் சங்க அங்கத்தவர்கள் நேற்று சங்க அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அதையடுத்து அங்கு வந்த பனை, தென்னை வள கூட்டுறவுச்சங்க ஆணையார் அங்கத்தவர்களுக்கான நட்டஈடு பெற்று தரப்படும் என்றும், முற்றுகையைக் கைவிடுமாறும் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அங்கத்தவர்கள் தமது முற்றுகையைக் கைவிட்டனர்.

மாகாண சபை உறுப்பினரால் தெரிவிக்கப்பட்ட விடயத்தை கூட்டுறவு சங்கம் விசாரணை செய்ய வேண்டும் என்றும், ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் கோரி, தாம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கத் திட்டமிட்டிருந்த வேளை, தமக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் தெரியாமல் சங்கத்தின் ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளமை குறித்து சங்க அங்கத்தவர்கள் விசனம் தெரிவித்தனர். (ற-21,ரி3)

# கல்வித் திட்டங்கள் ஆராயப்படாது முடிந்தது நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்

நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கல்வி தொடர்பான திட்டங்கள் எவற்றையும் ஆராயாது முடிவுற்றது. நல்லூர் கல்விக் கோட்ட அதிகாரிகளோ, அவர்களின் பிரதிநிதிகளோ ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளாததால் கல்வி தொடர்பான திட்டங்கள் எவையும் ஆராயப்படவில்லை.


அதேவேளை, பிரதேச சபையின் நான்கு நெல்சிப் திட்டங்கள் உள்ளிட்ட 54 மில்லியன் ரூபா பெறுமதியான 41 திட்டங்கள் மற்றும் பிரதேசசெயலகம், யாழ். மாநகரசபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றால் மேற்கொள்ளப்படவுள்ள எட்டுத் திட்டங்களுக்கான தீர்மானங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று பி.ப. 3 மணிக்கு நல்லூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சேனாதிராசா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

சுகாதாரத் துறையில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அமைப்பதற்கான நிலம் இல்லாதமை, மின்சாரத் துறையில் வீதி ஓர விளக்குகள் அமைத்தல், குற்றவியலில் அரியாலைப் பிரதேசத்தில் மண் அகழ்வைக் கட்டுப்படுத்தல், வீதி அபிவிருத்தி தொடர்பாக அரியாலை உதயபுரம் வீதி, அரியாலை கிழக்கு வீதி அபிவிருத்தி தொடர்பாகவும், கமநல சேவைகள் தொடர்பாக நந்தாவில் குளம், கழிவுநீர் வடிகால் புனரமைப்புக்கள் தொடர்பாகவும், மீன்பிடி தொடர்பில் புறக்கணிக்கப்படும் மீனவர்களின் செயற்பாடுகளை மேற்கொள்வது, கால்நடைகள் கடத்தப்படுதல், பூம்புகார் பிரதேசத்தில் காணி உறுதிகள் செயற்படுத்தப்படுதல், நாவலடி வீட்டுத்திட்டம், மயான அபிவிருத்திகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண சபையின் விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், வடமாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட், வடமாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், வடமாகாணசபை உறுப்பினர் கஜதீபன், யாழ்.மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசன், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என்று பலரும் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை. (ற-ரி5)



யாழ்ப்பாணம் -திருநெல்வேலியில் நேற்று வேகக் கட்டுப்பாட்டை இழந்த பயணிகள் மினிபஸ் ஒன்று விபத்துக் குள்ளானது. விபத்தில் மூவர் காயமடைந்ததுடன், ஓட்டோ, மோட்டார் சைக் கிள்கள் எனப் பல சேதமடைந்தன.

## வீட்டுக் கிணற்றில் இருந்து இளைஞன் சடலமாக மீட்பு

வவுனியா, பெப்.4

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இளைஞன் ஒருவனின் சடலம் வவுனியா பொது வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குளிப்பதற்குச் சென்ற இளைஞன் கிணற்றில் தவறி விழுந்திருக்கக் கூடும் என்று ஊகிக்கப்படுகின்றது.

வவுனியா – குருமன் காடு கரப்பன்காட்டுப் பகுதியைச் சேர்ந்த ஜெயப்பிரகாசம் வசந்தன் (வயது-32) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனை நேற்றுக் காலையிலிருந்து காணவில்லை என்று தெரிவித்து, இளைஞனுடைய உறவினர்கள் வீட்டிலும் அனைத்து இடங்களிலும் தேடியபோதும் அவரைக் காணவில்லை. இளைஞனின் கைபேசி, கண்ணாடி என்பன வீட்டில் இருந்துள்ளன. அதையடுத்து சந்தேகத்தில் வீட்டுக் கிணற்றுக்குள் தேடிய போது கிணற்றில் இளைஞன் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக உடலை மீட்டு உறவினர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். எனினும், இளைஞன் உயிரிழந்தமையை வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அதையடுத்து உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து பேசுங்கள் சுஸ்மா சுவராஜிடம்

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்குக் கடிதம்

மன்னார்.பெப்.4

இந்திய இழுவைப்படகுகள் வட பகுதிக் கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதினால், வடக்கு மீனவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக, இலங்கை வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜிடம் வலியுறுத்துமாறு 6 அம்ச கோரிக்கைகளை முன் வைத்து எதிர்க்கட்சித்தலைவரும், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவரால் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாளை வெள்ளிக்கிழமை இலங்கை வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஸ்மா சுவராஜ், இலங்கை -இந்திய கூட்டு ஆணைய கூட்டத்தில் இரு தரப்பு மீனவர் பிரச்சினைக்குத்தீர்வு காண்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடாத்தஉள்ளதாகஊடகங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இலங்கை வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரைச் சந்திக்க உள்ளதாக அறியக்கூடியதாகஉள்ளது.

குறித்த சந்திப்புக்களின் போது, சுஸ்மா சுவராஜ், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில்தொழில்செய்யும் வேண்டுகோளை முன்வைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இலங்கை அரசானது தனது அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்ள சில விட்டுக்கொடுப்புடன் நடந்து கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

தமிழ் தலைவர்களான தங்களிடமும் இந்தவேண்டுகோள் முன்வைக்கப்படலாம். ஆனால் இந்திய மீனவர்களால் பாதிக்கப்படும் சமூகமாக, வடபகுதி மீனவர்கள் உள்ள நிலையில், தொடர்ச்சியாக தமது இழப்புகளைத் தங்களிடம் முறையிட்டு வந்துள்ளனர்.

இதற்கமைய தாங்கள் வடபகுதி மீனவ பிரதிநிதிகளை ஜனாதிபதியுடனான சந்திப்பை கடந்த வருடம் ஏற்படுத்தி வடபகுதிமீனவர்களின்பிரச்சினைகளை அவர் அறியச்செய்தீர்கள். மேலும் நாடாளுமன்றத்தில் இது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டீர்கள். ஒன்றை ஏற்பாடு செய்துள்ளீர்கள். இதற்கு மேலதிகமாக வெளிநாட்டுப் படகுகள் கையாளும் திருத்தச்சட்டத்தை அமைச்சரவையிலும் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பித்துள்ளீர்கள். இது விரைவில் சட்டமாக இயற்றப்பட உள்ளது.

இவ்வாறான தங்கள் நடவடிக்கைகளை வரவேற்கும் அதே வேளை, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடனான சந்திப்பில் வடபகுதி மீனவர்கள் படும் துன்பங்களையும் அவர்களின் தொழில் இழப்புகளையும் தெளிவுபடுத்துமாறு வடபகுதி மீனவர்கள் சார்பாக கேட்டுகொள்கிறோம்.

அத்தோடு இந்திய இழுவைப் படகுகள் எமது கடற் பகுதிக்குள் நுழைந்து தொழில் செய்கின்றமை,போரின் வடுக்களிலிருந்து மீண்ட மக்கள், கடலில் சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாமை. மீன் இனங்கள் வாழ்வதற்கு இயற்கையால் வழங்கப்பட்ட முருகைகற்பாறைகள் மற்றும் பவளப் பாறைகள் அழிக்கப்படுவதால் எதிர்கால சந்ததியினருக்கு வளங்கள் இல்லாமல் போகின்றமை,பல லட்சம் ரூபா பெறுமதியான வலைகள் மீன்பிடி உபகரணங்கள் இந்திய இழுவைப்படகுகளினால் இழுத்து செல்லப்பட்டு நாசமாக்கப்படுகின்றமை,

எமது கரையோரப் பகுதிகளில் குறித்த இழுவைப்படகுகள் தொழில்செய்வதால் சாதாரண மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முற்றாக இழக்கின்றமை, கடல் தாவரம் அழிக்கப்படுவதால் மீன்களுக்கும் குஞ்சுகளுக்கும் தேவையான உணவும் அதற்கான பாதுகாப்பும் இல்லாமல் செய்யப்படுகின்றமை, எமது மீனவர்கள் எமது கடற்பரப்பில் தொழில் செய்ய முடியாமை மற்றும் இந்திய மீனவர்களின் அத்து மீறிய செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும், எமது கடல் வளத்தை எமது மீனவர்கள் அனுபவிக்கவும் வாரத்தில் அனைத்துநாள்களும்தொழில் புரிவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளையும் முன் வைக்கின்றோம்.

வடக்கு மாகாண சபையானது, இந்திய அரசுடன் எமது பகுதியின் அபிவிருத்தி தொடர்பாக நல்லுறவைக் கட்டியெழுப்ப வேண்டும். அத்துடன் எமது பகுதி மீனவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்காமல் செயற்பட வேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-56.21)

**தேவை** லண்டன், ஆஸ்திரேலியா, சுவிஸ், கனடா ...
திருமணத்துக்கான குறிப்பு உள்ளன. இதனை பதிவு செய்வதற்கு வேலையாள் (பெண்) தேவை.
தொடர்பு:- 075 636 7361

**தராசு விற்பனைக்கு**
ஒரு வருடம் பாவித்த 300kg நிறை போடக் கூடிய எலக்ரோனிக் எவரெடி தராசு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 230 6390

**திருமணசேவை**
டாக்டர்கள், பொறியியலாளர்கள் மற்றும் பட்டதாரிகள், அரசாங்க, தனியார்துறை உத்தியோகத்தர்கள் உட்பட உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பலரின் ஜாதகங்கள் எம்மிடம் உள்ளன.
மணமக்களைத் தேடுவோர் நேரில் சந்திக்கலாம்.
" சிவா திருமணசேவை "
100, அரசடிவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
( யாழ்/இந்து மகளிர் கல்லூரியடி )
தொடர்பு: 077 899 6281

**வேலைவாய்ப்பு** 0718474325
- கணினி ரைப் செற்றிங் செய்வதில் முன் அனுபவம் உள்ளவர்கள் (ஆண்/பெண்)
(Pagemaker, CoralDraw தெரிந்திருப்பது அவசியம்)

அத்தியடி வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு** 0718474325
- TVS Heavy Duty XL மோட்டார் சைக்கிள்
- அச்சகத்துக்குரிய சிறிய கட்டர்
- கடைக்குரிய சிறிய கதவு
- சிசில் (கடைக்குரிய) குளிர்சாதனப் பெட்டி

**காணிகள் விற்பனைக்கு**
- Farm School இந்து அருகில் (2 பரப்பு)
- கோண்டாவில் சந்திக்கு அருகில் (2 பரப்பு)
- உரும்பிராய் கோப்பாய் வீதியில் (5 பரப்பு)

நேரடி விற்பனை மட்டும்
0777 0370 58

**வேலையாள்கள் தேவை**
சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை. சிறப்பான சலுகையுடன் மரியாதையான நிரந்தர வேலை வாய்ப்பு
1. உணவு பரிமாறுபவர்கள்
2. மரக்கறி நறுக்குனர்
3. காசாளர்
4. பில்கிளார்க்
5. குசினி வேலை செய்ய தெரிந்தவர்கள்
6. ஏனைய உதவி வேலைகளுக்கும்
7. சுத்திகரிப்பாளர்கள்.

தொடர்பு: 7/3, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
0777 91 77 53, 0755 30 45 21

**NPK கணினித் திருத்தம்**
எந்த இடமாக இருந்தாலும் வீடுகளுக்கு வந்து உடனடியாக திருத்தித்தரப்படும்.
எந்த ஒரு உபகரணங்களுக்கும் 2 வருட உத்தரவாதம் தரப்படும்.
தொடர்பு: 0777 064 151

**கூறுவிலை**
எமது சங்கத்தின் மாநாட்டு மண்டபத்துக்கு உட்கூரைவேலை, மின்னிணைப்பு வேலைகள், யன்னல் திறந்து பூட்டக் கூடிய முறையில் அமைத்தல் வேலைகளுக்கு கூறுவிலை கோரப்படுகின்றது. எனவே இதனைச் செய்யக் கூடியவர்கள் வேலை விவரங்களை அலுவலகத்தில் பெற்று தங்களது மூடிய கூறுவிலையை 15.02. 2016ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
பொது முகாமையாளர்
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**
வெற்றி வாரம்: 2734 திகதி 03.02.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
01 30 31 44 R
போனஸ் இல. 11
சனிக்கிழமை ஜக்பொட்
ரூ. 11,658,500/-
2016.02.06 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

**Galaxy Star**
வெற்றி வாரம் 031 திகதி 03.02.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
05 35 43 49 59
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,816,940/-

**உடனடி வேலைவாய்ப்பு**

**அலுவலக உத்தியோகத்தர்கள்**
- A/L சித்தி
- இருமொழித் தேர்ச்சி
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**விமானப் பற்றுச்சீட்டு உத்தியோகத்தர்கள்**
- Air Ticketing Diploma கற்கைநெறி பூர்த்தி
- மும் மொழித் தேர்ச்சி
- இரு வருட முன் அனுபவம்

**வாகன சாரதி**
- முன் அனுபவம்
- ஆண்கள் மட்டும்
- மும் மொழிகளில் தேர்ச்சி

**கணக்காளர்**
- 3 வருட முன் அனுபவம்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் /நிறுவனத்தில் தேர்ச்சி
- இரு மொழித் தேர்ச்சி

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்**
- பகுதிநேரம் / முழுநேரம்
- சந்தைப்படுத்தல் துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- இருபாலாரும்
- இரு மொழிகளில் தேர்ச்சி
- பகுதி நேர வேலைக்கு அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

மேற்படி பணி நிலையில் தேர்ச்சி உடையவர்கள் சுயவிவரக் கோவையுடன் புகைப்படத்தினையும் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் (14.02.2016) கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 5092
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!
சனி, ஞாயிறு பிரிவுகள்ஆரம்பம் 06.02.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
வாரநாள் (திங்கள்,புதன்) பிரிவுகள் ஆரம்பம் : 08-02-2016 காலை 10.00-12.00
06.02.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும்.ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

**Uduvil Girls' College**

**Sports Meet 2016**

**Friday, February 5th, 2016**

**Change of Time**

Due to unavoidable circumstances the time of the above sports meet has been advanced from 1.30 p.m. to 9.30 a.m., Friday, 5th February, 2016.
We regret any inconvenience caused.

**Principal,**
**Uduvil Girls' College**

**24ஆவது பிறந்தநாளும் 2ஆவது மாத நினைவு நாளும்**



அமரர்
**நந்தகோபால் பிரியங்கா (லக்கி)**

தோற்றம் 04.02.1992
மறைவு 04.12.2015

காயங்கள் ஆறாது
கண்ணீரும் ஓயாது
இரு மணி நேரத்தில் - உம் இதயம்
இயங்க மறுத்ததால்
கணப்பொழுதும் எம் இதயம்
கசிந்துருகி மடிகின்றது

மன்னார்.
023 2250 238

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயில் கடவையை அகற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம்

*உதயநகர் மேற்கு மக்களின் எதிர்ப்பால் திட்டத்தைக் கைவிட்டனர் அதிகாரிகள்*

கிளிநொச்சி, பெப்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கொண்டுள்ள, மக்கள் அதிகம் பயன்படுத்தும் உதயநகர் மேற்கில் உள்ள ரயில் கடவை ஒன்றுக்கு ரயில் திணைக்களம் வேலியிட முயன்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

மக்களின் எதிர்ப்பையடுத்து வேலி அமைக்கும் திட்டத்தைக் கைவிட்டு திணைக்கள அதிகாரிகள் திரும்பினர்.

வடக்குக்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நூற்றுகணக்கான ரயில் கடவைகள் உருவாக்கப்பட்டன. இவற்றில் 10 வீதமான ரயில் கடவைகள் மாத்திரமே பாதுகாப்பான கடவைகள் என்பதுடன் ஏனையவை பாதுகாப்பற்ற கடவைகளாக உள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாதுகாப்பற்ற கடவைகளில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதையடுத்து அவற்றைப் பாதுகாப்பான கடவைகளாக மாற்றுமாறு ரயில்திணைக்களத்துக்கு மக்கள் கோரிக்கை முன்வைத்திருந்ததுடன் கடந்த காலங்களில் பல்வேறு போராட்டங்களையும் நடத்தியிருந்தனர்.

எனினும் 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த கடவைகளை விட தற்போது கடவைகள் அதிகமாகவுள்ளன என்று தெரிவித்த திணைக்களம், புதிதாக உருவாக்கப்பட்ட வீதிகளின் கடவை களை அகற்றுவதற்குத் தீர்மா னித்தது.

அதன்படி அநுராதபுரத்திலிருந்து கிளிநொச்சிக்கு வருகை தந்த திணைக்களத்தின் குழு ஒன்று கிளிநொச்சியில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரத கடவைகள் சிலவற்றுக்கு வேலியிடும் திட்டத்தைச் செயற்படுத்தியது. அதன் ஓர் அங்கமாக உதயநகர் மேற்கில் உள்ள ரயில் கடவை ஒன்றையும் அகற்ற அதிகாரிகள் முயற்சித்தனர்.

அதையடுத்து அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த வீதி மக்களால் பெரிதும் உபயோகிக்கப்படுகின்றது என்பதை அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டினர். சம்பவ இடத்துக்கு வந்த கிளிநொச்சிப் பொலிஸாரும் குறித்த வீதியை அதிகம் மக்கள் பயன்படுத்துகின்றனர் என்பதை அதிகாரிகளுக்கு மேலும் விளக்கிக் கூறினர்.

அதையடுத்து தமது திட்டத்தைக் கைவிட்டு அதிகாரிகள் திரும்பினர். (ற-21,ரி3)

# ராஜபக்சவைப் பழிவாங்கினால் வளாவிருக்க என்னால் முடியாது

*மேர்வின் சில்வா கூறுகின்றார்*

கொழும்பு, பெப்.4

ராஜபக்சவை பழிவாங்கும் நடவடிக்கை சட்டவிரோதமாக இடம்பெறுமாயின், ராஜபக்சக்களுடன் அரசியலை ஆரம்பித்தவன் என்ற வகையில் நான் கண், காதை மூடிக்கொண்டு சும்மா இருக்கமுடியாது. - இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

யோசித ராஜபக்ச சிறையிலடைக்கப்பட்டுள்ளமை குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மகனுக்குப் பாதிப்பு ஏற்படும் போது பெற்றோருக்கு ஏற்படும் உணர்வை நான் அனுபவித்துள்ளேன். இருப்பினும், நீதிமன்றத்தில் தீர்ப்பொன்று வழங்கினால் அதற்கு எதிராக எம்மால் பேசமுடியாது. நடப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கவே வேண்டும்.

ராஜபக்ச குடும்பத்தவருக்கு ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கிராமத்தில் பிறந்தவன் என்ற வகையில் நான் கவலையடைகின்றேன்.

இருப்பினும், எனது கவலையை நான் அவரிடம் (மகிந்த) தெரிவிக்கவில்லை. தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் நான் அவருடன் கதைக்கவில்லை. அவர் கதைத்தால் நானும் கதைப்பேன். அல்லது கதைக்கவேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டால் நான் கதைப்பேன்.

பழிவாங்கல் போன்ற நடவடிக்கை தொடர்ந்து சட்டத்துக்கு அப்பால் நடைபெறுமாயின், ராஜபக்சாக்களுடன் அரசியலை ஆரம்பித்தவன் என்ற வகையில், நான் கண், காதை மூடிக் கொண்டு சும்மா இருக்க முடியாது. இது மேர்வின் சில்வாவின் பழக்கம்.

ஒரு விடயத்தில் இறங்கும் முன்னர் சிந்திக்கவேண்டும் என்று தெரியும்தானே. அதற்கமைய அந்த நேரத்தில் எடுக்கவேண்டிய முடிவை மக்களுடன் எடுப்பேன்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோசித ராஜபக்சவை நான் இதுவரை சென்று பார்க்கவில்லை.

நிஷாந்த ரணதுங்க, யோசித ராஜபக்ச மற்றும் ரோகான் வெலிவிட்ட ஆகியோரை நிச்சயமாகப் பார்வையிடச் செல்லவேண்டும். தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இவர்களைப் பார்வையிடுவதற்குப் பெருமளவானோர் செல்கின்றனர். அதனால் ஆள் நடமாட்டம் குறைவடைந்ததன் பின்னரே அவர்களைப்பார்வையிடச்செல்ல வேண்டும் - என்றார். (ற-சி)

# வீடு உடைத்துத் திருடியவர் வேறு திருட்டிலும் தொடர்பு

*பொலிஸார் தெரிவிப்பு*

கல்வியங்காடு, கட்டப்பிராய் பகுதியில் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட நபர் பல்வேறு கொள்ளை, வழிப்பறி, திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என விசாரணையில் தெரியந்துள்ளது என்று யாழ். குற்றத் தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

புன்னாலைகட்டுவன் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர் கடந்த திங்கட்கிழமை கல்வியங்காடு பகுதியில் உள்ள வீடு ஒன்றை பட்டப்பகலில் உடைத்து திருட முற்பட்ட சமயம் அந்தப் பகுதிப்பொதுமக்களால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவரிடம் மேற்கொண்ட விசாரணையில், அச்சுவேலி, சுன்னாகம், யாழ்ப்பாணம் பொலிஸ் பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு உள்ளமை தெரிய வந்துள்ளது.

குறித்த நபரிடம் அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, அச்செழு பகுதியில் திருட்டு போனமை தொடர்பில் சில குறிப்புக்களைப் பெற்றுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-107)

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்,
## கேள்வி கோரல்

யாழ். மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருட்களை 2016.03.01- 2016.08.31 வரை பெற்றுக் கொள்வதற்காகபொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும், விண்ணப்ப படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 2016.02.05 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கெள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 2016.02.18 ஆந் திகதி பி.ப 2.00 இற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விபரத்தினை குறிப்பிட்டு "தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 2016.02.18ஆந் திகதி பி.ப 2.00 இற்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரரோ அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

- காகிதாதிகள், எழுதுபொருட்கள்
- நுகர்வுப் பொருட்கள்
- மின்இணைப்புப் பொருட்கள்
- உணவு/சிற்றுண்டி வகைகள்
- வாகன ரயர்கள்
- அலுவலக அடையாள அட்டை செய்தல்
- ரோணர் வகைகள்
- ஹாட்வெயர்பொருட்கள்
- இறப்பர் முத்திரைகள்
- குடிநீர்/பால்மா வகைகள்
- வாகன பற்றிகள்

முக்கிய குறிப்பு:

1. விண்ணப்ப படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தங்களது வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இச் சான்றிதழில் குறிப்பிடப் பட்டிருக்கும் பொருட்களுக்கு மட்டுமே தாங்கள் கூறுவிலைகள் வழங்குதல் வேண்டும்.
2. பெறுகைக்குழுவினரால் தெரிவு செய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கட்டளை கிடைக்கப்பெற்று 2 தினங்களுக்குள் பொருட்களை யாழ் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் நேரடியாகவோ அல்லது முகவர் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும் இதற்கு ஏற்ற வகையில் தங்களால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
3. பொருட்களை வழங்குவதற்கு தெரிவு செய்யப்படும் வழங்குநர் வெளி மாவட்டத்தினைச் சேர்ந்தவராக இருப்பின், அந்நிறுவனத்திற்கு யாழ் மாவட்டத்தில் முகவரோ அன்றி விநியோகஸ்தரோ இருப்பது கட்டாயமானது. இதற்கான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நா.வேதநாயகன்,
மாவட்டச் செயலரும்,
அரசாங்க அதிபரும்,
யாழ் மாவட்டம்.

(சி.28997) (13.17.18)

# வேலை செய்யாவிட்டாலும் மாதம் 2,500 சுவிஸ் பிராங்க்

*வழங்கத் தீர்மானித்துள்ளது சுவிற்ஸர்லாந்து அரசு*

கொழும்பு, பெப்.4

வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் ஒவ்வொருவருக்கும் மாதம் தலா 2 ஆயிரத்து 500 சுவிஸ் பிராங்க் (ரூபா 3 லட்சத்து 52 ஆயிரம்) அளிக்க சுவிற்ஸர்லாந்து அரசு முன்வந்துள்ளது. இது தொடர்பாக பொது வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

திட்டமிட்டபடி வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், இதுபோன்று மாதாந்த வருமான உத்தரவாதம் தொடர்பாக முதல் வாக்கெடுப்பு நடத்தும் முதல் நாடு என்ற பெருமையை சுவிற்ஸர்லாந்து பெறும்.

வேலைவாய்ப்புக்கும் வருமானத்துக்கும் இடையில் உள்ள தொடர்பை அறுக்கவே இந்தத் திட்டம்கொண்டுவரப்படவுள்ளது. அதாவது, வேலை செய்தாலும், செய்யாவிட்டாலும் குறைந்தபட்ச மாதாந்த வருமானம் உறுதி. அறிவுஜீவி குழு ஒன்று இதனைப் பரிந்துரை செய்துள்ளது. இதனை ஏற்ற சுவிற்ஸர்லாந்து மத்திய அரசு வாக்கெடுப்புக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக நடத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பில், குறைந்தபட்ச மாதாந்த வருவாய்க்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டாலும், குறிப்பிட்ட அளவு மக்கள் தொடர்ந்து வேலைக்குச் செல்ல விரும்புகின்றனர், வேலை தேடி வருகின்றனர்.

வெறும் 2 சதவீதம் மக்கள்தான் இந்தத் தொகை கிடைத்தால், வேலைக்குச் செல்வதை நிறுத்த விரும்புகின்றனர். 8 சதவீதம் பேர் சூழ்நிலையைப் பொறுத்து முடிவெடுப்போம் என்று தெரிவித்துள்ளனர்.

உத்தரவாத வருமானம் கொடுக்கப்பட்டால், கூடுதல் தொகைக்காக உழைப்பதற்கான ஆர்வம் மக்களிடையே குறைந்துவிடும் எனும் இந்தத்திட்டத்தை எதிர்ப்பவர்களின் கருத்து, இந்தக் கருத்துக்கணிப்பு மூலம் முரண்பட்டிருப்பது தெரியவந்துள்ளது என்று இந்தத் திட்டத்தைப் பரிந்துரை செய்தவர்கள் தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு குழந்தைக்கும் மாதம் சுமார் ரூ. 40 ஆயிரம் அளிக்கவும் திட் டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் செயற்பாட்டுக்கு வந்தால், அரசுக்கு ஆண்டுக்கு சுமார் ரூ. 29.21 லட்சம் கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (ற-சி)

# அதிக கள் வைத்திருந்த இருவருக்குத் தண்டம்

மேலதிகமாக கள் வைத்திருந்த காரைநகரைச் சேர்ந்த இருவருக்கு தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியால்.

சங்கானை மதுவரி நிலைய அதிகாரிகள் தாக்கல் செய்த இரண்டு வழக்குகள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அளவுக்கு அதிகமாக கள்ளை உடைமையில் வைத்திருந்த இருவரும் தம் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதிவான் அபராதம் விதித்தார். (ற-107)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொது இடங்களில் புகைத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

*வவு. நகர சபைச் செயலாளர் தெரிவிப்பு*

வவுனியா.பெப்.4

வவுனியாவில் பஸ் நிலையம் உட்பட்ட பொது இடங்களில், மது அருந்துதல், புகைத்தல் போன்றவை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன. தற்போது அவ்வாறானவற்றுக்கு சட்ட நடவடிக்கைகள் இடம் பெறுவதில்லை. - என்று வவுனியா நகர சபையின் செயலா ளர் தெரிவித்தார்.

தடையை மீறி பொது இடங்களில் மது, புகைத்தல்களை மேற்கொள்வோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

வவுனியா பஸ் நிலையத்தின் பொதுமலசலகூடம், பஸ் நிலையத்தின் மேல்மாடியில் மாணவர்களுக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருவகாலச் சீட்டு விநியோகிக்கப்படும் இடத்துக்கு செல்லும் படிக்கட்டுகள் மற்றும் வர்த்தக நிலையத்திற்கு செல்வதற்கான படிக்கட்டுகளில் இளைஞர்கள் சிகரெட் புகைக்கின்றனர் என்றும், அவ்விடத்தால் செல்லும் பாடசாலை மாணவிகள் மற்றும் யுவதிகளுடன் தகாதவார்த்தைகளைப் பிரயோகின்றனர் என்றும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதுகுறித்துக் கேட்டபோதே நகர சபைச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

கடந்த வாரம் முதல் குறித்த செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொது மலசல கூடம், கட்டணகுளியலறை போன்றவை குத்தகைக்காக கொடுக்கப்படுகின்றன. அவற்றைக் குத்தகைக்கு எடுத்து கொள்பவர்கள்தான் குறித்த செயற்பாடுகளை நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்தாது போனால் அவர்களுக்குத்தான் தண்டனை வழங்கப்படும் என்று கூறியிருந்தோம். அதற்கு இணங்க தற்போது வவுனியா நகரப்பகுதியில் உள்ள பொது இடங்களில் புகைத்தல், மது அருந்துதல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனாலும் தொடர்ச்சியாக இதைக் கட்டுப்படுத்துவதற்காக இரவு வேளைகளிலும் குறித்த பகுதிகள், பொலிஸாராலும், நகர சபையினராலும் கண்காணிக்கப்படுகின்றன.- என்றார்.

(ற-21,402)

# வடக்கு மாகாண சபை உறுப்பினர் நால்வர் வீதிப் புனரமைப்புக்கு நிதி

முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த நான்கு மாகாண சபை உறுப்பினர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 23 மில்லியன் ரூபா நிதியை அளம்பில் குமுழமுனை வீதிப் புனரமைப்புக்கு ஒதுக்கியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் உள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு சொந்தமான, மோசமான நிலையில் காணப்படும் வீதிகளைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு அமைவாக மாகாண சபை உறுப்பினர்களை அவரவர் பகுதிகளில் உள்ள குறித்த வீதிகளை அடையாளம் காணுமாறும், வீதி அபிவிருத்தி அமைச்சால் மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு 6 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப் படும் என்றும் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்திருந்தது.

அதன்படி மாகாண சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒதுக்கப்பட்ட 6 மில்லியன் ரூபா நிதியில் சி.சிவநேசன், து. ரவிகரன், ஜெனோபர் ஆகியோரும், வடக்கு மாகாண சபைப் பிரதி அவைத்தலைவரான அன்ரனி ஜெகநாதனும் இணைந்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 24 மில்லியன் ரூபா நிதியில் 23 மில்லியன் ரூபாவை அளம்பில் குமுழமுனை வீதியை புனரமைப்பதற்கு ஒதுக்கி யுள்ளனர்.

அதிக எண்ணிக்கையான மக்கள்பயன்படுத்தும் இந்த வீதி மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளது. இதனைப் புனரமைத்து விரைவில் மக்கள் பாவ னைக்கு விடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று வடக்குமாகாணசபைஉறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். வீதி அபிவிருத்தி அமைச்சு மாவட்டத்தின் மற் றொரு முக்கிய வீதியான இரட்டை வாய்க்கால் - சாலை வீதியைப் புனரமைத்துத் தர வேண்டும் என்றும் கோரினார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவநேசன்–

நாங்கள் நான்கு பேரும் கலந்து பேசி இந்த முடிவை எடுத்தோம். குமுழமுனையில் அதிக எண்ணிக்கையான மக்கள் வாழ்கின்றனர். அங்கு வைத்தியசாலை ஒன்றையும் தற்போதுதான் ஆரம்பித்துள்ளோம். போக்குவரத்துப் பிரச்சினையால் அங்கு சேவை யாற்ற வைத்தியர்கள் தயங்குகின்றனர். அம்புலன்ஸ் ஓடுவதற்கு வீதி ஏற்ற வகையில் இல்லை. அங்குள்ள விவசாயிகளுக்கு போக்குவரத்து முக்கியமான ஒன்று. அதையடுத்தே அதனைப் புனரமைப்பது என்று தீர்மானித்தோம்.- என்றார்.

(ற-21,ரி7)

# சூது விளையாடிய 7 பேர் ஐந்து சந்தியில் கைது

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்ப்பாணம், ஐந்து சந்திப் பகுதியில் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் பணத்துக்கு சூது விளையாடிய குற்றச்சாட்டில் 7 பேர் கடந்த திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைதானவர்கள் கிளிநொச்சி, சுன்னாகம், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். அவர்களது 4 மோட்டார் சைக்கிள்களும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்றும், சூது விளையாடுவதற்குப் பயன்படுத்தப்படவிருந்த 2 லட்சத்து 39 ஆயிரத்து 500 ரூபா பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த வீட்டில் நீண்டகாலமாக பணத்துக்காகச்சூது விளையாடப்படுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து அந்தப் பகுதியைப் பொலிஸார்சுற்றிவளைத்துள்ளனர். அதன் போதே 7 பேரும் கைது செய்யப் பட்டனர்.

அதேவேளை, குறித்த வீட்டைப் பராமரித்து வரும் அயலவர் ஒருவர் அதற்காக தினமும் 5 ஆயிரம் ரூபா பெற்றுவந்துள்ளார் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. அதுமட்டுமன்றி கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் தான் சூது விளையாடிய 20 ஆண்டுகளில் சுமார் 3 1/2 கோடி ரூபாவை இழந்துள்ளார் என்றும் அதை மீட்கவே தொடர்ச்சியாக சூது விளையாடி வருகின்றார் என்றும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேகநபர்களையும், சான்றுப் பொருள்களையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-107)

# போதைக்கு புனர்வாழ்வு பெற்ற சிலர் மீளப் போதைக்கு அடிமை

*யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நந்தகுமார் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப்.4

போதையிலிருந்து புனர்வாழ்வு பெற்று வெளியேறியவர்களில் சிலர், குறித்த காலத்தின் பின்னர் மீண்டும் போதைக்கு அடிமையாகின்றனர். போதையிலிருந்து விடுபட்ட நாடு செயற்றிட்டத்துக்கு பொலிஸாரது ஒத்துழைப்பே அதிகளவில் தேவையாக உள்ளது. - இவ்வாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கே.நந்தகுமார் தெரிவித்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், ஜனாதிபதியால் நடைமுறைப்படுத்தப்படும் விசேட கருத்திட்டங்களில் ஒன்றான போதையிலிருந்து விடுபட்ட நாடு செயற்றிட்டம் தொடர்பில் ஆராயப்பட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

புகைத்தல் தொடர்பில் பொதுமக்களுக்கும்–பாடசாலைகளுக்கும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் வீதி நாடகங்கள் மூலமாகவும் விழிப்புணர்வுச் செயற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

மது போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் நிலையம் ஒன்று சாவகச்சேரி வைத்தியசாலையில் குருந்தம் என்ற பெயரில் செயற்பட்டு வருகின்றது. கடந்த 2 வருடங்களாக இந்த நிலையம் இயங்கி வருகின்றது. 270 பேர் வரையில் புனர்வாழ்வு பெற்று வெளியேறியுள்ளனர்.

இவர்களில் சிலர் குறித்த காலத்தின் பின்னர் மீண்டும் போதைக்கு அடிமையாகின்றனர். சிலர் மதுப்பாவனையை அதன் பின்னர் முற்றாகக் கைவிட்டவர்களாகவும் இருக்கின்றனர்.

அதேவேளை போதைப் பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் - குறைக்கும் நடவடிக்கைக்கு பொலிஸாரது ஒத்துழைப்பே முழுமையான தேவையாக இருக்கின்றது – என்றார்.

(ற-5)

# வடமராட்சியில் கடை உடைத்து திருட்டு மாணவர்கள் உட்பட நால்வருக்கு மறியல்

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பகுதியில் கைத்தொலைபேசிக் கடையொன்று உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று மாணவர் உட்பட நால்வரையும் 14 நாள்களுக்கு தொடர்ந்தும் நன்னடத்தைப் பாடசாலையில் தடுத்து வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

வடமராட்சி வல்வெட்டித்துறைப் பகுதியில் அண்மையில் கைத் தொலைபேசிக் கடையொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் களவாடப் பட்டிருந்தன.

இது தொடர்பில் விசாரணையை மேற்கொண்ட வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் மீடின் தலைமையிலான [illegible] குழு 3 சந்தேக நபர்களை [illegible] செய்திருந்தனர். இவர்கள் 16, 15 வயதுடைய மாணவர்கள் என பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

விசாரணைகளைத் தொடர்ந்த பொலிஸார், கைது செய்யப்பட்ட மாணவர் ஒருவரின் தந்தையையும் கைது செய்திருந்தனர். இவர்கள் ஏற்கனவே நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் சிறுவர்கள் அனைவரையும் சான்று பெற்ற பாடசாலையில் தடுத்து வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று இவர்கள் நான்கு பேரும் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களிடம் இருந்து மேலும் சில பொருள்களை மீட்க வேண்டிய தேவையிருப்பதால் தொடர்ந்து தடுத்து வைக்க அனுமதிக்குமாறு பொலிஸ் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதையடுத்து 3 மாணவர்களையும் சான்று பெற்ற பாடசாலையில் சேர்க்[illegible] சந்தேக நபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ற-109)

S.K.Broking Institute பதிவு இல.1442

எம்மிடம் வீடு, காணி விற்பனைக்குண்டு திருநெல்வேலி, நல்லூர், கோண்டாவில், இராஜ வீதி, கல்வியங்காடு மற்றும் விற்க,விரும்புபவர்களும் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

077 461 3884, 077 193 3490

(68457) (13.18.19)

பெயர் மாற்றம்

ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த அப்பையா சின்னம்மா ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை அப்பையா பவளம் என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங் களிலும் கையொப்பமிடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(68495) (13.16.18) அப்பையா பவளம்.

வேலை வாய்ப்பு

எமது பிரதான தொழிற்சாலைகளில் ஜேம், பிஸ்கட், பால்மா, யோகட், ஷேம்போ போன்ற பிரிவுகளுக்கு ஆண், பெண்(17-50) வயது உணவு, தங்குமிடம் முற்றிலும் இலவசம் லேபல், பொதியிடல் பிரிவுகளுக்கு சம்பளம் (25000- 40000), கிழமை சம்பளம் பெற்று கொள்ளலாம். நாள் சம்பளம் 1400 OT 150 (8HRS வேலை) முஸ்லிம்களுக்கு விசேட தொழுகை வசதி செய்து தரப்படும் தொடர்பு கொள்ளவும்.

T.P: 072 246 7942, 072 390 7665

ஓர் அன்பான அறிவித்தல்

காளிகோயிலடி, மல்லாகத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை நடராஜா (T N மாஸ்ரர்) ஆகிய நான், எனது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் மிகவும் பணிவுடன் தயவாக வேண்டிக்கொள்வது:

எதிர்வரும் 05.02.2016 வெள்ளிக்கிழமை இடம்பெற இருக்கும் திருமண வைபவத்திற்கும் எனக்கும் எனது மனைவியாருக்கும் எதுவிதமான சம்பந்தமுமோ தொடர்புமோ இல்லை என்பதையும் எங்களுக்காக தாங்கள் செல்ல வேண்டியதில்லை என்பதையும் இத்தால் மிகவும் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

தங்கள் பணிவுள்ள
த.நடராஜாவும் பாரியாரும்.

(68445) (13.15)

பணியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றுக்கு கணக்கு பதியுநர் (பெண்கள்) தேவைப்படுகின்றனர். க.பொ.த உயர்தரப் பிரிவில் கணக்கியலும் வர்த்தகம் கற்றவர்களும் H.N.D.A துறையைப் பூர்த்தி செய்தவர்களும் கணக்கு பதிதலில் அனுபவம் உள்ளவர்களும் தமது சுயவிவரம் அடங்கிய விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு 15.02.2016 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல 5090
C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்

பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் நவீன மாபிள் (Tiles Show room) காட்சியறைக்கு கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

* முகாமையாளர் (Manager)
* விற்பனையாளர் (Salesman)
* காசாளர் (Cashier)

மேற்குறித்த பதவிகளுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கிளிநொச்சி மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. தகுதியும் ஆர்வமும் உடையோர் தங்களது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு 15.02.2016 இக்கு முன் அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 5091
C/o, உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி.23996) (13.15.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீட்டு விழா

யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டு நிறுவனங்களின் கட்டுரைத் தொகுப்பான நிழல் நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 6 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு சுன்னாகம் வாழ்வக செல்லா மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வுகளின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறீ,கரைச்சி பிரதேச செயலர் கோபாலப் பிள்ளை நாகேஸ்வரன் மற்றும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.
வெளியீட்டுரையை முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவ லி ங்கராஜா நிகழ்த்தவுள்ளார்.
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ந-ரி2)

## மின் ஒழுக்கால் கடை எரிந்து நாசம்

யாழ்ப்பாணம். பெப். 4
பருத்தித்துறை,மந்திகை சந்திப் பகுதியில் உள்ள உணவகத்தில் இரவு இடம்பெற்ற மின்சார ஒழுக்கால் 2 லட்சம் ரூபா பெறுமதியான மின்சார உபகரணங்கள் தீயில் கருகிச் சேதமடைந்துள்ளன என பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் இரவு கடையைப் பூட்டிவிட்டு சென்ற உரிமையாளர் நேற்று அதிகாலை கடையைத்திறந்தபோதுபொருள்கள் அனைத்தும் தீயில் எரிந்து காணப்பட்டுள்ளன.
இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பொலிஸார் மின் சுற்றில் ஏற்பட்ட கசிவே இந்தத் தீ விபத்துக்கு காரணம் எனத் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. (ந-107)

## இலவச பயிற்சிக் கருத்தரங்குகள்

சாவகச்சேரி, பெப்.4
இலங்கையின் 68 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் 2016 ஆம் ஆண்டு க.பொ. த. உயர்தரப் பரீட்சையில் தொழில் நுட்பவியல் பாடங்களுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச பயிற்சிக் கருத்தரங்குகளை இன்று மீசாலை மற்றும் கிளிநொச்சியில் நடத்தவுள்ளனர்.
காலை 8.30 மணிக்கு மீசாலை உயர் கலைக் கல்லூரியில் உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல் மாணவர்களுக்கான நிலையறிப் பரீட்சையும் செய்முறைப் பயிற்சிகளும், கிளிநொச்சி வைத்திய சாலைக்கு அருகில் உள்ள லிபாரா கல்வி வள நிலையத்தில் பொறியியல்தொழில் நுட்ப மாணவர்களுக்கான இலத்திரனியல் செயலமர்வும் நடைபெறவுள்ளன.
கிளிநொச்சியில்நடைபெறும் கருத்தரங்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மாணவர்கள் இலவசமாகப் பங்குபற்றலாம் என்று லயன்ஸ் கழக கல்வி அபிவிருத்தி செயற்றிட்ட இணைப்பாளர் லயன் சு. வீரசுதாகரன் அறிவித்துள்ளார். (ந-9)

## வீட்டில் சாராயம் விற்றவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம். பெப். 4
அல்லைப்பிட்டி பகுதியில் 180 மில்லிலீற்றர் கொள்ளவு கொண்ட அரச மதுபானப் போத்தல் ஒன்றை விற்பனை செய்த நபருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
ஊர்காவற்துறை பொலிஸார், ஊர்காவற்றுறை நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சந்தேக நபர் தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து நீதிவான் ஏ.எம்.எம்.றியால் அபராதம் விதித்தார். (ந-107)


### சபிண்டீகரண வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் சிவராசா
கிருஷ்ணவேணி
அன்னை மடியில்
04.05.1951
ஆண்டவன் அடியில்
05.01.2016

கடந்த 05.01.2016 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி சிவராசா கிருஷ்ணவேணி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (04.02.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.
மேலும் அன்னாரது மரணச்செய்தி கேட்டு நேரில்வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலமும் முகநூல் மூலமும் தொடர்புகொண்டு துக்கம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் நேரடியாக வந்து உதவிகளையும் அஞ்சலி அட்டைகளையும் வழங்கியவர்களுக்கும் எமது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

"பிருந்தாவனம்"
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி. (66457)13.17.18
குடும்பத்தினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

வேலுப்பிள்ளை இரத்தினம்
பிறப்பு 20.11.1930
இறப்பு 05.01.2016



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி யோகேஸ்வரி கேதீஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை அமரர் வேலுப்பிள்ளை இரத்தினம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவுதினமான இன்று (04.02.2016) வியாழக்கிழமை அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/மானிப்பாய்
மகளிர் கல்லூரி.

### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர் கனகசபை
பாலசிங்கம்
(முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)
தோற்றம்
08.07.1942
மறைவு
05.01.2016

கடந்த 05.01.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தெய்வம் கனகசபை பாலசிங்கம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் தொடர்ந்து வீட்டுக்கிரியைகள் அவரது இல்லத்திலும் நடைபெறும். 07.02.2016 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர் ஆலயமண்டபத்தில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசன விருந்தும் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
[இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.]
பன்னாலை,
தெல்லிப்பழை.
077 844 9700 குடும்பத்தினர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
20 . 11 . 1930



மறைவு
05 . 01 . 2016

**வேலுப்பிள்ளை இரத்தினம்**

கடந்த 05.01.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் வேலுப்பிள்ளை இரத்தினம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை அதிகாலை 3 மணியளவில் ஆலங்கன்றடி தீர்த்தக்கரையிலும் சபிண்டிகரணக் கிரியைகள் முற்பகல் 10 மணியளவில் அவரது வாரிவளவு இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
மேலும் அவரது மரணச் சடங்கில் நேரடியாக கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் நேரடியாக வந்து உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
வாரிவளவு, காரைநகர்.
குடும்பத்தினர்.

### பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09 . 04 . 1940



சிவன் அடியில்
25 . 01 . 2006

அமரர் விநாசித்தம்பி சோமசுந்தரம்
(கொட்டடிச் சந்தி முன்னாள் பிரபல மரக்காலை உரிமையாளரும் ஸ்தாபகர் சிற்றி ஹாட்வெயார் அன் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)
(திதி : அபரபக்க ஏகாதசி (04.02.2016)

ஆசையாய் எம்மைப் பெற்று வளர்த்து, சிறப்பாய்
அறிவும், பண்பும் புகட்டி, வளமுடன்
வாழ வைத்த எங்கள் அப்பாவே!
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும்
நினைத்தே வாழ்வோம் அப்பா!
தெய்வம் போல் துணையாய் நின்று
நாளெல்லாம் எங்களைக் காப்பீர்கள் அப்பா!
எங்கள் தெய்வத்தின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
நிமலன் திருவடியில் நீங்கள்
சேர்ந்து வாழ வேண்டுகின்றோம்.

D. 1/1, சென்றல் றோட், கொழும்பு 12.
119 பிறவுண் வீதி , யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்புடனேயே பொலிஸாருக்கு காணி வழங்கினார்கள் மக்கள்

## வலி. மேற்கு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பிரதேச பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 4

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் பொலிஸ் நிலையங்களுக்கு மக்கள் விருப்பத்துடனேயே காணிகளை வழங்கியுள்ளதுடன், வாடகையும் பெற்று வருகின்றனர். நாம் அவர்களுடைய காணிகளில் குடியிருப்பதை விரும்பவில்லை என்று ஒருபோதும் தெரிவிக்கப்படவில்லை.- இவ்வாறு பிரதேச பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனினும் பொலிஸார் தமது காணிகளைவிட்டு வெளியேறினால் போதும் என்ற மனநிலையிலேயே தாம் உள்ளனர் என்று பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம் மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இணைப்புக்குழுவின் இணைத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, பிரதேசத்தில் மீள்குடியேற்றப் பகுதிகள் மற்றும் பிற பகுதிகளில் மக்கள் குடியமர்வதற்கு இடையூறாக படைக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காணிகள் எவையும் உண்டா?. அவ்வாறு காணப்படின் அவை எந்தஅடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டன? வாடகை பெறப்படுகின்றன? பிடிக்கப்பட்ட கால அளவு என்பன தொடர்பான கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளிக்கும்போதே பிரதேச பொலிஸ் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

2002ஆம் ஆண்டு முதல் பொது மக்களின் காணிகளை வாடகை அடிப்படையில் பாவனைக்கு உட்படுத்தி வருகின்றோம். மூன்று இடங்கள் இவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு சொந்தமானவர்கள் நாம் அவர்களுடைய நிலப்பரப்பை பயன்படுத்துவதால் இடையூறுகள் காணப்படுவதாகக் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றார்.

இதன்போது முடக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட பிரதேசசெயலகத்தினர்- வட்டு.தென்மேற்கு, வட்டு.வடமேற்கு மற்றும் ஜே/166 கிராம சேவகர் பிரிவு என்பவற்றில் காணிகள் முடக்கப்பட்டுள்ளன. காட்டுப்புலம் திருவடி நிலையப்பகுதியில் கடற்படை ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளும் விடுவிக்கப்பட வேண்டி உள்ளன. இந்தப்பகுதி விடுவிக்கப்படாமையால் பிரதேச மக்களின் மீன்பிடித்தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் காவற்படைகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் தனியாருக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுக. காணிகளுக்கான வாடகையைப் பெற்று பொலிஸாரின் பாவனைக்குக் காணிகளை வழங்குவதற்கு உடன்பாடு உடைய மக்களிடம் இருந்து பொலிஸார் காணிகளைப் பெறட்டும், விரும்பாதவர்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். பொலிஸாருக்கான பகுதிகள் அரசால் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் அங்கே செல்லட்டும். வீடுகளை விடுவிப்பதற்கான கால நிர்ணயமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்- என்று தெரிவித்தார்.

அதையடுத்து இணைத்தலைவர் மாவை. சேனாதிராசா இந்தக்காணிகள் தொடர்பாகவும், அதன் உரிமையாளர்களின் தீர்மானம் தொடர்பாகவும் எழுத்து மூலமான அறிக்கை ஒன்றை இணைப்புக்குழுவுக்கும், கூட்டத்துக்கு வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தார். (ற-ரி5)

## தேர்தல் சவால்கள் தொடர்பில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்ப்பாணம் முகாமையாளர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள தேர்தல் சவால்களும் மாற்றங்களும் என்ற தலைப்பிலான கலந்துரையாடல் நிகழ்வு நாளை மறுதினம் 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கலந்து கொண்டு மேற்படி விடயம் தொடர்பில் கருத்துரைகளை வழங்கவுள்ளார். (ற-ரி2)

## வடக்கு பொலிஸாருக்கு உள்ளக இடமாற்றங்கள்

யாழ்ப்பாணம், பெப். 4

வடமாகாணத்தில், ஒரே பொலிஸ் பிராந்தியத்துள் 3 வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உள்ளக இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களின் பணிப்புக்கு அமைய இந்த இடமாற்றங்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒரே பொலிஸ் பிராந்தியம்,மற்றும் பொலிஸ் நிலையங்களில் தொடர்ச்சியாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றுவதால் இலஞ்சம் பெறுதல், பொறுப்பதிகாரிகளுடன் முரண்படுதல் போன்ற அசாதாரண சம்பவங்க்ள் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதையடுத்து வடமாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களில் உள்ள 46 பொலிஸ் நிலையங்களுக்குள் இந்த இடமாற்றங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பிலான தரவுகள் ஒவ்வொரு பொலிஸ்நிலையத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடப்படுகின்றது. (ற-107)

# உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்படுவோர் தென்மராட்சிப் பிரதேசத்தில் அதிகரிப்பு

சாவகச்சேரி, பெப். 4

தென்மராட்சிப் பிரதேசத்தில் டெங்குத் தொற்று ஓரளவு குறைந்துள்ள போதும், உண்ணிக் காய்ச்சலால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது

கடந்த திங்கட்கிழமை டெங்குத் தொற்றுக்கு உள்ளான 3 பேரும், உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 7 பேரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் பெய்த கடும் மழையால் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின. அதன்போது பற்றைகள் சருகுகள் போன்றவற்றில் காணப்பட்ட உண்ணிகள் வெள்ளத்துடன் குடியிருப்புகளுக்குள்ளும், அதனை அண்டிய பகுதிகளிலும் பெருமளவில் உட்புகுந்துள்ளன. குடியிருப்புகளுக்குள் புகுந்த உண்ணிகள் அங்குள்ளவர்களைக் கடிப்பதால் பெருமளவானோர் பாதிக்கப்படுகின்றனர் என சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - கடந்த மாதம் (ஜனவரி) 53 பேர் உண்ணிக் காய்ச்சலுக்கும், 80க்கும் மேற்பட்டோர் டெங்குத்தொற்றுக்கும் உள்ளாகியுள்ளனர். கடந்த 20 ஆம் திகதிக்குப்பின்னர் டெங்குத் தொற்று குறைந்த நிலையில் காணப்படுகின்ற போதிலும், உண்ணிக் காய்ச்சலின் தாக்கம் அதிகமாக உள்ளது என்று தெரிவிக்கப்படு கின்றது.

குடியிருப்பாளர்கள் குளிக்கும் வேளைகளில் உண்ணிகள் மறைந்திருக்கக்கூடிய உடற்பாகங்களை சவர்க்காரமிட்டு துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (ற-9)

# ஜனவரி 8 ஏற்பட்ட திடீர்த் திருப்பம் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது

## மாவை சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

அச்சுவேலி, பெப்.4

இலங்கை அரசியலில் கடந்த வருடம் ஜனவரி 8 ஆம் திகதி ஏற்பட்ட திடீர்த் திருப்பம் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இவை தமிழர்களின் நிலங்கள் விடுவிப்பு, மீள் குடியேற்றம், பாதிப்புக்களுக்கான நிவாரணம், புதிய அரசியல் அமைப்பு என்பவற்றை உள்ளடக்கியதாக இருப்பதோடு, இனப்பிரச்சினைக்கும் தீர்வு ஏற்படலாம் என்ற எதிர் பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த வகையிலேயே அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இணைத் தலைமையை ஏற்று நடத்துகின்றோம் - இவ்வாறு கூறினார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா.

வலி.கிழக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இணைத்தலைவர் என்ற வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜனும் கலந்து கொண்டார். இணைத்தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகிய இருவரும் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபனின் முன்னிலைப்படுத்தலுடன் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் இணைத்தலைமை வகித்து உரையாற்றும்போது மாவை சேனாதிராசா மேற் கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் குறித்த பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் குறைபாடுகளைக் கண்டறிந்து சீர்ப்படுத்துவதில் மிகமுக்கியமான அமர்வுகளாகும். அதில் கலந்து கொள்ளும் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் அமைப்புக்களின் நிர்வாகிகள், கலந்து கொண்டோம், கருத்துக்களை முன்வைத்தோம் என்று இல்லாமல், தமது கோரிக்கைகள் அபிவிருத்தி முன்னெடுப்புக்களை எழுத்து வடிவில் சமர்ப்பிக்க வேண்டும். அப்பொழுது தான் அவற்றின் செயற்பாட்டு நிலைதொடர்பாக அடுத்த கூட்டத்தில் முடிவுகள் எட்டப்படும்.

போரால் பாதிக்கப்பட்ட பகுதியின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புப் பணிகளில் அரசு கூறிய வாக்குறுதிக்கு அமைய நடக்க முற்படுகின்றது. அவற்றில் சில தடங்கல், தாமதங்களும் ஏற்படாமல் இல்லை. ஜி.20 நாடுகள், ஜி.07 நாடுகள் மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் உதவி வழங்குவதற்கு முன்வந்துள்ளன. இந்த நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் இலங்கைக்கு வரும்போது தமிழ்த் தலைவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடுகின்றனர். அப்போது நாங்கள் தமிழர்களின் பிரச்சினை மற்றும் அதற்கான தீர்வுகள் என்பன பற்றிக் கலந்துரையாடி எமது கோரிக்கையை சமர்ப்பிப்பதுடன் எமது பிரதேசத்துக்கான அபிவிருத்தி முன்மொழிவுகளையும் சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எமது அரசியல் பிரச்சினைக்கு தீர்வு வேண்டும். அதேநேரம் எமது பிரதேசம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்பதில் சர்வதேசரீதியிலான அழுத்தங்களும் இலங்கை அரசுக்கு வலுத்து வருகின்றது. இந்தச்சூழ்நிலையை நாங்களும் பொருத்தமான முறையில் பயன்படுத்தி வருகின்றோம் - என்றார். (ற-11)

# வீதிகளை வர்த்தமானியில் பிரசுரிக்குமாறு அறிவுறுத்து

## உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு வடமாகாண முதலமைச்சர் வழங்கினார்

யாழ்ப்பாணம், பெப். 4

வடமாகாணத்தில் உள்ள 30 பிரதேச சபைகளும் - 3 நகர சபைகளும் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் வீதிகளையும், பாதைகளையும் முறையாக வர்த்தமானியில் பிரசுரித்து அதன் விவரங்களை உள்ளூராட்சி அமைச்சருக்கு அறிக்கையிட வேண்டும் - இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வடக்கில் உள்ள உள்ளூராட்சிசபைகளின் செயலாளர்களுக்கும் கண்டிப்பான உத்தரவை வழங்கியுள்ளார்.

வடமாகாணத்தில் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் வீதி வலையமைப்புத் திட்டம், அதற்கான வரைபடம், மதிப்பீடு, நீள - அகலம், முன்னுரிமை என வகைப்படுத்தப்பட்டது.

எனினும் இதுவரை பிரதேச சபை, நகரசபை என்பவை சட்டங்கள், கட்டளைச் சட்டங்களுக்கு அமைவாக அவற்றை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை.

எனவே, உள்ளூராட்சி அமைச்சரின் கட்டளையை நிறை வேற்றும் வகையில் தங்கள் அதிகார எல்லைக்குள் அனைத்து பிரதேச சபைகள், நகரசபைகளின் வீதிகள் பற்றிய விவரங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

இதன் பிரகாரம் ஜனவரி 11, பெப்ரவரி 15 வரை வீதிகளினது எல்லைகளை அடையாளமிடுதல், பெப்ரவரி 16 முதல் மார்ச் 15 வரை சகல வீதிகளுக்கும் வரைபடம் தயாரித்தல், மார்ச் 16 முதல் மார்ச் 23 வரை வீதிகளின் நிரலொன்றை தயார் செய்தல், இறுதியாக மார்ச் 31 முன்னர் அதனை வர்த்தமானியில் பிரசுரித்தல் வேண்டும் என சபை செயலாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. (ற-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளை கலைமகள் வித்தியாலய வகுப்பறைகளைச் சூழ சேறும் சகதியும்

## கிளம்பும் துர்நாற்றத்தைச் சகிக்க முடியாமல் ஊதுபத்தி கொளுத்தி கல்வி கற்கும் மாணவர்கள்

கிளிநொச்சி, பெப்.4

முள்ளியவளைகலைமகள் வித்தியாலயத்தில் வகுப்பறைகளுக்கு மிக அண்மையில் தேங்கியுள்ள நீரிலிருந்தும், சுற்றுப்புறச் சூழலில் இருந்து கிளம்பும் துர்நாற்றத்தாலும் மாணவர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். வகுப்பறைகளில் ஊதுபத்தி கொளுத்தியே கற்றல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்று பெற்றோர்கள் குற்றஞ்சாட்டினர். இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மழை பெய்து பல மாதங்கள் கடந்துவிட்ட போதும் பாடசாலை வளாகம் எங்கும் சேறும் சகதியுமாகவும் சில இடங்களில் பாசி படிந்தும் காணப்படுகின்றது. இதனால் நுளம்புகள் பெருக்கெடுக்கும் அபாயமும் உள்ளது.

எனவே, அங்கு கல்வி கற்கும் எமது பிள்ளைகளுக்கு நோய்த் தாக்கம் ஏற் படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன என்றும் பெற்றோர்கள்கவலைவெளியிட்டுள்ளனர்.







பாடசாலையின்தற்காலிக கொட்டிலில் காணப்படும் வகுப்பறைகளுக்கு அருகில் இந்த நீர் தேங்கியுள்ளதுடன் நீர் மட்டமும் வகுப்பறை களின் நில மட்டமும் ஒன்றாகவே உள்ளன. இதனால் மாணவர்களுக்கு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது.

பாடசாலையில் இரண்டு மலசல கூடத் தொகுதிகள் உள்ளன. இவற்றில் ஒரு தொகுதி முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையில்உள்ளதுடன்அடுத்தமலசலகூடத்தொகுதி ஓரளவு பயன்படுத்தக் கூடிய நிலையில் உள்ளது. அவையும் வகுப்பறைக்கு அண்மையில் உள்ளன. அவற்றின்துர்நாற்றமும் தாங்க முடியாதுள்ளது என்றும் பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

பாடசாலையில் மாணவர்களின் தொகைக்கு ஏற்பவோ, வகுப்புக்களின் எண்ணிக்கைக்கு ஏற்பவோ கட்டட வளங்களும், பௌதிக வளங்களும் இல்லை. எமது பிள்ளைகள் சீராக கல்வி கற்பதற்குரிய சூழலை அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும் பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பாடசாலை அதிபரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது; இவ்வாறான துர்நாற்றத்தால் மாணவர்கள் ஊதுபத்தி கொளுத்தி கல்வி கற்பது உண்மை எனவும் தற்போது குறித்த நீர்த் தேக்கங்களில் குளோரின்கள் தூவப்பட்டு நிலைமையைகட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் குறித்த நீர்த்தேக்கத்தை பாடசாலை வளாகத்தில் இருந்துவெளியில் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் வலயக் கல்விப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, பாடசாலை வளாகத்தினுள் நீர் தேங்கியுள்ள பகுதிகளில் நுளம்புகள் பெருகாமல் இருப்பதற்காக நீரின் மேல் மண்ணெண்ணெய் ஊற்றப்படுகின்றது. அதனால் நுளம்புகளின் உற்பத்தி கட்டுப்படுத்தப் படுகின்றது என்றும் தெரிவித்தனர்.

மணலைக் கொட்டுவதன் மூலமோ, அல்லது வேறு எந்த வழிகளிலோ இட்டு நீர் தேங்கியுள்ள பகுதிகளை நிரப்பிவிடமுடியாது.

அது தாழ்நிலப் பிரதேசம். தற்போது குறித்த பாடசாலைக்கு இரண்டு புதிய கட்டடங்கள் கட்டப்பட உள்ளன. அவை கட்டப்படும் போது, இந்தப் பிரச்சினைக்கான தீர்வுகளும் எட்டப்படும் - என்றும் தெரிவித்தனர். (ஞ-21,101)



# கிளி. நிரந்தர பஸ் நிலையம் டிப்போச் சந்தியில் அமையும்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தீர்மானம்

கிளிநொச்சி, பெப்.4

கிளிநொச்சிக்கான நிரந்தர பஸ் நிலையம், கிளிநொச்சி டிப்போச்சந்தியில்ஏ-9வீதிக்கு அண்மையாக அமைக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட செய லகத்தில் இடம் பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன்போது கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், பஸ்நிலையம் அமைப்பதற்கான நிதி கிடைத்துள்ளது. தாமதப்படுத்தாது நிர்மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக் கப்படும் என்று தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டதிலேயே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நீண்ட காலமாக நிரந்தர பஸ் நிலையம் எதுவும் இல்லாமல் கிளிநொச்சி மாவட்ட மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

தற்போது பஸ் நிலையம் அமைப்பதற்கான நிதி கிடைத்துள்ளது. அதற்குகுறைந்தது 4 ஏக்கர் காணி தேவை யாகவுள்ளது.

எனினும் 2 ஏக்கர் காணியே ஒதுக்கப்பட்டுள் ளது. மேலதிகமாக 2 ஏக்கர் காணி விடுவிக்கப்பட வேண் டும் என்று வடக்கு போக்குவரத்து அமைச்சர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அதையடுத்து டிப்போ சந்தியில் ஏற்கனவே பஸ் நிலையத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியுடன் மேலும் இரு ஏக்கர் காணி ஒதுக்கித்தரப்படும் என்று இணைத் தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது.

எனினும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட பிரசைகள்குழுவினர்டிப்போச் சந்திக்கு அருகில் பஸ் நிலையம் அமைக்கப்படுமானால் அங்குள்ள மருத மரங்கள் உட்பட இயற்கை வளங்கள் அழிவடையும் என்று குறிப்பிட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் இணைத் தலைவர்களுக்கும், பிரசைகள் குழுவுக்கும் இடையே நீண்ட விவாதம் நடைபெற்றது. இறுதியில் கருத்துத்தெரிவித்த இணைத் தலைவர்கள், எல்லோருடைய கருத்துக்கும் செவிசாய்ப்பதாகவும் இதற்கு வேறு வழி இல்லை, கிளிநொச்சியின் நிரந்தர பஸ் நிலையம் தீர்மானிக்கப்பட்டுள்ள இடத்தில் அமைக்கப்படும் - என்று தெரிவித்தனர். (ஞ-21)

# திருட்டு மின் பெறுவோர் வவுனியாவில் அதிகரிப்பு

## 30 பேருக்கு எதிராக அண்மையில் மின்சார சபை சட்ட நடவடிக்கை

வவுனியா, பெப். 4

வவுனியா மாவட்டத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ள மின்சார சபையினர் அண்மையில் இது தொடர்பில் 30 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த வவுனியா மின்சார சபை அத்தியட்சகர், வவுனியா மாவட்டத்தில் 10 ஆயிரம் இலவச மின் இணைப்புக்களை பொதுமக்களுக்கு வழங்கியுள்ளோம். இலகு கடனடிப்படையிலும் தற்போது மின்சார இணைப்பை பொது மக்களுக்கு வழங்கி வருகின்றோம். இந்த நிலையில் பொது மக்கள் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெறுவது தவறு - என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த இரண்டு தினங்களாக கொழும்பிலிருந்து வந்த மின்சார சபையின் விசேட விசாரணைக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத மின்சாரம் பெறுவோரைக் கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் 25 தொடக்கம் 30 பேரின் மீது சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுதண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து மின்வயர், மின் குமிழ்கள் என்பவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த இரண்டு தினங்களாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் கண்ணாட்டி, கணேசபுரம் பகுதியில் சட்ட விரோத மின்சாரம் பெற்ற அதிகளவானோர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். சட்ட நடவ டிக்கைக்கு உட்படுத்தப்பட்டோர் 10 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகத் தண்டம் செலுத்தியுள்ளனர்.

எமது வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்குப் பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது - என்றார். (ஞ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் பாவனையை உடனடியாகக் கட்டுப்படுத்துக

## உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கை மூலம் சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.4
பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையால்நேரடியாகவும், மறைமுகமாகவும் சுற்றாடல் மற்றும் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் குறைப்பதற்கான உத்தேச வேலைத் திட்டங்களை உடன் செயற்படுத்துமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கை மூலம் சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் அறிவித்துள்ளது.



இதுகுறித்து அமைச்சின் செயலாளர் எச்.ரி. கமல் பத்மஶ்ரீ விடுத்துள்ள அறிவுறுத்தலில்–
சகல மாகாண சபைகளின் அதிகார எல்லைக்குட்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள சகல அரச நிறுவனங்களிலும் தற்போது தடை செய்யப்பட்டுள்ள 20 மைக்ரோ கிராமுக்கு குறைந்த பொலித்தீன் பைகள் மற்றும் உணவுகளை பொதி செய்யும் தாள்கள் ஆகியவற்றை கடந்த முதலாம் திகதி முதல் செயற்பாட்டுக்கு வரும் வகையில் தடைசெய்வது மற்றும் அந்த நிறுவனங்களுக்குள் மீள்சுழற்சி செய்வது போன்றவையைத் தடை செய்தல்.
நிறுவனத்தின் சுற்றாடலுக்குள் 20 மைக்ரோ கிராமுக்கு கூடிய பொலித்தீன் பைகள் ஏனைய பொருள்கள் மற்றும் பிளாஸ்ரிக் ஆகியவற்றை எடுத்துச் செல்வது தொடர்பாக முடிந்த அளவு நிர்வகித்தல் மற்றும் அவ்வாறான அளவுள்ள பொருள்களை விற்பனை செய்வதை தடுத்து நிறுத்தி நிர்வகித்தல்.
சகல மாகாண சபைகளின் அதிகார எல்லைக்குட்பட்ட அரச நிறுவனங்களிலும் உணவுப் பொதிகளைக் கொண்டுவரும்போது பிளாஸ்ரிக், பொலித்தீன் பைகள் மற்றும் உணவுகளை பொதி செய்யும் தாள்களுக்குப் பதிலாக மாற்றுத் திட்ட முறைகளைக் கையாளுதல் அல்லது தரப்படி மீள்சுழற்சி செய்து பாவித்தல் அல்லது உக்கி அழிந்து போகும் முறைமைகளைக் கையாளுதல் பற்றி பணிக்குழுவை ஊக்கு வித்தல் மற்றும் பொறுப்புடன் நடந்து கொள்வதற்கு ஆர்வமூட் டல்.
பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்களை எரிக்கும்போது ஏற்படும் வாயுக்களான காபனீரொக்சைட் டயொக்சீன் மற்றும் பியுரான் ஆகியவை மனித சுகாதாரத்துக்கு மிகவும் பொருத்தமற்றவையாக இருப்பதால் அந்தப் பொருள்களின் வாயுக்களை சுற்றாடலில்பரவவிடாமல்அவற்றை மீள்சுழற்சி நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ஒழுங்கமைக்கப்படும் அரசியல் மற்றும் மத ரீதியான கூட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையைப் புறந்தள்ளி விட்டு, அதற்காக மாற்று அலங்கார வழி முறைகளை பயன்படுத்த வலியுறுத்துதல் – போன்ற விடயங்களை இறுக்கமாகச் செயற்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-9)

## வணிகர் மன்ற வருடாந்த பொதுக் கூட்டம்

சாவகச்சேரி, பெப்.4
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 37 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
மன்றத் தலைவர் வ.ஶ்ரீபிரகாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.
நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கல், மன்றத்தின் விதவைநிதியம், ஊனமுற்றோர் நிதியம், மன்ற அங்கத்தவர்களின் சேமிப்புத் திட்டத்தின் முன்னிலையில் நிற்பவர்களை கௌரவித்தல், மன்றத்தில் அங்கத்தவர்களாக இணைந்து 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த வெள்ளி விழா நாயகர்களைக் கௌரவித்தல், நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு போன்றவை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)



காரைநகரில் இருந்து வட்டுக்கோட்டை வழியாக யாழ்ப்பாணம் செல்லும் குறுகிய வழிப்பாதையான 784 பஸ் இலக்க வழித்தடப் பாதையில் அமைந்துள்ள மதகு ஒன்று உடைந்ததால் நேற்றுமுன்தினம் குறித்த வீதியின் போக்குவரத்து தடைப்பட்டது. குறித்த வீதிவழியாக கருங்கற்களை ஏற்றிக்கொண்டு வந்த பார ஊர்தி ஒன்று குறித்த மதகுக்கு மேல் சென்றபோது மதகு உடைந்துள்ளது. இதனால் பாரஊர்தியின் பின் சக்கரம் மதகுக்குள் மாட்டி பார ஊர்தியும் சிறிய சேதங்களுக்கு உள்ளானது. இதை அடுத்து குறித்த வீதியின் போக்குவரத்து வட்டுக்கோட்டை போக்குவரத்துப் பொலிஸாரால் முற்றாகத் தடுக்கப்பட்டது. (ற-21)

## மீனவர் சங்கத்தை வளலாயில் இயக்க நடவடிக்கை எடுக்குக

### மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.4
திக்கம் பகுதியில் இயங்கும் வளலாய்மீனவசங்கத்தைமீளவும்வளலாயில் இயங்கவைப்பதன்மூலம் இந்தப் பகுதி மீனவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள்எனவளலாய் வடக்கு மீனவர்கள் தெரிவித்தனர்.
68 மீனவக்குடும்பங்கள் வளலாய் வடக்கில் மீள்குடியமர்ந்து ஒரு வருடம் நிறைவடைந்துள்ள போதிலும் மீனவ சங்கம் அங்கு இயங்காததால் தாம் பல் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றோம் என்றும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.
கடந்த வருடம் நோர்வே அரசின் ஊடாக மீனவர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட இருந்தும், மீனவ சங்கம் இயங்கவில்லை என சில அதிகாரிகளால் காரணம் காட்டப்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து புதிய நிர்வாகத்தை மீள் குடியேறிய வளலாயில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-107)

## திருட்டு முயற்சியை விட்டு தப்பியோடினான் திருடன்

### அயல்வீட்டுக்காரர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதால்

யாழ்ப்பாணம், பெப்.4
மானிப்பாய் முத்துத்தம்பி வீதியில் உள்ள வீடொன்றில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற திருட்டு முயற்சி அயல் வீட்டுக் காரர்களினதும், பொலிஸாரினதும் துரித முயற்சியால் முறியடிக்கப்பட் டுள்ளது.
அதிகாலை 3 மணியளவில் குறித்த வீட்டுக்குள் திருடன் நுழைவதை இயற்கைக் கடன் கழிக்கச் சென்ற அயல் வீட்டுக்காரர் கண்டுள்ளார். அவர் உடனடியாக குறித்த வீட்டிலிருந்தவர்களுக்கு தொலை பேசி மூலம் அழைப்பெடுத்துள்ளார். ஆயினும் வீட்டிலிருந்தவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததால் கண் விழிக்கவில்லை.
அதையடுத்து அவர் உடனடியாக மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்துள்ளார். உடனடியாக சம்பவ இடத்துக்குப் பொலிஸார் ஜீப்பில் வந்துள்ளனர். அதையடுத்து திருடன் தப்பியோடியுள்ளான்.
திருடனைப் பொலிஸார் துரத்திச் சென்றபோதும், திருடனைப் பிடிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-107)

## லூர்த்து மாதா வருடாந்த உற்சவம்

சாவகச்சேரி, பெப்.4
மட்டுவில் வடக்கு, லூர்த்து மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
ஆலய உற்சவம் சாவகச்சேரிப் பங்குத் தந்தை வண. பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.
ஆலய உற்சவத்தின் விசேட பூசை வழிபாடுகள் இன்று வியாழக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளன. உற்சவத்தையொட்டி ஆலயச் சூழல் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. (ற-131)

## கஞ்சா கலந்த பீடியுடன் நால்வர் கைது

யாழ்ப்பாணம், பெப்.4
கஞ்சா கலந்த பீடியுடன் நான்கு பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்கள் பயணித்த ஓட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும் அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
உடுப்பிட்டிப் பகுதியில் இருந்து வந்த குறித்த ஓட்டோவை ஆவரங்கால் பகுதியில் இரவுக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மறித்துச் சோதனையிட்டனர். அதன்போது சாரதியின்உடைமையில்இருந்த நான்கு பீடிகளைப் பொலிஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-107)

## போதையில் சாரத்தியம் மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், பெப். 4
மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவருக்கு தலா 12ஆயிரம் ரூபா அபராதம் விதித்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார், அவர்கள் மூவரையும் 50 மணித்தியாலங்கள் சமுதாயம் சார் சீர்திருத்தப் பணியில் உட்படுத்துமாறு சமுதாயம் சார் சீர்திருத்த அதிகாரிக்கு உத்தரவிட்டார். பருத்தித்துறை போக்குவரத்துப் பொலிஸார் தாக்கல் செய்த வழக்குகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் போதே நீதிபதி அபராதத்துடன் கூடிய சமுதாயம் சார் சீர் திருத்தப் பணிக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார். (ற-107)

## கஞ்சா நுகர்ந்த இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.4
காரைநகர் மானிப்பாய் வீதியில் அதிகாலை 5 மணியளவில் கஞ்சா நுகர்ந்த இருவருக்கு தலா 6ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது மல்லாகம் நீதிமன்று.
கொழும்பில் இருந்து வந்திருந்த குறித்த இருவரும், அதிகாலை காரைநகர் செல்வதற்காக பஸ்ஸுக்குக் காத்திருந்துள்ளனர்.
பஸ் வராததை அடுத்து இருவரும் 0.8 மில்லிகிராம் கஞ்சாவை பீடியில் கலந்து நுகர முற்பட்டுள்ளனர். இதன் போது அதிகாலை ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலிஸார் இருவரையும் கைது செய்திருந்தனர். (ற-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைரியம் இருக்குமானால் அரசு ஐ.எஸ். குறித்து விசாரிக்கட்டும்

## சவால் விடுகின்றது பொதுபல சேனா

கொழும்பு, பெப்.4

தைரியம் இருந்தால் அரசு ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பு சவால் விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, பொதுபலசேனா அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே இவ்வாறு சவால் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைப் பற்றியும் ஏனைய தீவிரவாத அமைப்புகள் பற்றியும் தேடியதை விட, இந்த அரசு ஞானசாரதேரர் பற்றி ஆராய்ந்து வருகின்றது. விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் தொடர்பில் பொலிஸாரும், பிரதமரும் முரண்பாடான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். ஆனால், ஞானசார தேரர் நீதிமன்றை அவமரியாதை செய்தாரா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

இந்த நல்லாட்சி அரசுக்கு முதுகெலும்பு இருந்தால் பௌத்த பிக்குகளைத் துரத்தாமல், ஐ.எஸ். தீவிரவாதிகள் பற்றி விசாரணை செய்யட்டும்.

> “நல்லாட்சி அரசுக்கு முதுகெலும்பு இருந்தால் பௌத்த பிக்குகளைத் துரத்தாமல், ஐ.எஸ். தீவிர வாதிகள் பற்றி விசாரணை செய்யட்டும்.”

ஞானசார தேரர் தனக்காக அன்றி, இனம், மதம், மொழி மற்றும் படைவீரர்கள் பற்றியே குரல்கொடுத்து வந்தார். அவர் மக்கள் முன் எடுத்துச்செல்ல முயற்சித்த எண்ணக் கருவை நாம் அமைதியான முறையில் எடுத்துச் செல்ல வேண்டும். பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோருக்கு எதிராக நாம் போராட்டம் நடத்தவில்லை. நாட்டையும், இனத்தையும், மதத்தையும் பாதுகாக்கும் நோக்கிலேயே போராடுகின்றோம். எமது போராட்டத்தின் நோக்கம் மகிந்தவுக்கு ஆதரவான போராட்டமல்ல, படைவீரர்களை பாதுகாப்பதே எமது நோக்கமாக அமைந்துள்ளது. நல்லாட்சி அரசு படை வீரர்களை மறந்தாலும் எம்மால் அவ்வாறு இருக்க முடியாது- என்றார். (ற)

# ‘சிகா’ வைரஸ் குறித்து இலங்கை கடும் கவனம்

கொழும்பு, பெப்.4

உலகளாவிய ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் சிகா வைரஸ் தொற்றுக் குறித்து இலங்கை கூடுதல் அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், சகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் பாலித மகிபால இவ்வாறு தெரிவித்தார்.

சிகா வைரஸ் நாட்டில் பரவாமல் இருப்பதற்கு அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன என்று தெரிவித்த அவர், குறித்த வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் பற்றியும் தெளிவுபடுத்தினார்.

குறித்த வைரஸ் தாக்கியவுடன் உடல் வலியுடன் சேர்ந்த காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. டெங்கு அல்லது சிக்கன் குனயா ஆகிய நோய்த் தாக்கங்களைப் போன்ற உபாதைகள் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உடலில் தோல் அரிப்பு மற்றும் கண் சிவத்தல் போன்ற அறிகுறிகளும் ஏற்படும். ஐந்து பேரில் ஒருவருக்கே இந்த அறிகுறிகள் தென்படும். பொதுவான உபாதைகளையே அது ஏற்படுத்தும் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித மஹிபால மேலும் தெரிவித்தார்.

நுளம்பால் பரவும் இந்த நோய், இன்று உலகளாவிய ரீதியில் பெரிய அச்சுறுத்தலாக மாறிவருகின்றது. பொதுவாக கருவிலுள்ள குழந்தைகளையே இந்த நோய் அதிகமாகத் தாக்குவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. (ற)

## யோசிதவை பார்வையிட வருவோருக்கு கட்டுப்பாடு

கொழும்பு, பெப்.4

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்சவின் புதல்வர் யோசிதராஜபக்சவைப்பார்வையிட வருபவர்களுக்கு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை கட்டுப்பாடுகளை விதித்துள் ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்படவில்லை.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள யோசித ராஜபக்சவைப் பார்த்துநலன் அறியும்நோக்கில் கடந்த சில தினங்களாக பெரும் எண்ணிக்கையானோர் சிறைச்சாலைக்குச் சென்றுள்ளனர்.

தற்போதுவிதிக்கப்பட்டுள்ளகட்டுப்பாடுகள் காரணமாக யோசித ராஜபக்சவை ஒரு நாளில் மூன்று பேர் மாத்திரமே பார்வையிட முடியும் என சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் துஷார உப்புல்தெனிய தெரிவித்துள்ளார்.

யோசித ராஜபக்சவைக் காண நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப்பெரும்பாலானோர்சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்தனர். அவர்களில், நாடாளுமன்றஉறுப்பினர்களைத் தவிர ஏனையோர் சிறைச்சாலை அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். (ற)

# அரச சாட்சியாளர் பற்றிய தகவல்கள் ஏதும் தெரியாது

## சஜின்வாஸ் குணவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, பெப்.4

அரச சாட்சியாளர் பற்றிய தகவல்கள் குறித்து எதுவும் தெரியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வர்ஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சஜின் வாஸ் குணவர்த்தன அரச தரப்பு சாட்சியாளராக வழக்குகளில்சாட்சியமளிப்பார்எனஅண்மையில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்ட கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர்கள் சஜின்வாஸிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்குப் பதிலளித்த சஜின் வாஸ்–

என்னை அரச சாட்சியாளராக வழக்கு விசாரணைகளில் பயன்படுத்த உள்ளதாக பல்வேறு தரப்பினர் தெரிவிக்கின்றனர். எனினும் இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

அரச தரப்புச் சாட்சியாளராக மாறியிருந்தால் இவ்வாறு வழக்குகளில் முன்னிலையாக நேரிட்டிருக்காது.

இலஞ்ச ஊழல் மோசடி தொடர்பிலான வழக்கு விசாரணை ஒன்றில் முன்னிலையாகவே நான் நீதிமன்றம் வந்திருக்கின்றேன் - என்று தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கான சொத்து பொறுப்பு விவரங்களை வெளியிடவில்லை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பிலான விசாரணைளுக்காகசஜின்வாஸ்குணவர்த்தன நீதிமன்றம் சென்றிருந்தார்.

அதேவேளை, சஜின்வாஸ் குணவர்த்தனவுக்கு அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர் என்று கடந்த காலங்களில் செய்தி வெளியாகியிருந்தது. (ற)

# இயற்கை வளங்களை நேசிக்கப் பழக வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

இயற்கை வளங்களுக்கு ஏற்படுத்தப்படுகின்ற அழிவுகள் காரணமாக இன்று உலகின் சில நகரங்களில் வாழும் மக்கள் ஒட்சிசன் வாயு அடங்கிய பொதியை தோளில் சுமந்து செல்ல வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் – என்று தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய விழா சிலாபம், பம்பல கடற்றொழில் மத்திய நிலையத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

உலகசதுப்புநிலதினத்தைநினைவு கூரும் வகையில் ஜனாதிபதி இதன்போதுமரக்கன்றொன்றை நட்டதுடன், உலக சதுப்புநில தின நினைவு முத்திரை ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

அங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி -

பல்வேறு கடத்தல்களில் ஈடுபடும்வர்த்தகர்கள் இயற்கையை நேசிக்காமல் பணத்தை நேசிப்பவர்கள். அவர்களில்சிலர்இயற்கை வளங்களை அழிக்கின்றனர்.

எமது நாட்டின் அரசியல் தலைமைகள், தேசிய மற்றும் பிரதேச மட்ட்த்திலுள்ள அனைத்து அரச அதிகாரிகள் போன்றே பாடசாலை மாணவர்கள், மக்கள் அனைவரும் இந்த விடயத்தில் புரிந்துணர்வோடு இலக்குகளை அடைய வேண்டியது அவசியமாகும். என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற)

# சுதந்திர தின நிகழ்வுக்கு அழைத்தாலும் போகேன்

## மகிந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

இலங்கையின் 68ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்துக்கான அனைத்து முன்னாயத்தங்களும் பூர்த்தியாகும் நிலையில், நிகழ்வுக்கு இதுவரை தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாரஹேன்பிட்ட அபயராம விகாரையில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அழைத்தாலும் செல்லமாட்டேன் என்றும் மகிந்த குறிப்பிட்டுள்ளதுடன், ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினரும் சுதந்திர தின நிகழ்வில் பங்குகொள்ள மாட்டார்கள் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய அரசு ராஜபக்ச குடும்பத்தின் அனைவரையும் பழிவாங்க எத்தனித்து வருகின்றது. பழிவாங்கல் தற்போது எல்லை மீறிச் செல்கின்றது என்று குறிப்பிட்ட மகிந்த, சுதந்திர தினத்தைக் கொண்டாடும் அளவுக்கு எதிரணியினருக்கு இந்த நாட்டில் சுதந்திரம் உண்டா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

பிரதமர்ரணில்விக்கிரமசிங்கவின் கட்டளைகளுக்கு இணங்க செயற்படும்நிதிக்குற்றவிசாரணைபிரிவை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் மகிந்த தெரிவித்துள்ளார்.

இந்தியாவை மகிழ்ச்சிப்படுத்தவே தேசிய கீதத்தை சுதந்திர தின நிகழ்வில் தமிழில் பாடவைக்க முயற்சிக்கின்றனர். எதிர்காலத்தில் அரபு மொழியிலும் தேசிய கீதத்தை பாடவைப்பார்கள் என்றும் அவர் சாடியுள்ளார். (ற)

# யோசிதவின் கைது கவலையளிக்கிறது

## இராஜாங்க அமைச்சர் டிலான் கூறுகிறார்

கொழும்பு, பெப்.4

மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வரான யோசித ராஜபக்ச கைது செய்யப்பட்டுள்ளமை தமக்கு கவலையளிக்கின்றது என்று இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பசில் ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நண்பர் என்பதால் அவர் கைது செய்யப்பட்டும் விளக்கமறியலில் வைக்கப்படவில்லை எனவும், கொழும்பிலுள்ள வைத்தியசாலையொன்றில் மூன்று மாதகாலமாக சிகிச்சை பெற்று வந்த நிலையில் , அவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

பிரேமலால் ஜயசேகர பிரதி அமைச்சராக இருந்தும், அவர் கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் இருந்தார். குமார் குணரட்ணம் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் விமல் வீரவன்சவும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்ட போதிலும், பிரதமரின் தலையீட்டால் வெளியே வந்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவுக்கு எதிரான விடயங்களில் சட்டம் செயற்பட்ட விதம் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் முன்வைக்கப்பட்டதா என்பது மர்மமாகவே உள்ளது - என்றும் தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளைக் கண்டறிந்து தண்டனை வழங்க வேண்டும்

## அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

அன்றும் இன்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரே நிலைப்பாட்டில்தான் உள்ளது. உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்; குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. உண்மைகளைக் கண்டறிய சர்வதேச தொழில்நுட்ப உதவி அவசியமாகும். கடந்த அரசின் காலத்திலும் சர்வதேச உதவிகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இது ஒன்றும் புதிய விடயமல்ல. - இவ்வாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.



நல்லிணக்கம் நோக்கிப் பயணிக்கும்போதுஅனைத்து மக்களையும் ஒன்றிணைத்தே முன்னோக்கிச் செல்லமுடியும். - என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசதகவல்திணைக்களத்தில்நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்வரும் 6 ஆம் திகதி இலங்கை வருகின்றார். இது ஒன்றும் புது விடயம் அல்ல. இதற்கு முன்னரும் பலர் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளனர். போர்க் காலத்தில் லூஸியா வந்தார். அவர் வடக்குக்கும் சென்றார். நவநீதம்பிள்ளை வந்தார். அவரும் நாட்டின் பல பகுதிகளுக்குச்சென்றார். அதற்கு நாங்கள்தான் நிகழ்சிகளைத் தயாரித்திருந்தோம்.

அன்றும் இன்றும் நாங்கள் ஒரே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றோம். கடந்த காலங்களில் தெளிவான நிலைப்பாட்டில் இருந்ததுபோல் எதிர்வரும் 6 ஆம் திகதியும் இருப்போம். மனித உரிமைகள் ஆணையகத்தை இங்கு ஸ்தாபிக்குமாறு தெரிவித்தார்கள். நாங்கள் முடியாது என்றோம். இரு பிரதான கட்சிகளும் பேசி தெளிவான நிலைப்பாட்டை முன்வைப்போம். கடந்த காலங்கள்போல் தவறுகள் இடம் பெறாது. சர்வதேச நீதிபதிகளின் உதவியை நாடப்போவதில்லை என்று ஜனாதிபதி தெளிவாகக் கூறியுள்ளார்.

விசாரணைகள் மேற்கொள்ள சர்வதேச தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். எமது நாட்டில் போதியளவு தொழில்நுட்ப வசதிகள் இல்லை. கடந்த அரசின் காலத்தில் உடலகம மற்றும் பரணகம ஆணைக்குழுக்களின்போது சர்வதேச நீதிபதிகளின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் அச்சப்படவேண்டியதில்லை. சிலர் மைத்திரி நாட்டைக் காட்டிக்கொடுக்கப்போகின்றார், சர்வதேசத்துக்கு இடமளிக்கின்றார் என்கின்றனர். அவர் தெளிவாக உள்ளார். மைத்திரியின் தலைமைத்துவத்தால் ஜெனிவாத் தீர்மானம் பிற்போடப்பட்டது. போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியோரின் பெயர்கள் அறிக்கையிலிருந்து இல்லாமல் செய்யப்பட்டன.

இராணுவம் மற்றும் பொலிஸார் மக்களை இலக்குவைத்து ஒருபோதும் தாக்குதல் நடத்தவில்லை. தற்போது நாடு நல்லிணக்கப் பயணத்தில் செல்கின்றது. இராணுவத்தைத் தாண்டி அத்தருணத்தில் தனிநபர்கள் எவரும் தவறிழைத்திருந்தால் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகளுக்குத் தண்டனைவழங்கப்படவேண்டும். அன்றைய நாளைவிட இன்று எமக்கு சாதகமான ஒரு நிலை சர்வதேச ரீதியில் எழுந்துள்ளது.வெளிநாடுகள் எமது நல்லிணக்கத்துக்கு உதவத் தயாராகவுள்ளன. இதன்பிரதிபலன் எமது மக்களுக்குத்தான் கிடைக்கும். பிரச்சினைக்கான காரணம் கண்டறியப்பட்டு சகல மக்களையும் ஒன்றிணைத்து நாம் முன்னோக்கிப் பயணிக்கவேண்டும். எதிர்வரும் மார்ச் மாத ஜெனிவா அமர்வின்போது நல்லிணக்கம், மனித உரிமைகள் தொடர்பில் நாம் தெரிவிக்க வேண்டும். சிலர்மைத்திரிநாட்டைக்காட்டிக்கொடுக்கப் போவதாக பொய்ப்பிரசாரம் செய்து நல்லிணக்கத்தைக்குழப்பப்பார்க்கின்றனர். இதனை நாம் முறியடிக்கவேண்டும். என்றார். (ற-சி)

# காலி கடலில் மூழ்கிய ஐந்து மீனவர்கள் சாவு

கொழும்பு, பெப்.4

காலி கடலில் மீன்பிடிப்பதற்கு சென்று காணாமற்போன ஆறு மீனவர்களில் ஐவரின் சடலங்கள் காலி துறைமுக கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன என்று கடற்படைப் பேச்சாளர் அக்ரம் அலவி தெரிவித்தார்.

ஆறாவது நபர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் வினவியபோது மேலும் அவர் கூறியதாவது:

ஆழ்கடலுக்கு கடந்த 28ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற குறித்த ஆறு பேரின் படகு, கப்பல் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதனால் படகில் சென்ற குறித்த ஆறு பேரும் ஆழ்கடலில் மூழ்கியுள்ளனர்.

இதில் ஐவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் தப்பியுள்ளார். ஹிக்கடுவை மற்றும் தொடங்துவ பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு இறந்துள்ளனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். - என்றார். (ற)




# மீண்டும் நீராவி ரயில்

இலங்கையில் மீண்டும் நீராவி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளின் பின்னர் நேற்றுமுன்தினம் பதுளை ரயில்நிலையத்தில் இருந்து இந்த நீராவி ரயில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள் இந்த நீராவி புகையிரதத்தில் பயணிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்றனர். நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ரயில் சேவையிலும் பல வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பயணித்தனர். குறித்த ரயில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் புகையிரதத்தை ஒளிப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

புகையிரதம் அறிமுகப்படுத்தப்பட்டு 200 ஆண்டுகளாகியுள்ளன. ஆரம்ப காலத்தில் ரயில் கள்நிலக்கரியைக்கொண்டு நீராவியின் மூலம் இயக்கப்பட்டன. (ற)







# கம்மன்பிலவின் சூழ்ச்சியில் சிக்கிக் கொள்ள வேண்டாம்

## நிமல் சிறிபால டி சில்வா அறிவுரை



கொழும்பு, பெப்.4

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் சூழ்ச்சியில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என சுதந்திரக் கட்சியினருக்கு அந்தக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கம்மன்பில அண்மையிலே அரசியலுக்கு வந்தவர். அதுவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வாக்குகள் மூலமே வந்தவர். நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு காரணியாக இருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்திப் பிரிக்கும் ஒப்பந்தத்தை எவரும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்காக உதய கம்மன்பில முன்னெடுக்கும் இந்த முடிச்சில் அல்லது ஒப்பந்தத்தில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிடம் கேட்டுக்கொள்கின்றேன். எமக்கு அதிகாரம் முக்கியமல்ல. கட்சியைப் பாதுகாப்பதே எமது தேவையாகும். தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் புரிந்து கொண்டுள்ளார். எனவே, இந்தக் கட்சியைப் பிளவுபடுத்த அவர் சந்தர்ப்பம் வழங்கமாட்டார் என நான் நம்புகின்றேன்.- என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் மண்ணைப் பறிக்கும் போக்கே நல்லாட்சியிலும் தொடரும் அபத்தம்

**1986** ஆம் ஆண்டிலேயே-அச்சொட்டாக முப்பது வருடங்களுக்கு முன்னரே-மயிலிட்டி மக்களே, போரினால் முதலில் இடம் பெயர நேர்ந்தது. அந்தக் காலத்தில் விமான நிலையத்தின் வேலியுடன் தோட்ட நிலங்களும் மக்களின் வீடுகளும் மட்டுமே இருந்தன. அதே நிலைமையே மீண்டும் எங்களுக்குத் தேவை. விமான நிலைய விஸ்தரிப்பை முழுக்க முழுக்க நிராகரிக்கின்றோம்.--

முதலில், எங்களின் சொந்த நிலம் தான் எமக்குத் தேவை. இதில் எந்த மாற்றமும் இல்லை. இதுவே மயிலிட்டி மக்களின் ஏகோபித்த முதன்மை முடிவு--

மேற்கண்டவாறாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக என்ற நிலை நின்று, கருத்து வெளியிட்டிருக்கிறார்கள் அவர்கள். தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பலாலி விமான நிலையத்தை, அனைத்துலக விமான நிலையமாக விஸ்தரிப்பதா? அல்லது மயிலிட்டி மக்களின் மீள்குடியேற்றத்தை மேற்கொள்வதா? என்ற கருத்தை அறிவதற்காக பிரதேச செயலகத்தினால், அரசின் சார்பில் நடத்தப்பட்ட பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே, மக்களின் மேற்போந்த கருத்து ஓங்கி ஒலிக்கப்பட்டது.

இதேவேளை--

வலிகாமம் வடக்கின் நாற்பது(40) சத வீதமான நிலப்பரப்புப் படையினர் வசமே இன்னமும் உள்ளது என்ற புள்ளிவிவரமும் அம்பலப்படுத்தப்பட்டது!

உத்தியோகபூர்வமான மேற்கண்ட தகவல்கள் முன்னர் ஆட்சியில் இருந்த கொழும்பு அரசுகள் தமிழ் மக்களின் பூர்விகக் காணிகளை-மண்ணை-'கபளீகரம்' செய்த வேகத்தையும் பாதிப்புக்களையும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகின்றன.

"இப்ப போவம், பேந்து போவம்" என்ற நம்பிக்கையுடன் காலத்தை ஓட்டிக்கொண்டிருக் கும், நலன்புரி நிலையங்களே தஞ்சம் என்று ஆக்கப்பட்டிருக்கும், அந்த மண்ணின் மைந்தர்கள், இடம் பெயர்ந்தோர் என்ற நாமம் "சூட்டப்பட்டு" அல்லாடச் செய்யப்பட்டிருக்கிறார்கள்!

நலன்புரி நிலையங்கள் என்ற பெயர்ப்பலகைகள் தொங்க விடப்பட்டுள்ள இடங்களில், தமது ஆசைகள் யாவும் புதைக்கப்பட்ட; நிராசையாக்கப்பட்ட நிலையில் ''கடைசிக் காலத்தில்'' வெதும்புகிறார்கள்!

விவசாயம் மற்றும் கடற்றொழில் மூலம் பெற்ற, பெருத்த வருமானங்களை இழந்து தமிழர்கள் 'நாயாக' அலையட்டும் என்ற கபடத்தனமான நோக்குடன் அவர்களின் செழிப்பான பொருளாதாரத்தை போக்கடித்த கொழும்பு அரசுகள் ஆட்சி வேறுபாடின்றி, அவர்களை 'நாயாக' அலைய வைத்து அவ்வப்போது "பீற்றல் சித்தாந்தங்களை" முன்னெடுத்து வந்தன; வருகின்றன.

முதலில் தமது மீள்குடியேற்றம்; அதனூடு தங்கள் சொந்த மண்ணில் வாழ்வதற்கான முன்னுரிமை என்ற அபிலாசையுடன் வலி.வடக்கு மக்கள் ஏங்கித் தவிக்கிறார்கள்.

அதனை நிலத்தில் புதைத்துவிட்டு, தமிழர் மண்ணைப் பறித்து, அபிவிருத்தி அது இது என்று தொடர்ந்து, அவர்களை மேலாதிக்கத்தால் தகர்த்து எறியும் போக்கின் படலமே நல்லாட்சியிலும் விரிந்து உயர்கிறது!! அந்தோ, தமிழர்கள் யாரிடம் சொல்லி அழ...?



# அரசியல் பழிவாங்கலா யோசிதவின் கைது?

**எம்.ஐ.முபாறக்**

> மகிந்த ஆட்சியில் இடம் பெற்ற ஊழல், மோசடிகளுக்கு எதிராக இந்த அரசு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றது என்று இந்த நாட்டு மக்கள் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட முதல் நாளில் இருந்தே உற்று நோக்கத் தொடங்கினர்.

இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு இரண்டு முக்கிய விடயங்கள் பிரதான காரணங்களாக இருந்தன. அவற்றுள் ஒன்று பேரினவாதப் போக்கு அடுத்தது ஊழல், மோசடி. மகிந்தவின் பேரினவாத அரசியலுக்கு எதிராக சிறுபான்மை இன மக்கள்களமிறங்கியஅதேவேளை, அவரது ஊழல்,மோசடிகள் மிக்க ஆட்சிக்குஎதிராகபெரும்பான்மை இன மக்கள் களமிறங்கினர்.

இந்த இரண்டு காரணங்களும் ஒன்றிணைந்தே மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்த்து மைத்திரி - ரணில் ஆட்சியை - நல்லாட்சியைக் கொண்டு வந்தன.

**மகிந்த ஆட்சியில் ஊழல் மோசடிகள்**

மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்,மோசடிகளுக்கு எதிராக இந்த அரசு எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றது என்று இந்த நாட்டு மக்கள் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட முதல் நாளில் இருந்தே உற்றுநோக்கத் தொடங்கினர்.

மகிந்த கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கும் இடையில் அதிகமான ஊழல்,மோசடிகள் அம்பலப்படுத்தப்பட்டன.

அவன்கார்ட் மிதக்கும் களஞ்சிய சாலை, விமல் வீரவன்சவின் மனைவியின் போலிக் கடவுச் சீட்டு விவகாரம், சிறிலங்கா எயார் லைன்ஸ் நிறுவன விவகாரம், மஹிந்தவின் தேர்தல் விளம்பர விவகாரம் எனப் பலதரப்பட்ட ஊழல்,மோசடிகள் அப்போது ஒன்றன் பின் ஒன்றாக அம்பலப்படுத்தப்பட்டன.

அத்தோடு, சஜின்வாஸ் குணவர்த்தன, சரண குணவர்தன, கிழக்கின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் மற்றும் பஸில் [illegible] குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இருந்தும் ஊழல்,மோசடிகளுக்கு எதிரான அரசின் இந்தச் செயற்பாடுகள் போதுமானவை அல்ல என்றே மக்கள் கருதத் தொடங்கினர். பெரும் பெரும் ஊழல்வாதிகளை விட்டுவிட்டு, சிறுசிறு ஊழல்வாதிகளைக் கைதுசெய்வதாக மக்கள் குற்றஞ்சாட்டினர்.

**உரிய முறையில் விசாரணை**

ஆனால், இது நல்லாட்சி என்பதால் உரிய முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு அதன் அடிப்படையிலேயே குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மக்களின் அந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்துக்கும் அரசு தொடர்ச்சியாகப் பதிலளித்துக் கொண்டு வந்தது.

அந்தவகையில், மகிந்த குடும்பம் மீதான விசாரணை இப்போது ஒரு கட்டத்தை எட்டி ஒருவர் பின் ஒருவராகக் கைதுசெய்யப்படும் நிலைமை தோன்றியுள்ளது. முதலில் பஸில் ராஜபக்ச, இப்போது யோசித ராஜபக்ச என கைதுகள் தொடர்கின்றன.

மகிந்தவின் மகன் யோசித ராஜபக்சவின் கைதை ஓர் அரசியல் பழிவாங்கலாகவும், அவர் எதுவித குற்றமும் செய்யாதவர் போலவும் காண்பித்து அரசியல் இலாபம் தேடுவதற்கு மகிந்த தரப்பினர் முயல்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இது உண்மையில் அரசியல் பழிவாங்கல்தானா என்று இங்கு ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

**வசீம் தாஜுதீனின் கொலையிலும் தொடர்பு**

வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பில் அவர் முதலில் கைதாவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் சி.எஸ்.என். தொலைக்காட்சி தொடர்பான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் இப்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தொலைக்காட்சியின் வளர்ச்சிக்கு அரச வளத்தைப் பயன்படுத்தியமை மற்றும் அந்த நிறுவனத்தைத் தொடங்குவதற்கு நிதி எவ்வாறு பெறப்பட்டது என்ற விவரம் வெளிப்படுத்தப்படாமை போன்ற குற்றச்சாட்டின் கீழே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பேரவையின் நோக்கத்தை வெளிப்படுத்தியதில் குழப்பம்

எஸ்.தர்மலிங்கம்

தமிழ்மக்கள் பேரவை தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் அரங்கேறிக்கொண்டிருக்கும் இந்த வேளையில், சாதாரண பொதுமகன் என்ற கோதாவில் கருத்துத் தெரிவிக்கும் உரிமையிலேயே இந்தக் கட்டுரையை வரைகின்றேன். அத்துடன் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டவர்கள் ஆளையாள் மாறி புகழாரம் சூட்டியதும் நாசூக்காக தங்கள் உள்ளக்கிடக்கைகளை தெரிவித்ததும் ஒரு சிறப்பம்சமாகும்.

தமிழ் மக்கள் பேரவை மாண்புமிகு முதலமைச்சரின் மூளையிலே உதயமாகிய நல்ல சிறப்பான செயற்பாடு. ஆனால் எண்ணப்பாங்கு சிறப்பாக இருந்தாலும், அதன் நோக்கத்தை வெளிப்படுத்தலின் முனைப்பில் குழப்பம் நிறைந்ததாகத் தென்படுகின்றது. இது என்னுடைய சொந்தக்கருத்தாகும். தமிழ்மக்கள் பேரவையை முதற்கண் சிருஷ்டிக்கும் பொழுது வடமாகாண சபை யின் ஏகோபித்த சம்மதத்தைப் பெற்றி ருந்தால், அதற்கு இன்னும் வலுச் சேர்த்து வடமாகாணத்தின் ஒரே குரலாகத் தொனித்திருக்கும்.

அடுத்ததாக, இதன் பெயரையே தமிழ் பேசும் மக்கள் பேரவையாக பெயர் சூட்டியிருந்தால் அது சிறப்பான அம்சங்களை உள்ளடங்கலுக்குக் கொண்டதாக அமையும். வடமாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய இலங்கையின் தென்பகுதியிலேயே கூடிய தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றனர். தமிழ் மக்கள் தங்கள் நலத்திட்டங்களுக்கு மேலும் வலுவூட்ட வேண்டுமென்றால் முஸ்லிம் மக்கள் எமது கொள்கைத் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகிறார்களோ இல்லையோ என்ற நோக்கத்தைப் புறந்தள்ளிவிட்டு, சிறுபான்மை இனம் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே மாத்திரமல்லாது கிழக்கு மாகாணத்திலே பிட்டுக்குத் தேங்காய்ப் பூப்போல் செறிந்து



வாழ்கிறார்கள். அப்படி அவர்கள் செறிந்து வாழ்வதால் கிழக்கு மாகாணத்திலே சிங்களக் குடியேற்றத்துக்குத் தடைக்கல்லாக விளங்குகின்றார்கள். ஆகவே எமது நோக்கம் ஈடேற வேண்டுமென்றால், அவர்களையும் ஒன்றிணைத்துச் செயற்படுதல் சாலச் சிறந்ததாகும். அடுத்ததாக, மலைநாட்டுத் தமிழ் மக்கள் ஒரு கணிசமான அளவிலான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டவர்கள். அரசியலிலும் சரி, இலங்கையின் பொருளாதாரத்திலும் சரி கூடிய தாக்கம் செலுத்துபவர்களாக இருக்கிறார்கள். இதேபோல் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் உள்ள தமிழர்கள் அரசியலில் கூடிய செல்வாக்குள்ளவர்களாக இருக்கின்றார்கள். இவர்களையும் ஒட்டு மொத்தமாகச் சேர்த்து எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுயல்வது பொருத்தமானதாகும். இலங்கையி லுள்ள சிறு பான்மை இனத்தவர்கள் ஒட்டு மொத்தமாகச் சேர்த்துத்தான் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டுமென் பதுதான் இந்தியாவின் நிலைப்பாடாகும். இதற்கு உதாரணமாக மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் இனப்பிரச்சினை சம்பந்தமாகச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியபொழுது சிறுபான்மையினர் எல்லோரும் ஒன்று சேர்த்துதான் தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது. ஆகவே இவற்றை அவதானித்தால் பெயர் சூட்டுவதில் மாற்றம் செய்ய வேண்டிய கட்டாயத்தை உணர்த்தி நிற்கின்றது.

**கல்விமான்கள் இணைந்த சபை**

அடுத்ததாக மதத்தலைவர்கள், மருத்துவத்துறை நிபுணர்கள், புத்திஜீவிகள், கல்விமான்களை இணைத்து ஒரு சிறந்த சபையின் மூலாதாரமாக விளங்கலுற்றது. ஆனால் அரசியல் கட்சிகளை உள்வாங்கியது ஒருதர்மசங்கடமான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. அரசியல்வாதிகளை உள்வாங்க வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டிருந்தால், தமிழ் பேசும் பிரதேசங்களில் அதாவது வடக்கு, கிழக்கில் பெரும்பான்மை வரவேற்பைப் பெற்ற, 16 நாடாளுமன்ற அங்கத்துவத்தைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை உள்வாங்காதமை, தமிழ் மக்கள் பேரவை ஒரு பலவீனமுற்றஒருநோயாளியாகத்தான் செயற்படும் என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. வாதப்பிரதி வாதங்களின் பொழுது சிறுசிறு விடயங்களெல்லாம் பெரிதுபடுத்திக் காண்பிக்கப்பட்டன. மே தின நிகழ்வின்போது சிங்கக்கொடி எதிர்க்கட்சித் தலைவரால் தூக்கிப் பிடிக்கப்பட்டதையும், முதலமைச்சர் ஜனாதிபதி முன்றிலில் சத்தியப்பிரமாணம் செய்ததையும் சிலர் எடுத்தும் கூறினர். இவை யாவும் சாதாரண பொது மகனுக்கே விளங்கும். இவை ஓர் ஒப்பனைக்கு, சம்பிரதாயமாக மேற்கொள்ளப்பட்டவையே ஆகும். இதைப் பெரும்பான்மை தமிழ் மக்கள் பொருட்படுத்தவில்லை என்று நான் உணர்கிறேன்

அடுத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் பதவி

> தமிழ் மக்கள் பேரவையை முதற்கண் சிருஷ்டிக்கும் பொழுது வடமாகாண சபையின் ஏகோபித்த சம்மதத்தைப் பெற்றிருந்தால் அதற்குஇன்னும் வலுச் சேர்த்து வடமாகாணத்தின் ஒரே குரலாகத் தொனித்திருக்கும்.

ஏற்றதென்பது துரோகச் செயல் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பகுதி மந்திரிப் பதவியோ அல்லது வேறு அரசால் நியமிக்கப்படும் பதவியோ அல்ல. ஜனவரி 2016 ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு தமிழ் மக்கள் சார்பாக தென்பகுதியிலிருந்து ஒளிக்கதிர்கள் தென்படுகின்றன. ஹெல உறுமய, ஜே.வி.பி போன்ற கட்சிகள் தமிழர் பிரச்சினையில் ஒரு நியாயமான தீர்வு எட்டப்பட வேண்டும் என்று மறைமுகமாகவோ நேரிடையாகவோ ஆதரவு வழங்கும்போல் தெரிகின்றது. ஜனாதிபதி கூறிய பிரகாரம் இராணுவத்தினால் பாதுகாப்பென்ற போர்வையில் பிடிக்கப்பட்டிருக்கும் பொதுமக்களின் காணிகளை அவர்களுக்கு கையளிப்பதில் அவர், மிகவும் கரிசனையாக உள்ளார். இது சம்பந்தமாக அவரது செயற்பாட்டை அவதானித்ததில் இந்த விடயம் கூடிய விரைவில் பூர்த்தி அடையும்போல் தெரிகின்றது.

## வீதியில் நாய்களுக்கு என்ன வேலை?

மீசாலை-அல்லாரை வீதியில் இருக்கும் ஏகாம்பரம் வீதிச் சந்தியில் சில நாய்கள் தமக்குள் சண்டை பிடித்துக் கொண்டிருந்த வேளையில், அல்லாரைப் பக்கத்தில் இருந்து மீசாலைச் சந்தி நோக்கி வந்து கொண்டி ருந்த மோட்டார் சைக்கிளொன்று அந்த நாய்களுடன் மோதியதில் மோட்டார் சைக்கிள் இடது புறமாக விழுந்து , அதில் வந்த நடுத்தர வயதுடைய ஆணும் பெண்ணும் வலப்புறமாக விழுந்தனர். ஒரு பத்து நிமிடங்கள் வரை எழுந்திருக்க முடியாமல் அவர்கள் அவதிப்பட்டார்கள்.

இவர்கள் விழுந்ததற்கு அதிகவேகம் காரணமெனச் சிலர் கதைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் வீட்டு நாய்களுக்கு வீதியில் என்ன வேலை? நாய்கள் வேலைக்குச் சென்று கொண்டிருந்த வேளையில் அவற்றிடையே சண்டை வந்து விட்டதா? வீட்டுநாய்களுக்கு வீடுகளில் போதிய உணவு வழங்கினால் அவை வீதிக்கு ஏன் வர வேண்டும்? நாய்களை வீட்டில் கட்டிவளர்த்தால் இதுபோன்ற, இதைவிடப் பெரிய பல விபத்துக்களைத் தவிர்த்திருக்கலாம் தானே!

சில தினங்களுக்கு முன்பு வந்த செய்தியொன்றில் வீதியில் சிறுநீர் கழித்த ஐவரைப் பொலிசார் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நாய்கள் சிறுநீர் கழித்தாலோ, அல்லது மலங்கழித்தாலோ அவற்றுக்கோ அல்லது அவற்றை வளர்ப்பவர்களுக்கோ எவ்விதத் தண்டனையும் வழங்கப்படுவதில்லை.

அப்படியானால் இந்த நாட்டில் நாய்களுக்கே அதிக சுதந்திரம் இருக்கிறது என்பதுதானே உண்மை. வீதிச்சுத்தமும் விபத்தும் தவிர்க்கப்பட வேண்டாமா?

வெளிநாடுக்ளில் நாய்கள் தனித்து வீதிகளில் செல்ல முடியாது. அவற்றை வளர்ப்பவர்கள் அவற்றின் கழுத்தில் கட்டிய நாடாவைக் கையில் பிடித்துக் கொண்டுதான் செல்ல வேண்டும். நாயினால் ஏற்படுத் தப்படும் அசுத்தத்தையும் அவரே சுத்தம் செய்ய வேண்டும். இங்கும் அப்படியான நிலை வந்தால்தான் நாடு சுத்தமாகவும் அழகாகவும் இருப்பதுடன் இதுபோன்ற விபத்துக்களும் குறைவடையும்.

சு.வாகீசன், மீசாலை

## இனியாவது மோதலைக் கைவிடுவார்களா?

நேற்றைய தினம் காரைநகரில் இருந்து 786 ஆவது இலக்க அரச பஸ்சில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்தேன்.

காலை சுமார் 9 மணியளவில் நான் பிரயாணம் செய்துகொண்டிருந்த பஸ் ஓட்டு மடத்துக்கும், ஐந்து சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் சென்று கொண்டிருந்தது. அப்போது பஸ்சுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் அரச பஸ்சை மேற்கொண்டு செல்லவிடாது இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருந்ததை நான் நேரடியாக அவதானித்தேன். அந்தத் தனியார் பஸ் மாதகலில் இருந்து யாழ் நகருக்குச் சென்று கொண்டிருந்தது. (அதன் இலக்கம் 302774)

அண்மைக் காலமாக அரச பஸ்களில் பணியாற்றுபவர்களும், தனியார் பஸ்களில் பணியாற்றுபவர்களும் மோதல்களில் ஈடுபட்டு வருவதை அறியக் கூடியதாக உள்ளது. இது ஒரு போதுமே ஆரோக்கியமானதொரு சூழ்நிலையை ஏற்படுத்தி விடாது.

மேலும் அரச பஸ்சாக இருந்தாலும் சரி, தனியார் பஸ்சாக இருந்தாலும் சரி அவற்றில் பயணம் செய்வது சாதாரண பொதுமக்கள்தான். இந்த இரண்டு சாராரும் மோதிக்கொள்வதால் பயணிகள்தான் பாதிக்கப்படுகின்றனர்.

ஆகவே இருசாராரும் இனியாவது மோதல் போக்கைத் தவிர்த்து பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும்.

பா.பகீரதன், மூளாய்

## தற்காலிக ஏற்பாடாவது மேற்கொள்ளப்படுமா?

மூளாய்-காரைநகர் வீதியில், மூளாய் இந்து மயானத்துக்கு அருகில் அமைந்துள்ள மதவு உடைந்த நிலையில் காணப்படுவதால் பஸ் சேவைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக காரை நகரில் இருந்து புறப்படும் 784ஆம் இலக்க பஸ்கள் பொன்னாலைச் சந்தி ஊடாக அங்கிருந்து மூளாய், வட்டுக்கோட்டை ஊடாக ஓட்டுமடம் சந்தியைச் சென்றடைந்து யாழ். நகருக்குச் செல்வது வழக்கமாக இருந்தது.

ஆனால் இந்த மதவு உடைந்துள்ளதால் குறித்த பகுதியூடாக செல்லும் பஸ்கள் மூளாய்மாவடி ஊடாக வட்டுக்கோட்டைச் சந்தியை அடையவேண்டிய நிலையில் உள்ளன.

ஆகவே மதவு புனரமைக்கப்படும் வரையில் தற்காலிக பாதை வசதிகளையாவது ஏற்படுத்தித் தருமாறு பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கா.பாலா, பொன்னாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடைப் பண்ணையில் தீ; தீயில் கருகிய பசு மாடுகள்

ஒட்டாவோ, பெப்.4
கனடாவில் உள்ள கால்நடைப் பண்ணையொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் 90 பசு மாடுகள் தீயில் கருகி இறந்துள்ளன. இந்தப் பண்ணையில் 100க்கும் அதிகமான பசுமாடுகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன. நேற்று அதிகாலை நேரத்தில் பண்ணையில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது.

உடனடியாக விபத்து நிகழ்ந்துள்ள இடத்துக்குச் சென்ற தீயணைப்புப் படையினர் சில மணி நேரப் போராட்டத்தின் பின்னர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

15 பசுமாடுகள் காப்பாற்றப்பட்டுள்ளன. 90 பசு மாடுகள் தீயில் கருகி இறந்துள்ளன. தீ விபத்தில் சுமார் 1.5 மில்லியன் டொலர் மதிப்பில் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒண்டாரியோ மாகாணத்தில் உள்ள பல்வேறு பகுதிகளில் உள்ள கால்நடைப் பண்ணைகளில் ஏற்பட்ட தீவிபத்தில் கடந்த மாதத்தில் மட்டும் 2 ஆயிரம் பன்றிகள், 50 குதிரைகள் மற்றும் தற்போது 90 பசுமாடுகள் உயிரிழந்துள்ளன என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (ற-ரி4)





# ஆர்ப்பாட்டம் செய்த ஊழியர்களை பொ

## கராச்சியில் சம்பவம்

கராச்சி, பெப்.4
பாகிஸ்தானின் கராச்சி விமான நிலையத்தில் பாதுகாப்புப் படையினருக்கும் ஆர்ப்பாட்டக் காரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தனியார் மயமாக்கல் திட்டங் களுக்கு எதிராக பாகிஸ்தான் சர்வதேச விமான சேவை ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது பாதுகாப்புப் படையினர், கண்ணீர்ப் புகை மற்றும் தண்ணீர்த் தாரைகளால் தாக்குதல் நடத்தி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைக்க முற்பட்டதுடன், அவர்கள் மீது தடியடித் தாக்குதலும் மேற்கொண்டுள்ளனர்.

எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படவில்லை என



## ஏமனில் மோதல் உக்கிரம் 2 நாள்களில் 30 பேர் சாவு

சனா, பெப்.4
ஏமனில் பதவி நீக்கப்பட்ட அரச ஆதரவுப் படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான போர் உக்கிர நிலைமை அடைந்துள்ளது. கடந்த இரு நாள்களில் மட்டும் 30 பேருக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கிளர்ச்சியாளர்கள் தற்போதைய ஜனாதிபதி அப்த் ரப்போ மன்சூர் ஹாதியின் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். 2014 ஆம் ஆண்டு இந்தக் கிளர்ச்சி ஆயுதப் போராட்டமாகத் திசைமாறியது.

ஏமன் தலைநகரான சனா உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றித் தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்களை ஒடுக்க சவுதி அரேபிய அரசின் உதவியை அதிபர் மன்சூர் ஹாதி நாடினார். அதையடுத்து சவுதி அரசு கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

மோதல்களில் இதுவரை சுமார் 6 ஆயிரம்பேர்உயிரிழந்துள்ளனர். அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டுச் சண்டையால் பெரும்பாலான மக் கள் குடிதண்ணீர், உணவு, மருந் துப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் திண்டாடுகின்றனர்.

இந்த நிலையில் தலைநகர் சனாவில் இருந்து சுமார் 65 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள டாயிஸ் நகரில் நேற்று முன்தினம் இரு தரப்பினருக்கும் இடையே நடந்த மோதலில் பொதுமக்கள் உள்பட 30 பேர் உயிரிழந்துள்ளனர். (ற-ரி4)

# மீண்டும் பீதி கிளப்புகிறது வட கொரியா

பியாங்யாங், பெப்.4
வடகொரியா ஆராய்ச்சிப் பணிகளுக்காக செயற்கைக் கோள் ஒன்றை ஏவத் திட்டமிட்டுள்ளதாக அறிவித்துள்ளது. எனினும் செயற்றைக் கோள் ஏவுவது எனும் பெயரில் வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை ஒன்றை நடத்தவுள்ளது என்று உலக நாடுகள் தெரிவிக்கின்றன. இதையிட்டுக் கடும் கண்டனமும் தெரிவித்துள்ளன.

சர்ச்சையைக் கிளப்புவதில் வடகொரியா பெயர் போனதாக மாறியுள்ளது.

கடந்தமாதம் சக்திவாய்ந்த ஹைட்ரஜன் குண்டை வெடித்து வடகொரியா பரிசோதனை நடத்தியது. அதற்கு அமெரிக்கா, சீனா, இங்கிலாந்து, இந்தியா உள்ளிட்ட உலகநாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்ததுடன், ஐ.நா. சபை, வடகொரியா மீது மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தன.

இந்த நிலையில் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் புதிய அறிவிப்பொன்றை விடுத்துள்ளார். ஆராய்ச்சிப் பணிகளுக்காக தமது நாடு செயற்கைக்கோள் ஒன்றை ஏவத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனால் தமது நாட்டின் கிழக்குக் கடற்பகுதிக்குள் கப்பல்கள் செல்வதை அனுமதிக்க வேண்டாம் என்று சர்வதேச கடல் அமைப்புக்கு அறிவிப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச கடல் அமைப்பு, ஐ.நா. உட்பட மூன்று அமைப்பு களுக்கு வடகொரியா கடிதம் மூலம் இது குறித்து அறிவித் துள்ளது. பூமியைக் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் செயற்கைக்கோளை ஏவத் திட்டமிட்டுள்ளோம். எனவே எதிர் வரும் 8 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை கிழக்குக் கடற்பகுதியில் கப்பல்கள் செல்வதை தவிர்க்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் உலகநாடுகள் வடகொரியா ஏவுகணைச் சோத னையே நடத்தவுள்ளது என்று கூறுகின்றன. தற்போதைய ஜனாதிபதியின் தந்தையான முன்னாள் ஜனாதிபதி கிம் ஜாங்-கின் பிறந்தநாளான எதிர்வரும் 16 ஆம் திகதி ஏவுகணைச் சோதனை




நடத்தப்படலாம் என்று அவை தெரிவிக்கின்றன.

வடகொரியாவின் இந்தச் செயற்பாட்டுக்கு அவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அமெரிக்க அரசின் வெளியுறவுத்துறைச் செயலாளர் ஜோன் கிர்பி இது குறித்துத் தெரி விக்கையில் வடகொரியா மீது கடும் பொருளாதாரத் தடை கள் விதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

செயற்கைக்கோளை ஏவும் போர்வையில் நீண்டதூரம் பாய்ந்து செல்லக்கூடிய நவீன ரக ஏவுகணையைப் பரிசோதிக்கத் திட்டமிட்டுள்ள வடகொரியா உடனடியாக தனது முயற் சியைக் கைவிட வேண்டும் என்று தென் கொரியா எச்சரித்துள்ளது.

வடகொரியாவின் இந்தத் திட்டம் தொடர்பாக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் ஆலோசித்து இது குறித்து நடவடிக்கை எடுப்போம் என ஜப்பான் பிரதமர் ஷின்ஸோ அபே குறிப்பிட்டுள்ளார். (ற-ரி4)

## பாலியல் தொடர்பாலும் தொற்றுகின்றது சிகா!

நியூயோர்க், பெப்.4
தற்போது பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள சிகா வைரஸ் தொற்று பாலியல் ரீதியிலும் தொற்றுகின்றது என்று அமெரிக்க ஆய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது நுளம்பால் பரவுகின்றது என்று கூறுவதற்கான சாத்தியங்கள் குறைவாகவே உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்திலுள்ள டாலஸ் நகரில் சிகா தொற்றுக்கு இலக்கான ஒரு நோயாளி இனங்காணப்பட்டுள்ளார். குறித்த நபருக்கு பாலியல் தொடர்பு மூலம் இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது என்று நோய்க் கட்டுப்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

தொற்றுக்கு உள்ளான நபர் சிகா தொற்றுள்ள நாடுகளுக்குப் பயணித்திருக்காத நிலையில் அவருடைய துணையாளர் வெனிசுவேலாவுக்குச் சென்று திரும்பியுள்ளார் என்று கூறப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எத்தியோப்பியாவில் வரலாறு காணாத கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. ஒரு கோடிக்கும் அதிகமானோர் பட்டினியால் வாடுகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக் கின்றன. சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக எத்தியோப்பியா சென்ற ஐ. நா. செயலாளர் நாயகம் அழிவை எதிர்நோக்கும் ம க்களை மீட்க உதவ வேண்டும் என்று உலக நாடுகளைக் கோரியுள்ளார். வறட்சி என்பது அந்த நாட்டு மக்களுக்குப் புதிதல்ல என்றாலும் கடந்த 30 வருட காலத்தில் இடம்பெற்ற படுமோசமான வறட்சி இதுவாகும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். 80 ஆயிரத்துக்கும் அதிகம ானோர் இதுவரையில் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும், இடம்பெயர்வோர் எண்ணிக்கை மேலும் அதி கரிக்கும் வாய்ப்பு உள்ளது என்றும் எத்தியோப்பிய அரசு அறிவித்துள்ளது. (ற)

## ..ாலிஸ் தாக்கியதில் இருவர் சாவு



பொலிஸார் தெரி வித்துள்ளனர். பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர் களுக்கும் இடை யிலான மோத லில் ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டிருந்த இரு ஊழியர்கள் உயிரிழந்துள் ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை மூவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் கூறப் படுகிறது.

விமான சேவையின் ஒரு பகுதியைத் தனியாருக்கு விற்பனை செய்வது குறித்து கடந்த ஜூலை மாதம் முன்மொழியப்பட்டிருந்த நிலையில், அதற்கு எதி ர்ப்புத் தெரி வித்து தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ற)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுமணம் அங்கீகரிக்கப்படுமா?

**உடுவிலூர் கலா**



சாவு என்ற ஒன்றால் கணவனைப் பிரியும் பெண்களும், பல்வேறு காரணங்களால் கணவனைப் பிரியும் பெண்களும் விதவை, வாழாவெட்டி ஆகிய இழிவான பெயர்கள் கொண்டு அழைக்கப்படுகின்றனர். ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணும் துணையாக வாழும் வாழ்வே சிறந்த இல்லற வாழ்வாகும். இல்லறத்தில் இணைந்து வாழ்ந்தவர்கள் பிரிந்து தனிமையாக வாழ்வதென்பது கொடுமையானது. பெண்ணானவள் கல்வியை நிறையப் பெற்றிருந்தாலும் பணபலத்தோடு இருந்தாலும் துணை இன்றி வாழ்வது கடினம். சமுதாயத்தில் நிகழ்கின்ற அருவருக்கத்தக்க செயல்களுக்கு பல பெண்கள் பலிக்கடாவாகின்றனர். பெண்ணுக்கு ஆணின் துணை, பாதுகாப்பு என்பன தேவை. அதேபோல் ஆணுக்கும் பெண்களின் துணை கட்டாயத் தேவையாகின்றது.

மறுமணம் என்பது எமது பண்பாடு ஏற்றுக்கொள்ளாத ஒன்று. ஆனால், மறுமணத்தை அங்கீகரிக்க வேண்டும். அங்கீகரிக்கப்படாது போனாலும் மறுமணங்கள் நிகழாமலா போகின்றன? மறுமணங்கள் பற்பல வடிவங்களில் நிகழ்கின்றன. மறுமணம் சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்டால் தான் மகிமை பெறும்.

இளம் விதவைகளும், கணவனைப் பிரிந்து விவாகரத்தானவர்களும், பொலிவிழந்தவர்களாக ஒருவித சலனத்தோடும், ஏக்கத்தோடும் மரண பரியந்தம்வரை வாழ முடியுமா? சில பெண்கள் குழந்தையைப் பெற்றதோடு விதவையாகின்றனர். சிலர் திருமணமாகி சில நாள்களில், சில மாதங்களில் விதவையாகின்றனர். இதைவிட, வன்னிப் போரில் விதவைகளான பெண்கள் சோகங்களை உள்ளடக்கியுள்ளனர். ஏற்றகாலத்தில் துணையை ஏற்கும் பெண்கள், இயற்கையாலும், காலங்களாலும் தனிமைப்படும்போது அவர்களது துயரத்துக்கு எல்லை போடமுடியுமா? பெண்களுக்குத் துணை வேண்டும்.

விதவைகளின் மறுமணம் கட்டாயமானது. சில விதவைகளுக்கு மறுமணத்தில் நாட்டமில்லை. சில விதவைகள் மறுமணம் செய்ய மனமிருந்தும் சமூகத்துக்குப் பயந்து தனிமையாகவே வாழ்கின்றனர். இஸ்லாத்தில் கணவன் இறந்து 40 நாளின் பின்னர் மறுமணம் செய்யப் பெண்ணுக்கு உரிமையுண்டு. இதனால், ஒரு வாழ்வில் ஏற்பட்ட துயரத்தை மறுவாழ்வில் ஈடு செய்கின்றனர். எமது சமூகத்தில் விதவைகளும், கணவனை நிரந்தரமாகப் பிரிந்தவர்களும் நிறையப் பேர் உள்ளனர். இவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகவே உள்ளது. ஆண்களால் விதவைப் பெண்கள் பெரும் அவலத்தைச் சந்திக்கின்றனர். மறைமுக பாலியல் தொந்தரவுகள், அநாவசிய அழைப்புக்கள், உதவி செய்வதுபோல் பாசாங்குகள் என்பன பெண்கள் மனதைப் புண்படுத்துகின்றன.

> இளம் விதவைகளும், கணவனைப் பிரிந்து விவாகரத்தானவர்களும், பொலிவிழந்தவர்களாக ஒருவித சலனத்தோடும், ஏக்கத்தோடும் மரண பரியந்தம்வரை வாழமுடியுமா? சில பெண்கள் குழந்தையைப் பெற்றதோடு விதவையாகின்றனர்.

இதைவிட விதவைப் பெண்களில் ஒருசாரார் கணவனோடு வாழ்ந்த புனிதமான வாழ்வை நினைத்து நினைவுகளோடு வாழ்க்கை நடத்துகின்றனர். ஒருசாரார் மனம்போன போக்கில் சென்று அவமானங்களையும் பழிச்சொற்களையும் சுமக்கின்றனர். முதிர்கன்னியாக வாழலாம். விதவைப் பெண்ணாக வாழ முடியாது. விதவைப் பெண்களில் குற்றம் பிடிப்பதில் சமூகம் முன்னணியில் நிற்கிறது. சமூகத்தின் விசாலமான பார்வையால் விரக்தியடையும் விதவைகள் வாழ்வை முடித்துவிட்ட சம்பவங்களும் உண்டு. பொலிவிழந்தவர்களாக பெண்கள் காலம் முழுக்க வாழ்ந்து ஏனையோரின் பரிதாபத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். கணவனோடு மகிழ்வாக வாழும் பெண்கள் விதவைப் பெண்களை அபசகுனமாகப் பார்ப்பதும் தோற்றத்தைக் கிண்டல் செய்வதும் கூட நாம் காண்கின்ற நிகழ்வுகள்.

மறுமணம் அங்கீகரிக்கப்படும்போது பெண்கள் மீது சுமத்தப்படும் சுமை ஓரளவு குறையும். சிலவேளை திருமண வாழ்வில் கிடைத்த மகிழ்வும் அமைதியையும்விட மறுமணத்தில் கூடுதலாகக் கிடைக்கும். இதனால் பெண்களின் வேதனை குறைந்து விடும். சமூகத்தில் விதவைகள், கைவிடப்பட்ட பெண்களின் எண்ணிக்கையும் குறைவடையும். ஆக, மறுமணம் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.




## தனுசு

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் தனுசு ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். தனுசு ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

**விவசாயிகள்**
பயிர் விளைச்சல் சிறப்பாக அமையும். புழு பூச்சிகளின் தொல்லைகள் சற்று இருந்தாலும் எதையும் சமாளிப்பீர்கள். பங்காளிகள் மற்றும் உறவினர்களின் ஆதரவு மனமகிழ்ச்சியைத் தரும். எல்லா வகையிலும் லாபங்களையும் முன்னேற்றங்களையும் பெறமுடியும். அரசு வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். எதிலும் சற்றுச் சிந்தித்துச் செயற்படுவது நல்லது.

**பெண்கள்**
குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்லவேண்டிய காலமாகும். புத்திர வழியில் மனச்சஞ்சலங்களும் வீண் விரயங்களும் ஏற்படும். ஆண்டின் தொடக்கம் சாதகமாக இருந்தாலும், பிற்பாதியில் எதிலும் கவனத்துடன் இருப்பது நல்லது. பணவரவுகளிலும் நெருக்கடிகள், கொடுக்கல்- வாங்கல்களிலும் பிரச்சினைகள் ஏற்படும். கடன்கள் அதிகரிக்கும்.

**மாணவ- மாணவியர்**
கல்வியில் அதிக ஈடுபாடு எடுத்துக்கொண்டால் மட்டுமே ஓரளவுக்கு முன்னேற்றப் பலனை அடைய முடியும். சிலருக்கு அடிக்கடி ஆரோக்கியப் பாதிப்புக்கள் ஏற்பட்டு பள்ளிக்கு விடுப்பு எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். தேவையற்ற நண்பர்களின் சகவாசத்தால் நீங்கள் அவப்பெயரைச் சந்திக்கநேரிடும். எதிலும் கவனத்துடன் இருப்பது நல்லது.

**மாதப்பலன் (ஜனவரி)**
லாப ஸ்தானமான 11-ல் செவ்வாய் சஞ்சாரம்செய்வதும் 8-ஆம்தேதி முதல் 3-ல் கேது சஞ்சாரம்செய்யவிருப்பதும் அனுகூலமான அமைப்பு என்றாலும், ஜென்ம ராசியில் சூரியன் சஞ்சரிப்பதால் முற்கோபத்தைக் குறைப்பது நல்லது. சிறுசிறு மருத்துவச் செலவுகளும் உண்டாகும். குடும்பத்தில் மங்கலகரமான சுபகாரியங்கள் கைகூடும். பணம் பல வழிகளில் தேடிவந்து உங்கள் சட்டைப் பைகளை நிரப்பும். உத்தியோகத்தர்கள் பணியில் சற்று கவனத்துடன் செயற்படுவது நல்லது. சிவபெருமானை வழிபாடு செய்வது நல்லது.

**பெப்ரவரி**
முயற்சி ஸ்தானமான 3-ல் கேதுவும், லாப ஸ்தானமான 11-ல் செவ்வாயும் சஞ்சாரம் செய்வதும் மாதப் பிற்பாதியில் சூரியன் 3-ல் சஞ்சாரம் செய்யவிருப்பதும் அற்புதமான அமைப்பாகும். இதனால் தொட்டதெல்லாம் துலங்கும். அசையும்- அசையாச் சொத்துக்கள் வாங்கக்கூடிய யோகம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிதரக்கூடிய சம்பவங்கள் நடைபெறக்கூடிய வாய்ப்பு, புத்திர வழியில் பூரிப்பு உண்டாகும். கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றமுடியும். உறவினர் வருகை மகிழ்ச்சிதரும். பொருளாதார நிலை சிறப்பாக இருப்பதால் கடனில்லாத கண்ணிய வாழ்க்கை அமையும். உத்தியோகத்தர்களுக்கு பெயர், புகழ் உயரும்.

**மார்ச்**
முயற்சி ஸ்தானமான 3-ல் கேதுவும் சூரியனும் சஞ்சரிப்பதும், 2-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதும் எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகளை ஏற்படுத்தும் அமைப் பாகும். பொருளாதார மேன்மை, நினைத்தது நிறைவேறக்கூடிய வாய்ப்பு ஏற்படும். 12-ல் சனி, செவ்வாய் சஞ்சரிப்பதால் தேவையற்ற அலைச்சல், பதற்றம் அதிகரிக்கும் என்பதால் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. நெருங்கியவர்களைச் சற்று அனுசரித்து நடந்து கொள்வதால் அனுகூலப் பயனை அடைய முடியும். கொடுக்கல்- வாங்கல் சரள நிலையில் நடைபெறும். பூர்வீகச் சொத்துக்களால் லாபம் ஏற்படும். பெரிய மனிதர்களின் நட்புக் கிட்டும். ஆஞ்சநேயரை வழிபாடு செய்வது உத்தமம்.

**ஏப்ரல்**
சுக ஸ்தானமான 4-ல் சூரியன் சஞ்சரிப்பதும், விரய ஸ்தானமான 12-ல் சனி, செவ்வாய் சஞ்சாரம் செய்வதும் தேவையற்ற அலைச்சல், பதற்றத்தை உண்டாக்கும் அமைப்பாகும். உடல் ஆரோக்கியத்தில் உஷ்ணம் சம்பந்தப்பட்ட பாதிப்புக்களும், நெருங்கியவர்களிடையே கருத்து வேறுபாடுகளும் உண்டாகும். குரு 9-ல் இருப்பதால் தொழில், வியாபாரத்தில் சிறுசிறு போட்டிகள் நிலவினாலும் எதையும் சமாளித்து ஏற்றம் பெறமுடியும். உத்தியோகத்தர்களின் திறமைகள் பாராட்டப்படும்.

**மே**
ஜென்ம ராசிக்கு 3-ல் கேது, 9-ல் குரு சஞ்சரிப்பதும், மாதப் பிற்பாதியில் சூரியன் 6-ல் சஞ்சாரம் செய்யவிருப்பதும் சாதகமான அமைப்பாகும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் தேடிவரும். வெளிவட்டாரத் தொடர்புகளில் சாதக பலன் ஏற்படும். கொடுத்த கடன்கள் திருப்திகரமாக வசூலாகும். கணவன்- மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் ஒற்றுமை குறையாது. நீங்கள் எடுக்கும் காரியங்கள் அனைத்திலும் முழு வெற்றி கிட்டும். உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் செலுத்தவும். சிவபெருமானை வழிபாடு செய்வது உத்தமம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாய் மண்ணே வணக்கம்

கே.எஸ்.சிவஞானராஜா

> தன்னிலும் பெறுமதியானவர்கள் – வெளியிலே அமைதியாகவும் எளிமையாகவும் சமயவாதியாகவும் இல்லறவாதியாகவும் வாழ்வதை ஒப்புக் கொள்ளவும், தன்னை விடுவிக்கவும் தெரிய வேண்டும். எமது நாட்டில் சமயத்தைத் தத்தமது கட்டுப்பாட்டில் போர்த்துக்கட்டி வைத்திருக்கிறார்கள்.

*எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி*
*இருந்ததும் இந்நாடே-அதன்*
*முத்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து*
*முடிந்ததும் இந்நாடே-அவர்*
*சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து*
*சிறந்ததும் இந்நாடே-இதை*
*வந்தனை கூறி மனத்தில் இருத்தி என்*
*வாயுற வாழ்த்தேனோ!*

கோடானு கோடி மக்கள் வாழ்ந்து, அனுபவித்து அதிசயித்த பூமியே நாம் வாழும் இந்த மண். அந்த மண்ணில் உரிமையோடு வாழ்கின்ற எந்த மனிதனாயினும் சரி, அவன் வாழும் அந்த மண் அவனுக்குச் சொந்த மண்ணே. ஆதலால் இந்த மண் எமது சொந்த மண்ணாகும். இதுவே எம் தாயகமும் கூட. முன்னொரு காலத்தில் இந்தியாவோடு இணைந்ததாகவே இலங்கையும் இருந்ததென்பது பூர்வீக வரலாறு. அவ்வாறாயின் இந்தியாவும் எமது தாயக மண்ணாகும். எது எப்படியிருப்பினும் இரண்டுமே எமக்குத் தாயக மண்களாகும். அந்தவகையில் தாயக மண்ணை வணங்குவோமாக.

கவிப்பேரரசு வைரமுத்து இலங்கை வந்திருந்தபோது கூறியவார்த்தை, தமிழர்களின் இரத்த உறவையும், இணைந்த சகோதரத்துவத்தையும் மீண்டும் உறுதிப் படுத்தியது. ஆம்!

*"நாம் ஒரு தாய் பிள்ளைகள். இங்கு*
*நமக்கு ஒரு துன்பமெனில் இந்தியா*
*கலங்குகிறது. இந்தியாவுக்கு ஒரு துன்பம்*
*என்றால் இலங்கை கலங்குகிறது.*
*இது சும்மா ஒரு நடிப்புக்காக வருவதில்லை. இதயத்திலிருந்து வருவதாகும்"*

எனவே இந்த மண்ணாயினும், இந்திய மண்ணாயினும் தமிழர்களுக்கு இரண்டுமே தாய்மண்ணேதான். இந்த மண்ணை வைத்தே ஒரு காவியம் படைக்கப் பாடுபடுவேன். தமிழர்தம் துன்பம் என் இதயத்தைத் தைத்தபடியால் தான் அங்கிருந்து இங்கு ஓடோடி வந்துள்ளேன். எனது வருகையால் நீங்கள் ஆறுதல் பெறுவீர்களாக. ஆம்! அவரது உணர்வு உயிர் பெறும்.

**இந்தியாவின் குடியரசு தினம்**

இந்தியாவின் 67 ஆவது குடியரசு தினம் கடந்த 26 ஆம் திகதி இந்தியாவில் கோலாகலமாகவும் இலங்கையில் இந்திய துணைத்தூதரகம் வாயிலாகவும் கொண்டாடப்பட்டது. இந்தியாவில் எது நடக்கிறதோ அது இலங்கையிலும் தொனிக்கவே செய்யும். அதேபோல இலங்கையில் எது நடந்தாலும் அதனுடைய விளைவு இந்தியாவிலும் அதிரவே செய்யும். உலகிலே ஜனநாயக வல்லரசு நாடுகளாகக் கணிக்கப்படும் சில நாடுகளில் இந்தியாவும் முதன்மை பெறுகிறது. சிறப்பாகக் கூறுமிடத்து

*பன்முகத் தன்மை*
*மதச் சார்பின்மை*
*விண்வெளி சகாயம், ஆராய்ச்சி*
*தொழில்நுட்ப ஆதிக்கம்*
*ஏவுகணை அணுவாயுதத் திறன்*
*ஆக்கத் திறன், அபிவிருத்தி*
*தொழிற்சாலை நிர்மாணம்*
*விவசாயப் பெருக்கம்*
*தானிய உற்பத்தி*
*மருத்துவ சாதனைகள்*
*போர்த்தளபாட உற்பத்தி*
*வாகனத் தயாரிப்பு*
*வங்கி மூல வாழ்வாதாரம்*
*பேச்சு, எழுத்துச் சுதந்திரம்*
*அரசியல் சுதந்திரம்*
*ஆன்மிக வாலாயம்*
*அனைவருக்கும் வீட்டு வசதி*
*அனைவருக்கும் கழிப்பறை*
*அனைவருக்கும் கல்விவசதி*
*அனைவருக்கும் சமத்துவம்*
*சமஷ்டிமுறை போன்ற- மாநில சுயாட்சி*
*அணிசேராக் கொள்கை*
*அகிம்சா வழி, சகிப்புத் தன்மை*
*காந்தீய வாழ்க்கை அமைப்பு*
*பன்மொழிக் கலாசாரம்*
*உயர் கல்வி அமைப்பு*
*பெண்களுக்கான சமவாய்ப்பு*
*போதை ஒழிப்பு ஊழலொழிப்பு*
*சீதன ஒழிப்பு, சிசு பாதுகாப்பு*
*இடர்முகாமைக் கட்டமைப்பு*
*செயற்கைக்கோள் கண்காணிப்பு*
*முப்படைப் பரிணாமம், கப்பற் கட்டுமானம்*

ஆகிய சகல நிர்வாக, நிர்மாணங்களிலும் இமாலய வெற்றியையும், சாதனையையும், பாதுகாப்பையும் எட்டியுள்ளது. அமெரிக்காவே வியக்கும் அளவுக்கு 2020ஆம் ஆண்டில் பெரியதொரு வல்லரசாக மாறும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை. பல இன, மொழி, கலாசார மதைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இந்தியாவால் ஜனநாயகத்தை உயிரோட்டமாக வைத்திருக்கமுடியுமென்றால் இலங்கையால் அத்தகு நிலமையை ஏன் சமாளிக்க முடிவதில்லை என்பது சிந்தனைக்கு உரியது.

**இலங்கையில் சமநீதி வேண்டும்**

திறமையுள்ளவர்கள் யாராக–எவராக இருந்தாலும் அவருக்கு உயர்பதவி வாழங்கும் வண்ணம் மனமாற்றம் ஏற்பட்டாலொழிய, சமநீதி என்பது இங்கையில் வெற்றி பெறுவது அசாத்தியமே. இங்கு நீதிமன்றங்கள் மட்டும் தீர்ப்பில் சகல இன மக்களுக்கும் பொதுவானதாக இருக்கின்றன. நாம் இலங்கைப் பிரசை என்று சொல்லும் அளவுக்கு இன்னும் நாம் முன்னேறவில்லை. எமது நாட்டில் ஜனாதிபதியென்றாலும் சரி, பிரதமர் என்றாலும் சரி அவர் ஒரு தமிழராகவோ முஸ்லிமாகவோ வரக் கூடியவாறு, மாறிமாறி ஆட்சிபீடம் சீராக இடம்பெறுமாயின், கூடவே யாப்பிலும் அது கைகூடும் வண்ணம் நடைமுறைப்படுத்தப்படுமாயின் இலங்கை யும் இந்தியாவின் கைக்குழந்தையாக மாறும். புத்திஜீவிகளும்- [illegible] அடிப்படையில் முன்னிலைப்படுத்தப்படுவோர்களாக இருந்தால் நாடு அதீத வளர்ச்சியை நிச்சயம் எட்டும்.

மேலும், கலை, கலாசாரம் பண்பாடு, பாரம்பரியம், வசதிவாய்ப்பு, சந்ததி, நிலம் ஆகியவற்றிலே ஒரு தொடர்ச்சியான நேர்த்தியான இணைப்பொன்றைச் சம்பந்தப்பட்ட மக்கள் வரமாகப் பெறுவார்களாக இருந்தால், இலங்கை என்ற ஒற்றையாட்சிக்குள்மாநிலசுயாட்சி என்ற வேதம் மந்திரமாக உச்சரிக்கப்படும். இது–இந்தியாவின் ஜனநாயகக் கோட்பாட்டை அடியொற்றியதாக அமையும். இதன் பெறுபேறாக வடக்கு-கிழக்கு இணைப்பு என்றதமிழ், முஸ்லிம், சிங்கள இனங்களின் ஒற்றுமைமேலும் வலுப்பெறும். மாறாக நாடுபிரியும் என்ற தவறான எண்ணம் அற்றுப் போகும்.

**மாநில சுயாட்சி வேண்டும்**

மாநில சுயாட்சிக்கு வித்திட்ட இந்தியா நிமிர்ந்து நிற்பதுபோல, இங்கேயும் தனதுமாகாணங்களில்–காணி, தொழில், தொழிற்சாலை, பொலிஸ், பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, விவசாயம், கல்வி, கலை, பண்பாடு, ஆன்மிகம் தொடர்பான பொறுப்புக்களை மாகாணங்களுக்குக் கையளிக்க 'மனமிரங்கும்–மனமாற்றத்தை' ஏற்படுத்த முனவரவேண்டும். மனமாற்றம் ஏற்படாத பட்சத்தில், இலங்கை என்ற ஒரு நாட்டில் துன்பங்கள் மலிந்த வண்ணமே இருக்கும். இறைவனுக்குப் பூரண சம்மதமாக இருந்தாலும், இங்கிருப்பவர்களோ இதயத்தைப் பூட்டி வைத்திருப்பது போல் அரசியல் தீர்வானது எட்டப்படாத கனிபோல ஆகிவிடும்.

சுருக்கமாகச் சொல்வதானால், எமக்கு மதம்பிடித்திருக்கிறதே அல்லாமல் இதம் தருவதாக இல்லை என்பதைச் செவிகள் சொல்லிய வண்ணம் உள்ளன.

"ஈசனோடாயினும் ஆசை அறுமின்" இது ஒரு மந்திரமாகும். சமயங்களைச் சமயவாதிகளிடம் இருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு சமயங்களுக்கும் உண்டு. "சட்டங்களைச் சிலர் தமது கைகளில் எடுத்துக் கொண்டு, படுகிற பாடு" ஐயோ! என்னத்தைச் சொல்ல? உண்மையான மதவாதி விட்டுக் கொடுப்பவனாக இருக்க வேண்டும். விசாலமான சமூக ஒற்றுமையை ஏற்படுத்துபவனாக இருக்க வேண்டும். தன்னிலும் பெறுமதியானவர்கள் – வெளியிலே அமைதியாகவும்–எளிமையாகவும் –சமயவாதியாகவும் –இல்லறவாதியாகவும் வாழ்வதை ஒப்புக்கொள்ளவும் தன்னை விடுவிக்கவும் தெரிய வேண்டும். எமது நாட்டில் சமயத்தைத் தத்தமது கட்டுப்பாட்டில் போர்த்துக் கட்டி வைத்திருக்கிறார்கள். எப்படிச் சமய விழுமியங்களை அடுத்த சந்ததிக்கு நகர்த்திச் செல்வது என்ற இலக்குக்கு நாமே முட்டுக்கட்டையாக இருத்தல் நல்லதல்ல. சுவாமி விவேகானந்தராக, அப்துல்கலாமாக எத்தனையோ இளைஞர்கள் தோன்றி விட்டார்கள். அவர்களிடம் பொது விடயங்களையாவது ஒப்படையுங்கள். பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைக்க வீண்பயம் வேண்டாம். நீங்கள் திருந்தியது போல, இளைஞர்களும் திருந்துவார்கள், திருத்துவார்கள். இலங்கையை இளஞர்களிடம், படித்த இளைஞர்களிடம், பதம் கெடாத இளைஞர்களிடம் ஒப்படையுங்கள். வடகொரிய ஜனாதிபதியின் துணிவைப் படிப்பினையாகக் கொள்ளுங்கள். இலங்கை பௌத்த, இந்து, முஸ்லிம், கிறீஸ்தவ மக்களாகிய பிரசைகளுக்குச் சொந்தமானது. எல்லோரும் சகோதரர்களாக வாழ வேண்டுமெனில் கூடியபெரும்பான்மைக் கட்சியூடாகப் பெறும் வண்ணம் பிரதமர், ஜனாதிபதி, வேட்பாளர்களை முறையே பௌத்த, தமிழ், முஸ்லிம் என்ற மூவின அடிப்படையில் நிறுத்துவதன் மூலம் மக்களிடையே சமத்துவ, சகோதரத்துவத்தை நிலைநிறுத்த முடியும். இத்தகு சிந்தனை துளிர் விடுமாயின் இலங்கை என்ற நாட்டில் சகவாழ்வு என்ற சமத்துவம் வேரூன்றி வெற்றி கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1169 - சிலியைத் தாக்கிய தாக்கமான புவியதிர்ச்சியில் ஆயிரக் கணக்கானோர் காயமடைந்ததுடன் சாவைத் தழுவியும் கொண்டனர்.

1789 - அமெரிக்க தேர்தல் கல்லூரியால் அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாக ஜோர்ஜ் வோசிங்டன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1797 - ஈகுவோடரைத் தாக்கிய றிபோபம்பா நில நடுக்கத்தில் 40,000 பேர் சாவு.

1945 - 'முக்கிய மாநாடு" சேர்ச்சில் றூஸ்வெல்ற் மற்றும் ஸ்ராலின் ஆகியோரிடையே கிரிமியாவில் தொடங்கியது.

1948 - இலங்கை, பிரித்தானிய பொதுநலவாய நாட்டுக்குள் சுதந்திரம் பெற்றது.

1961 - அங்கோலாவில் சுதந்திரப்போர் தொடங்கியது.

1976 - கௌதமாலா மற்றும் கொண்டூராஸ் நிலநடுக்கத்தில் 22,000 பேருக்கு மேல் சாவு.

1997 - துருப்புக்களைக் காவிச் செல்லும் சிகோர்லி சி.எச். 53 ஹெலிகொப்படர்கள் இரண்டு நடுவானில் மோதி 73பேர் சாவு.

1997 - பாகிஸ்தானின் புதிய பிரதமரானார் நவாப் ஷெரிப்

2003 - பங்காளதேஷிலிருந்து 'பங்கபூமி' சுதந்திரமடைந்ததாக பெங்காளி இந்துக்கள் பிரகடனம்.

2003 - யூகோஸ்லேவியா சமஷ்டிக் குடியரசு உத்தியோகபூர்வமாக சேர்பியா மற்றும் மொன்ரிநிக்ரோ என பெயரிடப்பட்டு, புதிய அரசமைப்பைப் பின் பற்றத்தொடங்கின.

2004 - சமூக வலைத்தளமான முகநூல் FACE BOOK மார்க் சுகர்பேர்க் சினால் தொடங்கப்பட்டது.

2015 - பறக்கத் தொடங்கிய சில நிமிடங்களில் 58 பயணிகளுடன் ட்ரான்ஸ் ஏசியா விமானம் விபத்துக்குள்ளாகி தாய்ப்பேய் ஆற்றில் வீழ்ந்து 31பேர்வரை சாவு.

# சிட்டுக் குருவி




சிட்டுக் குருவியே வா! வா! –உன்
சிறகை எனக்குத் தா! தா!
சிட்டு உன்போல் பறப்பேனே –புவிச்
சிறையை விட்டு வருவேனே!

சின்ன அலகைப் பார்க்கையிலே – நீ
இரையைக் கொத்தித் தின்கையிலே
எண்ணைப் பறவை சிறகடித்தே – இந்தத்
தரையை விட்டுப் பறக்கிறதே!

சிட்டுக் குருவி உன் குரலில் –நான்
மெட்டுப் படிக்கப் போகின்றேன்!
பட்டுப்போன்ற உன் சிறகை – நான்
தொட்டுப் பார்க்க விழைகின்றேன்!


# வர்ணம் தீட்டுவோம்...



# தாய்க்கு உணவிடு

அம்மாவுக்கு அன்று உடம்பு சுகமில்லை. அதனால் கோயிலுக்குப் போகமுடியவில்லை. கதிரவனும் மதிவாணனும் கோயிலுக்குச் சென்றார்கள். கோயிலில் பூசை முடிந்ததும் குருக்கள் எல்லோருக்கும் திருநீறு கொடுத்தார். வந்திருந்த எல்லோருக்கும் பின்னர் பொங்கலும் பிரசாதமும் கொடுக்கப்பட்டன.

கதிரவன் தனக்குக் கொடுக்கப் பட்ட பொங்கல் எல்லாவற்றையும் உண்டு விட்டான். மதிவாணனுக்குத் தன் அம்மாவின் நினைவுவர அம்மாவுக்குக் கொடுக்கலாம் என பிரசாதத்தை மடித்து வீட்டுக்கு எடுத்து வந்தான்.



வீட்டுக்கு வந்ததும் தன் தாயிடம் பிரசாதத்தைக் கொடுத்தான். அம்மா மகிழ்ந்து போனார். கதிரவனைப் பார்த்தார். அவன் ஏதும்கொண்டுவரவில்லை. ஆனாலும் தன் தம்பி கொண்டு வந்ததிலும் தனக்கும் வேண்டுமென அம்மாவிடம் கேட்டு அடம்பிடித்தான்.

அம்மாவுக்குக் கதிரவனின் செயல் பிடிக்கவில்லை. மனம் கோபப்பட்டது. அவனைத்திருத்த வேண்டி ஒரு கதை கூறினார்.

பூமித்தாய்க்கு இரண்டு குழந்தைகள். மூத்தவன் சூரியன். இளையவன் சந்திரன்.

வானுலகத்தில் வீற்றிருக்கும் பார்வதியும் பரமசிவனும் ஒருவிருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். எல்லாத் தேவர்களையும் தேவதைகளையும்விருந்துக்குஅழைத்து இருந்தார்கள். பூமித்தாய்க்கும் விருந்தில் கலந்துகொள்ளும்படி அழைப்பு வந்தது. அன்று பூமித்தாய்க்கு உடம்பு சுகமில்லை. தன் இரு புதல்வர்களையும் அனுப்பினார்.

விருந்துக்குவந்திருந்தஎல்லோரையும் இன்முகத்துடன் பார்வதியும் பரமசிவனும் உபசரித்தார்கள்.

விருந்தில் சூரியன் வயிறு புடைக்கத் தின்றான். உணவுப் பண்டங்களை எட்டி எட்டி எடுத்துத் தின்றான். அவன் அப்படி அவசரமாகத் தின்பதைஎல்லோரும்வினோதமாகப் பார்த்தார்கள். சந்திரனோ தன் தாய் சாப்பிடாமல் இருப்பாரே என்று கவலையுடன் எதுவும் சாப்பிடாமல் உட்கார்ந்திருந்தான். சந்திரன் சோகமாய் இருப்பதைப் பார்த்த பார்வதி சந்திரனை அணுகிக்காரணம் கேட்டார். சந்திரன் தன் தாய்க்கு உடம்பு சரியில்லை என்றுகூறித்தன்தாய்க்கும் உணவு கொடுப்பதானால் தானும் உண்கிறேன் என்று பணிவுடன் கூறினான்.

சந்திரனின் பதிலைக் கேட்ட பார்வதியின் மனம் குளிர்ந்தது. சந்திரனை உணவருந்தச்சொல்லி அவனுடைய தாய்க்கும் உணவு கொடுத்து அனுப்பினார்.

தன்தாயைப் பற்றியோ மற்றவர்களைப் பற்றியோ கவலைப்படாமல் தன் வயிற்றை நிரப்பிக் கொண்டிருந்த சூரியனைப் பார்க்க பார்வதிக்கு எரிச்சல் வந்தது. என்மனம் எரிச்சல் அடையும்படி சூரியன் நடந்து கொண்டதால், சூரியன் வரும்போது எல்லோரும் ஒதுங்கிப் போகட்டும்.

என் மனம் குளிரும்படி சந்திரன் நடந்துகொண்டதால், சந்திரன் வரும் நேரங்களில் அவனைக் கொண்டாடி மகிழட்டும் என ஆசீர்வதித்தார்.

அதனால்தான் சூரியன் உச்சிக்கு வரும்போது வெயிலின் வெப்பம் தாளாமல் 'சே..சே..என் வெயில்' என்று மக்கள் ஒதுங்கி நிழல்தேடிப் போகிறார்கள்.

ஆனால் சந்திரன் வரும்போது எல்லோரும்நிலவைஅண்ணாந்து பார்த்துச் சந்தோசப்படுகிறார்கள். சந்திரன் முழு நிலவாய் மலரும் நாளை பௌர்ணமி என்று அழைப்பார்கள். அன்றுகோயில்களிலும் வீடு களிலும் விசேட பூசைகள் செய்வார்கள். சந்திரனை வணங்குவார்கள்.

சிறு வயதிலிருந்தே தன்தாய் தந்தையைப் பற்றி நினைக்க வேண்டும். அப்போதுதான் பெரியவர்கள் ஆனபோதும் தன் பெற்றோர்களைக்காப்பாற்றும் எண்ணம் மேலோங்கி நிற்கும்.

அம்மாசொன்னகதையைக்கேட்டு கதிரவன் வெட்கித் தலைகுனிந்தான்.

# பொன்மொழிகள்

1. பொறுமையோடு இடைவிடாமல் முயற்சி செய்பவனுக்கே வெற்றி, கைகட்டிச் சேவகம் செய்யக் காத்திருக்கிறது – ஹெக்டர்
2. கடினமான வேலைகளைச் செய்வதில் மகிழ்ச்சியடைபவர்களே எப்போதும் புகழ் பெறுகிறார்கள் –மகாகவி மில்டன்
3. விசிறியை அசைக்காமல் காற்று வராது. வியர்வை சிந்தாமல் உயர்வு வராது – ஜப்பான்
4. உன்னிடமுள்ள திறமை எவ்வளவு சிறிதாக இருந்தாலும் பயன்படுத்தத் தயங்காதே. இனிய குரல் கொண்ட பறவைகள்தான் பாட வேண்டும் என்றால் காடு அமைதியாகி விடும்.– ஹென்றி வேன்டேக்
5. நான் எதையும் சாதிக்கக்கூடியவன் என்ற நம்பிக்கையுடன் நீ இருந்தால், பாம்பின் விசம் கூட உன்னிடம் செயலிழந்துவிடும் – விவேகானந்தர்
6. வாழ்க்கையை வளமாக்க விரும்பினால் காலத்தை வீணாக்காதே. காலத்தால் செய்யப்பட்டதே வாழ்க்கை –ரிச்சர்ட் சாண்டர்ஸ்
7. திறமை எனும் தாயும், உழைப்பு எனும் தந்தையும் பெற்றெடுத்த அழகுக் குழந்தையே புகழ் – பாஸ்கல்
8. எது தேவை? முடிவு செய்ய மனம், வழிவகுக்க அறிவு, செய்து முடிக்கக் கை – கிரேக்கப் –பொன்மொழி
9. ஒருவன் தனக்காக, தன் வாழ்க்கைக்காக உழைக்கும்போது மனிதனாகிறான். ஒரு சமூகத்துக்காக மக்களுக்காக வாழும்போதுதான் அவன் உண்மையான மனிதனாகிறான் –கார்ல் மார்க்ஸ்
10. மனித மனத்தில் தோன்றும் நல்ல எண்ணங்களே இந்த உலகில் மிகச் சிறந்த வைரங்கள் –பீட்டர் மார்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றப்படும் அப்பாவி மக்கள்

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் மத்தியில் ஏமாற்றங்கள் அதிகரித்ததனாலோ என்னவோ, அவர்கள் தற்போது ஏமாளிகளாக ஆகிவிட்டார்கள். இதனால் எமது மக்களை குறிப்பாக ஏழை மக்களைப் பலரும் பல வழிகளிலும் ஏமாற்றும் வித்தையைக் கற்றுக் கொண்டுள்ளார்கள். கடந்த கால போரால் பாதிக்கப்பட்ட எம்மவர்கள் அரசால் மட்டும் ஏமாற்றப்பட்டால் பரவாய் இல்லை, தனிநபர்களாலும் ஏமாற்றப்படுவது தான் விந்தையாக உள்ளது.

அரச மற்றும் தனியார் பேருந்துகளில் பயணம் செய்யும் மக்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு இது பற்றிய அனுபவத்தை எவரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை அவர்கள் பல தடவைகள் அனுபவித்தவையே.

ஆம், வடக்கில் உள்ள தனியார் பேருந்துகளும் சரி அரச பேருந்துகளும் சரி பயணிகளுக்கான மிகுதிப்பணம் கொடுப்பதில் பல இழுபறிகளை மேற்கொள்ளவதாகவும், பலருக்கு மிகுதிப்பணம் கொடுக்காமல் ஏமாற்றி விடப்படுவதாகவும் பயணிகளிடத்தில் இருந்து குற்றச்சாட்டுக்கள் குவிந்துள்ளன.

ஒரு நாள் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் போது அரச பேருந்தின் நடத்துநர் ஒருவர் அரச உத்தியோகம் பார்க்கும் இரு இளைஞர்களிடத்தில் இது போன்ற வேலையை காட்டியிருந்தார். குறித்த இளைஞனிடம் இருந்து பணத்தை பெற்றுக் கொண்ட நடத்துநர் மிகுதிப் பணத்தை கொடுக்காது குறித்த இளைஞன் சாவகச்சேரியில் இறங்கும் போது அந்த மிகுதிப் பணத்தை தருவதாகக் கூறினார். ஆனால் அந்த இளைஞன் விடவில்லை. மிகுதி பணமான 10 ரூபாவைப் பெறுவதற்கு பலமுறை முயற்சித்தான், இறுதியில் நடத்துநருக்கும், குறித்த இளைஞனுக்கும் இடையில் இந்த மிகுதி பணம் தொடர்பான விடயம் கைகலப்பு ஏற்படுமளவுக்குச் சென்றது. இருந்தபோதும் அந்த அரச பேருந்து நடத்துநர் மிகுதிப் பணத்தை கொடுக்கவில்லை.


இறங்கும் போதே தருவேன் என அடாத்தாகக் கூறிவிட்டார். ஆனால் அந்த இளைஞன் படித்தவனாக இருந்தமையால் உடனேயே உரிய இடங்களுக்கு அறிவித்தான். இதன் போதும் பணம் கொடுபடவில்லை. இவ்வாறு படித்த அரச வேலை பார்க்கும் உத்தியோகத்தர்களிடமே இந்தச் சில் மிசங்களை காட்டும் நடத்துநர்கள் ஏழை மக்களைச் சும்மா விடுவார்களா?

வெளிமாவட்டங்களுக்கோ, அல்லது தூர பிரதேசங்களுக்கோ செல்லும்போது பேருந்தின் நடத்துநர்களிடம் பணத்தை கொடுத்தால் மிகுதி பணம் தருவதற்கு பதிலாக பற்றுச் சீட்டின் பின்புறம் மிகுதித் தொகையை எழுதித் தருவார்கள். பலர் அவ்விதம் எழுதிக் கொடுத்ததை மறந்து பேருந்தில் இருந்து கீழே இறங்கித்தான் யோசிப்பார்கள் மிகுதிப் பணத்தைப் பறிகொடுத்து விட்டதாக. இது இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாக இடம்பெறுகின்றது. ஏழைகள், அதிலும் வயது முதிர்ந்தவர்கள் மிகுதி பணத்தைக் கேட்டால் பேருந்தின் நடத்துநர்கள் கூறுவது "இறங்கும் போது தருவேன்"; என்று. யுவதிகள் கேட்டால் பேருந்தால் இறக்கி விடுவது, இளைஞர்கள் கேட்டால்சண்டைபிடிப்பது, பின்னர் அரசஉத்தியோகத்தரைத் தாக்கினார் என்று பொலிஸில் முறையிடுவது போன்ற செயற்பாடுகள் தான் பேருந்துகளில் இடம் பெறுகின்றன. உள்ளூர்ச்சேவைகளில் ஈடுபடும் சிற்றூர்திகள் பயணிகளிடத்தில் 5ரூபா மிகுதி கொடுக்க வேண்டுமானால், அல்லது அதற்குக் குறைந்தளவு பணம் கொடுக்க வேண்டுமானால், அதைக் கொடுக்காமல் ஏமாற்றுகின்றனர். ஆனால் குறித்த இடத்துக்கு செல்வதற்கு குறைந்த பணம் கொடுக்கும்போது உரிய பணத்தைப் பிடுங்கி எடுக்கின்றனர். இவ்வாறு பேருந்தின், சிற்றூர்திகளின் நடத்துநர்கள் ஏழைமக்களை பாடாய்ப் படுத்துகின்றனர். இது அரச அதிகாரிகள், உட்பட அனைவருக்கும் தெரிந்ததே.




எனக்கு நல்ல நினைவிருக்கின்றது, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பதவி ஏற்று ஓரிரு மாதங்களில் கூறினார் பேருந்துகளில் மிகுதி பணம் கொடுக்காத நடத்துநர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாக. இன்று இரண்டு வருடங்கள் முடிவடைகின்றன. என்ன நடவடிக்கை எடுத்துள்ளார் என்பது கேள்விக்குறியே. மிகுதிப் பணமென்றால் சில்லறைக் காசு தானே என்று விட்டு விட்டார் போலும். அது ஒவ்வொரு ஏழையினுடைய உழைப்பு என்பது அவருக்குத் தெரியவில்லையோ என்னவோ?

எந்தத் தயக்கமும் இன்றி நடத்துநர்கள் ஏழைகளை மேலும் மேலும் ஏமாற்றுவதைக் கண்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் ஏன் நடவடிக்கை எடுப்பதற்கு தயங்குகின்றார்கள் என்பது தான் இன்றுவரை புரியாத புதிராக உள்ளது. இதுவும் ஒரு மோசடி என்பதை இந்த அதிகாரிகள் உணரமறுப்பது ஏன்? இதற்கான விடை எப்போது கிடைக்கும்.



ப.அனோஜா

# விஞ்ஞானத்தின் விந்தை

ஆம். எங்கும் விஞ்ஞானம், எதிலும் விஞ்ஞானம். அஞ்ஞானத்தை அன்றி மெய்ஞானம் தருவது விஞ்ஞானம். 21 ஆம் நூற்றாண்டில் நவீன யுகத்தில் காலடி பதித்துள்ள மனிதனின் கண்டுபிடிப்புக்கள் தான் எத்தனை, எத்தனை? பண்டைய நாகரிகங்களான எகிப்திய, பபிலோனிய, கிரேக்க, சிந்துவெளி நாகரிகங்களில் எல்லாம் விஞ்ஞானமானது பல்துறைகளிலும் காலடி எடுத்து வைத்துள்ளதைக் காணலாம். அவை எல்லாம் இன்று பரந்து விரிந்து வியத்தகு நாகரிகமாக மாறிவிட்டது.

கொலம்பஸ், தொலமி போன்ற போர்வீரர்கள் உலக நாடுகளைத் தேடியறிந்தே கண்டுபிடித்தனர். இன்று உள்ளங்கைகளில் உலகைக் காணும் மாயம் நம்மிடத்தேயுள்ளது.

நிலவைக் கண்டும், மழை வெயிலைக் கண்டும் பயந்த மனிதன் இன்று நிலவுக்குள்ளே புகுந்து விளையாடுகின்றான். நீல் ஆம்ஸ்ரோங் நிலவில் கால் வைத்த முதல் மனிதராவார். பறவையைக் கண்டான், விமானம் அமைத்தான். ரைட் சகோதரர்களின் கண்டுபிடிப்பாய் உலகை ஒரு வினாடியில் சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பம் எம் கையில் உள்ளது. இது மட்டுமா? விண்ணைக் கடந்து பல கோடி ஆண்டுகள் தூரத்திலிருக்கும் பால்வெளிக்குள் புகுந்து அண்ட சராசரங்களை அளக்கும் அளவுக்கும் புதிய கோள்கள், கிரகங்கள், நட்சத்திரங்கள், வால் உடுக்கள் போன்றவற்றை எல்லாம் எம் கண்முன்னே காட்டும் அதிசயம் தான் என்னே!

பலகோடி மைல்களுக்கு அப்பால் ஒலிக்கும் ஒலியை நாம் கேட்கும் அலைவரிசையைக் கண்டுபிடித்தார் மார்க்கோனி. இன்றைய மனிதர்களின் கைகளில் விளையாடும் தொலைபேசியை உருவாக்க வித்திட்ட முதல்வராக அலெக்சாண்டர் கிரகாம் பெல் திகழ்கின்றார்.

இது மட்டுமா? கணினியுகம் என்று சொல்லப்படும் இன்றைய வலையமைப்பு, முகப்புத்தகம், மின்னஞ்சல், இணையம் ஆகிய பல்வேறு தொழில் நுட்பங்களையும் புதிய புதிய சாதனங்களையும் மருந்துகளையும் கண்டுபிடித்து மனிதனின் நல்வாழ்வுக்கு உதவுகிறது விஞ்ஞானம். மண் இல்லாது விவசாயம் செய்யுமளவுக்கு விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மேலோங்கியுள்ளன. விவசாயத் தொழில்நுட்ப உபகரணங்கள், இயந்திரங்கள், கிருமிநாசினிகள் போன்றவற்றின் கண்டுபிடிப்பால் புதிய இன உற்பத்திகளை யெல்லாம் தினமொரு பரிசாகப் பெறுகிறோம்.

இவ்வாறாக அரசியல், வானியல், பொருளியல், மருத்துவம்,கைத்தொழில், இல்லறவியல் போன்ற பல துறைகளிலும் மூலை முடுக்கெல்லாம் விஞ்ஞானம் பரந்து, விரிந்து, நுழைந்து விளையாடுகிறது. இவை எமக்கெல்லாம் கிடைத்த வரம் என்று நாம் கூறினாலும், இவற்றைத் தவறாகப் பயன்படுத்தும்போது மனித குலத்துக்குப் பெரும் கேடும் விளைகிறது என்பதை நாம் மறந்து விடுகிறோம். இயற்கை அன்னையின் சமநிலையை ஊடறுப்பதால் அனுபவிக்கும் இன்னல்களும் ஏராளம். எனவே இதை உணர்ந்து விஞ்ஞானத்தின் விந்தையை அளவோடு அனுபவிப்போம், வளமோடு வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் அதிகரிக்கும். உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** புதியவர்களின் நட்புக் கிடைக்கும். தொழில் வளர்ச்சியால் வருமானம் உயரும். குடும்ப விவகாரத்தில் நல்ல தீர்வு கிடைக்கும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**கடகம்:** அடுத்தவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச் சுமைக்கு ஆளாக நேரிடலாம். எதிரியிடம் விலகிநடப்பது நல்லது.

**சிங்கம்:** உங்களின் நற்செயலை மற்றவர்கள் விமர்சிக்கலாம். தொழில், வியாபார நடைமுறையில், புதிய சீர்திருத்தம் செய்வீர்கள். வருமானத்தை விட செலவு அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

**கன்னி:** எதிர்பார்ப்பு இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். தாராள பணவரவு கிடைக்கும். உறவினர்களின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள்.

**துலாம்:** நண்பர்களால் தொல்லைக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரம் வளர கூடுதல் உழைப்பு அவசியம். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது.

**விருச்சிகம்:** நீண்டநாள் கனவு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவார்கள்.

**தனுசு:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும்.

**மகரம்:** அனைவரிடமும் அன்பு காட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தியைத் தரும். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். பணியாளர்களுக்குச் சலுகைகள் கிடைக்கும்.

**கும்பம்:** உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். இலாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் காண்பீர்கள்.

**மீனம்:** வெகுநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பெண்களுக்குத்தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்கள்.

# தங்கர்பச்சானின் ஆவணப்படம்



தனது தாயைப் பற்றி இயக்குநர் தங்கர் பச்சான் 'என் அம்மா' என்ற தலைப்பில் ஆவணப்படம் ஒன்றை உருவாக்கி உள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது:- பிலிம் சுருள்களில் யார் யாரையோ படம்பிடித்துக் கொண்டிருந்த நான், எனது அப்பாவைப் பிடித்து வைத்த படம், ஒன்றே ஒன்று தான். அந்தப் படமும் பதிவு செய்யாமல் போயிருந்தால், பத்துப் பிள்ளைகளைப் பெற்ற அவரது எதிர்காலத் தலைமுறைகளுக்கு அவர் எப்படி இருப்பார் என்பதே தெரியாமல் போயிருக்கும். அதனாலேயே நேரம் கிடைக்கும் போதெல்லாம், அம்மாவின் நடவடிக்கைகளையும், பேச்சுக்களையும் பதிவு செய்து வைத்திருந்தேன்.14 வயதில் தாலி கட்டி, பத்துப்பிள்ளைகளைப் பெற்று வளர்த்தவர். இறுதிவரை மருந்து மாத்திரை சாப்பிடாமல், 91 வயதுவரை தனி அடையாளத்துடன் வாழ்ந்து மறைந்தவர் என் அம்மா. ஒவ்வொருவருக்கும்நினைவில் அதிகப்படியாக நிற்பது அவரவரது தாயின் நினைவுகள். அதற்காகவே 'என் அம்மா' என்ற இந்த ஆவணப் படத்தை எடுத்தேன். இதைப் பார்த்தவர்கள், 'ஐயோ, நான்என் அம்மாவை இதுபோல்எடுத்து வைக்கவில்லையே' என்று புலம்பு கிறார்கள். அவர்கள் உருவாக்கி வைத்த சொத் துக்களை பிள்ளைகளுக்குத் தந்துவிட்டுப் போகும் நாம், அவர்களின் வரலாற்றை எதிர்கால தலைமுறைகளுக்குக் கொடுத்துவிட்டுச் செல்ல வேண்டாமா?. அதனாலேயே 10 நிமிடம் ஓடக் கூடிய இந்தப் படத்தை எடுத்தேன்- என்கிறார்.



'என் அம்மா'

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 9 | | 2 | | 4 | |
| 4 | | 2 | | | 7 | 8 | | |
| | 3 | | | | | | | |
| 6 | | | | 9 | | | | |
| | | 1 | | 5 | | 6 | | |
| | | | | 3 | | | | 4 |
| | 8 | | | | | | 1 | |
| | | 3 | 4 | | | 7 | | 8 |
| | 7 | | 6 | | 9 | | 5 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 1 | 3 | 8 | 5 | 2 | 7 | 9 |
| 9 | 5 | 2 | 1 | 7 | 6 | 4 | 3 | 8 |
| 7 | 3 | 8 | 2 | 9 | 4 | 5 | 6 | 1 |
| 1 | 2 | 6 | 4 | 5 | 7 | 9 | 8 | 3 |
| 8 | 7 | 5 | 9 | 2 | 3 | 1 | 4 | 6 |
| 3 | 9 | 4 | 8 | 6 | 1 | 7 | 2 | 5 |
| 4 | 1 | 7 | 6 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 8 | 3 | 7 | 1 | 2 | 6 | 9 | 4 |
| 2 | 6 | 9 | 5 | 4 | 8 | 3 | 1 | 7 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

தந்தையும் மகளும் ரயிலில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது, திடீரென்று கொள்ளைக் கூட்டம் ஒன்று புகுந்து பயணிகளிடமிருந்து எல்லாப் பொருள்களையும் திருடிச் சென்று விட்டது. "இப்படி எல்லாப் பொருள்களையும் பறிகொடுத்து விட்டோமே" என்று புலம்பினார் அப்பா. "கவலைப்படாதீங்க அப்பா. திருடர்களைப் பார்த்தவுடன் என்னுடைய நகைகளைக் கழற்றி வாய்க்குள் போட்டுக் கொண்டேன்" என்றாள் மகள்.

"அப்ப டியா! உங்கம்மாவைக் கூட்டி வந்திருந்தால் எம்முடைய பெட்டிகளைக் கூடக் காப்பாற்றியிருக்கலாமே" என்று பெருமூச்சுடன் சொன்னார் அப்பா.



## அம்மா இருந்தால்...












மகிழ்ச்சி, புன்னகை என்பது விலை மதிப்பற்ற அணிகலன். அனைவரும் அணிந்து கொள்ளுங்கள் இலவசமாக.

நான் அழைக்காமல் இன்று என்னைத் தேடி வந்திருக்கிறார்கள், உங்களை வாங்க என்று கூட அழைக்க முடியவில்லையே. - பிணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நேற்றைய
# கடலுணவு
விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 800 | 600 |
| நண்டு | 300 | 600 | 300 | 400 | 400 | 450 | – |
| கணவாய் | 650 | 600 | 500 | 600 | 600 | 700 | – |
| பாரை | 600 | 500 | 500 | 550 | 500 | 650 | 400 |
| சுறா | 550 | 500 | 600 | 700 | 600 | 800 | 550 |
| சீலா | 400 | 500 | 400 | 500 | 400 | 550 | 400 |
| விளை | 700 | 500 | 400 | 500 | 500 | 550 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 450 | 350 | 300 | 300 | 400 | 500 | 300 |
| கிழாக்கன் | 550 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 450 | 400 | – | 200 | 450 | 300 | – |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | 250 | 350 |
| சூடை | 200 | 150 | 100 | 200 | 200 | 150 | 80 |
| ஒட்டி | 350 | 300 | 150 | 100 | 300 | 300 | – |
| திருக்கை | 200 | 350 | 200 | 400 | 300 | 250 | 150 |
| மதனம் | 200 | 250 | 180 | 350 | 250 | 400 | 300 |
| கொய் | 150 | 150 | 60 | 100 | 100 | 50 | – |
| பாலை | 500 | 250 | 250 | 370 | 400 | 400 | – |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 300 | 80 | 200 |





## இது புதுசு

பெண்களுக்கான டெனிம் ஜீன்சுகள் அனைத்து வண்ணங்களிலும் அறிமுகமாகியுள்ளன. நீண்ட பாவனையுள்ள டெனிம் துணியில், விரும்பிய அளவில், வர்ணத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இதன் விலை 1200 - 1800 ரூபாக்கு விற்பனை செய்யப்படுகிறது.

# தக்காளித் தோசை

தேவையான பொருள்கள்:
1.பச்சரிசி- 1 கப்
2.தக்காளி- 2
3.துவரம் பருப்பு- 1 மேசைக்கரண்டி
4.வத்தல் மிளகாய்- 3
5.கறிவேப்பிலை- 1 கொத்து
6.பெருங்காயத் தூள்- கால் தேக்கரண்டி
7.உப்பு- தேவையான அளவு



செய்முறை:
பச்சரிசி, வத்தல் மிளகாய், துவரம் பருப்பு, தக்காளி இவற்றை ஒரு பாத்திரத்தில் ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். ஊற வைத்தவற்றுடன் பெருங்காயத்தூள் மற்றும் தேவையான அளவு உப்புச் சேர்த்து மிக்ஸியில் தோசை மாப் பதத்தில் அரைக்கவும். அரைத்த மாவுடன் கறிவேப்பிலையைச் சேர்த்துக்கொள்ளவும்.
பின்னர் அடுப்பில் தோசைக் கல்லை வைத்து எண்ணெய் தடவி ஒரு கரண்டி மாவை தோசைக் கல்லில் பரவலாக ஊற்றவும். மேலே எண்ணெய் ஊற்றி திருப்பி போட்டு எடுக்கவும். இப்போது சுவையான தக்காளி தோசை தயார்...



# சிறு குறிப்புகள்

**பாத்திரங்களில் வீசும் துர்நாற்றத்தை நீக்க...**
அசைவம் சமைத்த பிறகு பாத்திரங்களில் வீசும் துர்நாற்றத்தை நீக்க நுரையுடன் (சோப்பு நுரை) கூடிய கிளீனிங் பவுடரால் தேய்த்த பிறகு பாத்திரங்களை வெயிலில் காய வைத்தால் நாற்றம் நீங்கிவிடும்.

**கத்தரிக்காய் வாடாமல் இருக்க...**
கத்தரிக்காயை ஹாட்பாக்ஸில் வைத்து மூடினால் காய் வாடாமல் நன்றாகவும் நிறம் மாறாமலும் இருக்கும்.

**சாதம் வெண்மையாக இருக்க...**
மழை நீரில் அரிசியை வேகவைத்தால் சாதம் வெண்மையாகவும், மிருதுவாகவும் இருக்கும்

**வாழைக்காய் கெடாமல் இருக்க...**
வாழைக்காயை தண்ணீரில் போட்டு வைத்திருந்தால் ஒரு வாரம் வரை கெடாமல் இருக்கும்.

**ஊறுகாய் கெடாமல் இருக்க...**
ஊறுகாய் கெடாமல் இருக்க சிறிது எண்ணெயைச் சூடாக்கி ஊறுகாய் மேல் ஊற்ற வேண்டும். பிறகு பாருங்கள். ஊறுகாய் கெடாமல் நீண்ட நாள் வரும்.

**பாகற்கரயின் கசப்பைப் போக்க...**
பாகற்காயில் இருக்கும் கசப்பைப் போக்க வேண்டுமானால் காயுடன் உப்புச் சேர்த்து வேகவைத்து நீரை வடிகட்டிய பிறகு பொரியல் செய்தால் கசப்பு நீங்கிவிடும்.

**நாளை**
தை-22
வெள்ளிக்கிழமை
05.02.2016
திதி: துவாதசி
மு.இ.11.56
நட்சத்திரம்:
மூலம் மா. 6.30
ராகுகாலம்:
11.05-12.35 வரை
சுபநேரம்:
06.35-08.05 வரை



நேற்றைய
# மரக்கறி
விலை நிலைவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 40 | 60 | 30 | 30 |
| கத்தரி | 120 | 120 | 100 | 120 | 100 | 120 | 110 | 60 |
| கரட் | 200 | 180 | 240 | 180 | 300 | 200 | 200 | 250 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 35 |
| பயிற்றை | 120 | 100 | 120 | 100 | 100 | 120 | 110 | 130 |
| பாகல் | 120 | 80 | 80 | 100 | 120 | 160 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 60 | 70 | 120 | 50 | 50 |
| பெ.வெங்காயம் | 70 | 80 | 80 | 70 | 70 | 80 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 80 | 100 | 120 | 100 | 120 | 70 | 80 |
| பூசணி | 50 | 70 | 60 | 60 | 60 | 80 | 55 | 70 |
| தக்காளி | 60 | 50 | 100 | 60 | 60 | 100 | 50 | 50 |
| வாழைக்காய் | 70 | 30 | 50 | 60 | 80 | 80 | 45 | 40 |
| கீரை | 30 | 30 | 40 | 10 | 20 | 40 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 40 | 20 | 20 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 300 | 200 | 240 | 250 | 160 | 300 | 180 | 250 |
| புடோல் | 80 | 60 | 80 | 70 | 60 | 120 | 40 | 60 |
| கோவா | 80 | 100 | 100 | 100 | 80 | 120 | 85 | 80 |
| வெண்டி | 120 | 80 | 110 | 80 | 140 | 100 | 75 | 120 |
| போஞ்சி | 100 | 80 | 80 | 100 | 100 | 140 | 65 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 100 | 100 | 120 | 120 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40-50 | 30–40 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 70 | 60 | 80 | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 60 | 80 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 240 | 280 | 240 | 200 | 180 | 300 |
| இராசவள்ளி | 150 | 100 | 160 | 140 | 150 | 150 | 90 | 80 |
| முருங்கைக்காய் | – | – | 800 | 600 | 600 | 800 | 500 | 500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## கட்டுப்பாட்டை

படுகாயமடைந்த நிலையிலும் அவரது மகன் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையிலும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பலாலி வீதி, திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்திக்கு அண்மித்து நேற்று மதியம் 12.50 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. விபத்தில் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியைச் சேர்ந்த பார்த்தீபன் சுவஸ்திகன் (வயது-6) என்ற சிறுவனே தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறார். பார்த்தீபன் கம்சா (வயது-27) என்ற சிறுவனின் தாயார் கைகள் முறிந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்வாறு படுகாயமடைந்த இருவரும் வங்கி ஒன்றின் முகாமையாளரின் மனைவியும் பிள்ளையுமாவர். அவர்கள் சென்ற ஓட்டோவின் சாரதியும் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். பாடசாலையிலிருந்து வீட்டுக்கு மகனை அழைத்துச் சென்றுகொண்டிருந்தபோதே, இந்த விபத்து இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வயாவிளான் 764 வழித்தடத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்த மினிபஸ்சே விபத்துக்குள்ளானது. அந்த வழித்தடத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை வீதி ஒழுங்கு விதிகளை மீறி முந்திச்செல்ல முயன்றமையே விபத்து ஏற்படக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மினிபஸ், அதற்கு முன் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்டதாகவும் அவ்வாறு முந்தும் போது எதிரே - யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி நோக்கிப் பயணித்த ஓட்டோவை மோதித்தள்ளியதாகவும் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தனியார் பஸ் சென்ற வேகத்தைக் கண்டு விபத்து ஏற்படப்போவதனை உணர்ந்துகொண்ட ஓட்டோ சாரதி அதிலிருந்து குதித்துச் சிறுகாயங்களுடன் தப்பினார். அவ்வாறே ஓட்டோவின் பின்னால் மோட்டார் வாகனச்சாரதியும் விபத்து ஏற்படவுள்ளதை உணர்ந்து வாகனத்தில் இருந்து குதித்து சிறுகாயங்களுடன் தப்பினார்.

ஆனால் வேகக்கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ், ஓட்டோவை மோதிச் சென்று சுமார் 100 மீற்றர் தூரத்தில் வீதியோரம் இருந்த வங்கியின் முகப்புடன் மோதியே தனது வேகத்தை கட்டுப்படுத்தி நின்றது.

குறித்த விபத்தின் போது, மோதித் தள்ளப்பட்ட ஓட்டோ, நசிந்து சிதைந்து உருமாறிக் கிடந்தது.

விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்த வங்கி கடந்த வாரமே திறந்து வைக்கப்பட்டிருந்தது. அந்த வங்கியின் முன்பக்கக் கண்ணாடிகள் நொருங்கியுள்ளன. வங்கியின் முன்பாக வைக்கப்பட்டிருந்த நிதி நிறுவனம் ஒன்றின் மின் பெயர் பலகையை மோதித்தள்ளியே உட்புகுந்ததால் வங்கியின் ஏ.ரி.எம் பகுதி மற்றும் வங்கியின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களும் சேதமடைந்தன.

சம்பவ இடத்தில் கூடிய பயணிகள், காயமடைந்தவர்களை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

மினிபஸ் சாரதியை பயணிகள் நையப்புடைத்து, அவரின் வாகன அனுமதிப் பத்திரத்தை பறிமுதல் செய்துள்ளனர். எனினும் அவர் மீது தாக்குதல் தொடர்ந்த போதும் சம்பவ இடத்துக்கு விரைந்த கோப்பாய் பொலிஸார், பெரியளவில் காயங்கள் ஏற்படுவதற்கு முன்பாக சாரதியை அங்கு கூடியவர்களிடமிருந்துமீட்டுகைதுசெய்தனர்.

இதேவேளை, மினிபஸ்ஸும், இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸும் போட்டிக்கு பயணம் செய்ததே விபத்திற்கு காரணம் என்று விபத்து ஏற்பட்டதன் பின்னர் விபத்துக்குள்ளான மினிபஸ் நடத்துநர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், போக்குவரத்துச் சபை பஸ்களும் மினிபஸ்களும் வீதியில் போட்டித் தன்மையுடன் செயற்படுவது வழமையானது என்று தெரிவித்து குறித்த நடத்துநர் வாய்த்தர்க்கம் செய்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். (வ-4,ரி5,106)

## ஹுசேன்

சுவராஜ் இலங்கைக்கு வருகைதரவுள்ளார். பொது எதிரணி என்ற அடிப்படையில் அவரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு இந்தியத் தூதரகத்திடம் கோரிக்கையொன்றை விடுத்துள்ளோம்.

அதேவேளை, எதிர்வரும் 6ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல்ஹுசேனை சந்தித்து, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தொடர்பில் பொது எதிரணியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வாய்ப்பொன்றைக் கோரியுள்ளோம்.

வேறெந்த நாட்டுக்கும் பின்பற்றாத செயன்முறையொன்றை ஐ.நா. மனித உரிமைகள் சபை, இலங்கை தொடர்பில் பின்பற்றி வருகின்றது. அதுமட்டுமல்லாமல், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் உட்பட ஐ.நா. மனித உரிமைகள் சபை, இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிப்படையாகத் தலையிட்டு வருகின்றது.

சையிட் அல்ஹுசேன் தனக்குவழங்கப்பட்ட அதிகாரத்தை மீறி இலங்கைக்கு எதிரான அறிக்கையைத் தயாரித்துள்ளார். அது தொடர்பில் எமது எதிர்ப்பை அவருக்கு வெளிப்படுத்துவதற்காக பொது எதிரணி வாய்ப்பொன்றைக் கோரியுள்ளது.-என்றார்.

## பருத்தித்துறை

என்ற தகவல் ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

பருத்தித்துறை நீதிவான் உத்தியோகபூர்வ இல்ல வளாகத்திலுள்ள கிணற்றடியில், பொலித் தீன் பை ஒன்றினால் சுற்றப்பட்டு வைக்கப்பட்டிருந்த போது, குறித்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் கூறினர்.

இது தொடர்பில் பொலிஸார் தகவல் தருகையில்:-

வெளிச்ச வீட்டுக்குச் செல்லும் இடத்தில் நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லம் உள்ளது. அங்கு கிணற்றடியில் பை ஒன்றில்சுற்றப்பட்ட நிலையில்கைக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

கிணற்றடியைச் சுத்தம் செய்தபோது, பையில் சுற்றப்பட்ட பொதி ஒன்று காணப்பட்டது. இதனையடுத்து குறித்த பொதியினை ஆராய்ந்து பார்த்தபோதே அதனுள் கைக்குண்டு இருந்தமை தெரியவந்தது.

கிணற்றடியைச் சுற்றி பிளாஸ்ரிக்கினாலான நெற் கட்டப்பட்டுள்ளது. அந்த நெற்றில் குறித்த ஒரு பகுதி பிரிந்திருந்தது. அந்தக் கைக்குண்டை யாராவது அங்கு கொண்டு சென்று போட்டிருக்கலாம் என்ற கோணத்தில் விசேட அதிரடிப்படையினரும் பொலிஸாருடன் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், குறித்த கைக்குண்டு மீட்கப்பட்ட இடம், முன்னர் இராணுவத்தினர் வசமிருந்தது. பின்னர் அந்த இடத்தில் பொலிஸார் நிலைகொண்டிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது பொது மக்களின் பாவனைக்கு விடுவிக்கப்பட்ட நிலையில், நீதிவானின் உத்தியோகபூர்வ இல்லமாக வழங்கப்பட்டுள்ளது என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, கைக்குண்டு மீட்கப்பட்டதனையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க தலைமையிலான குழுவினரும் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன், பருத்தித்துறை பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-4,107)

## உடுப்பிட்டி

டிருப்பதாக தெரிவிக்கப்படுகின் றது.

இது தொடர்பாக தெரிய வருவ தாவது

வடமராட்சி, உடுப்பிட்டி நலன்புரி நிலையம் தனியாருக்கு சொந்த மான காணியில் 26 வருடங்களாக இருந்து வருகின்றது. இந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஜே 254 கிராம சேவகர் பிரிவான பலாலி வடக்கு பகுதியையும் ஜே 255 கிராம சேவகர் பிரிவான பலாலி வடமேற்கு பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த குடும்பங்களின் காணிகள் உயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதால், அவர்கள் குறித்த நலன்புரி நிலையத்தில் கடந்த 26 வருடங்களாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அவர்கள் தங்கியிருக்கும் காணி வெளிநாட்டில் வதியும் தனியார் ஒருவருக்கு சொந்தமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் காணி உரிமையாளர், அவசர தேவைக்காக தனது காணியை மீட்டு தம்மிடம் ஒப்படைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்துள்ளார். இது தொடர்பான வழக்கு மார்ச் மாதம் 10 ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட இருப்பதாக அங்கு வதியும் குடும்பங்களுக்கு நீதிமன்றால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நலன் புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு அண்மையில் கூரை தகரங்கள், கரவெட்டி பிரதேச செயலகத்தால் கொடுக்கப்பட்டுள்ளன. குறித்த மக்களில் பலர் வறுமையின் பிடியில் இருப்பதால் அவர்கள் வேறு பகுதிகளில் வசிக்க முடியாத சூழல் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக குறித்த இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதால், அந்தப் பகுதியில் இருந்து தாம் வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதாகவும் அவர்கள் குறிப்பட்டுள்ளனர்.

மேலும், இங்கிருந்து வெளியேற்றப்பட்டால் தாம் நடு வீதியில் தவிக்க வேண்டிய சூழல் ஏற்படும் எனவும் மக்கள் கூறியுள்ளனர்.

எனவே தமக்கு சொந்த காணிகள் இருந்தும், அநாதைகள் போல 26 வருடங்களாக நலன்புரி முகாமில் தங்கியிருப்பதாகவும் தம்மை தமது சொந்த இடத்திற்கு செல்ல ஆவன செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-109)

## பிரதேச

கூட்டத்தை தொடர்ந்து பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங் கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன. சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நேற்று நடத்தப்படுவதாக திட்ட மிடப்பட்டிருந்தது.

காலையில் சாவகச்சேரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட மும், மாலையில் பருத்தித்துறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறவிருந்த நிலையில், நேற்றுக் காலை திடீரென இரண்டு கூட்டங்களும் ஒத்தி வைக்கப்படுவதாக இணைத் தலைவர்களால் பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இணைத் தலைவர்களுள் ஒருவரான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் சுகவீனம் காரணமாக, கூட்டத்தை ஒத்தி வைக்குமாறு மற்றொரு இணைத் தலைவரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவிடம் கோரியிருந்ததாகவும், அதற்கமையவே கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

நேற்றுக் காலை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு வந்திருந்த தென்மராட்சி பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அதிகாரிகள், திரும்பிச் சென்றனர். புதன் கிழமையான நேற்று பொதுமக்கள் தினமாக இருந்த நிலையில், அவற்றை ஒத்தி வைத்து இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இறுதியில் இரண்டும் இல்லாமலே போய்விட்டதாக, பொதுமக்கள் குற்றம் சுமத்தினர். (வ-5-9-109)

## காலி முகத் திடலில்

அணிவகுப்பில் 4,025 இராணுவம், 984 கடற்படை, 1,216 விமானப்படைச் சிப்பாய்களும், 887 பொலிஸார், 674 சிவில் பாதுகாப்புப் படையினர், 7 மாணவர் படையணியின் அதிகாரிகள் உட்பட 438 மாணவ படையணியினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஸ்கொட்லாந்து சென்று நேற்றுக் காலை நாடு திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பங்கேற்பார். அவருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்பார்.

கடந்த வருடம் ஜனவரி எட்டாம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் நடைபெற்ற சுதந்திர தின நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தலைவர் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சியில் மகிந்த ஆதரவு தரப்பு, அரசின் சுதந்திர தினத்தைப் புறக்கணிப்பதாக அறிவித்துள்ளது. இதற்கமைய மகிந்த ஆதரவு தரப்பினர் சுதந்திர தினத்தை தனியாகக் கொண்டாடவுள்ளனர்.

இந்த முறை சுதந்திர நாள் அணிவகுப்பில் விமானப்படையின் மிக் -27 போர் விமானங்களோ, எம்.ஐ-24 தாக்குதல் உலங்கு வானூர்திகளோ பங்கேற்காது என்று விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் சந்திம அல்விஸ் உறுதிப்படுத்தியுள்ளார். போரின் போது தரைத் தாக்குதல்களுக்கு நெருக்கமான சூட்டாதரவை வழங்கிய இந்த உலங்குவானூர்திகளில் பெரும்பாலானவை திருத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, மதுபானக் கடைகள் இன்றைய தினம் மூடப்படும். அத்துடன் இறைச்சிக் கடைகளும் வடக்கில் மூடப்படவுள்ளன. (வ- 5-9-86)

## புதிய

கருத்தறியும் குழுவின் உறுப்பினரும் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவருமான சி.தவராசா தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தமது கருத்துக்களை இந்தக் குழுவில் கட்டாயம் எடுத்துக்கூற முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்குவது தொடர்பில் மக்களின் கருத்தறியும் குழுவினர், கொழும்பு மாவட்டத்தில் முதலாவது பகிரங்க அமர்வை நடத்தியிருந்தனர். இதன் பின்னர் கண்டி மாவட்டத்தில் நடத்தப்பட்டிருந்தது. இந்த அமர்வுகளில் மக்கள் பங்கேற்பு தொடர்பாகக் கேட்ட போதே, தவ ராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:-

கொழும்பில் நடைபெற்ற அமர்வுகளில் தமிழ் மக்களின் பங்களிப்பு மிகக் குறைவு. வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் மற்றும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஆகியோரே முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தனர்.

கொழும்பில் தமிழ் மக்களும் பல்வேறு தமிழ் அமைப்புக்களும் இருக்கின்றபோதும் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கவில்லை.

கண்டி மாவட்டத்திலும் அதிகளவிலான சிங்கள மக்களே முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கின்றனர். கொழும்பு மாவட்டத்துடன் ஒப்பிடுகையில் கண்டி மாவட்டத்தில் ஓரளவு தமிழ் மக்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

1972 ஆம் ஆண்டோ, 1978 ஆம் ஆண்டோ அரசமைப்பு தயாரிக்கப்பட்ட போது, மக்களின் கருத்துக்கள் அறியப்பட வில்லை. தற்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அதனை தமிழ் மக்கள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு குடிமகனும் தங்களுடைய பிரச்சினைகளைச் சொல்கின்றனர். துறைசார்ந்தோர்தான், அரசமைப்பு ரீதியாக மாற்றப்பட வேண்டிய விடயங்களைச் சொல்கின்றனர். மக்கள் சொல்கின்ற பிரச்சினைகளையும் நாங்கள் கவனம் எடுக்கின்றோம். அது அரசமைப்புக்கு எங்கு பிரச்சினைக்குரியதாக இருக்கின்றது என்பதன் அடிப்படையில் அதனை உள்வாங்குகின்றோம்.

எனவே தமிழ் மக்கள் தங்களுடைய பிரச்சினைகளையும் புதிய அரசமைப்பு எப்படியிருக்க வேண்டும் என்பதையும் தெரிவிக்க முடியும். ஒரே விடயத்தை பலர் திரும்ப திரும்பக் கூறுவது நல்லது. எனவே தமிழ் மக்கள் இந்த அமர்வுகளில் அதிகளவு அக்கறை எடுக்க வேண்டும் - என்றார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் கைதிகளின்

ரீதியான தீர்மானமொன்றை சுதந்திர தினத்திலாவது எடுக்கவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஆட்சியில் கானல்நீராகிப்போன தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, இந்த நல்லாட்சியிலாவது ஈடேறும் என்று இதுவரை எதிர்பார்த்துக் காத்திருந்தபோதிலும் ஏமாற்றமும் சலிப்பும் மட்டுமே விடையாகிப் போனதால் தங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதவேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ளது.

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வேண்டிதங்களிடம்முறையிட்டுஉண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த வேளையில், தாங்கள் அவர்களுக்கு அளித்த உத்தரவாதம் எங்களுக்கு ஓரளவுக்கு நம்பிக்கையைக் கொடுத்திருந்தது. நல்லதொரு தொடக்கத்துடன் நல்லெண்ணத்தின் சமிக்ஞை விரைவில் முன்னெடுக்கப்படும் என்று அதீத நம்பிக்கை வைத்திருந்தோம். ஆனால், அதன் பின்னரான செயற்பாடுகள் கடந்த அரசையே மீண்டும் நினைவூட்டுவதாக அமைந்திருந்தன.

தங்களது நல்லெண்ண செயற்பாடு பொங்கல் தினத்தன்று வெளிப்படும் என்று நம்பியிருந்தோம். ஆனால், தேசிய பொங்கல் தினவிழாவில் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமது மக்களின் புண்பட்ட நெஞ்சில் ஈட்டியைப் பாய்ச்சுவதுபோன்ற வார்த்தைகளைப் பிரயோகித்து ஒரு மங்களகரமான நிகழ்வை சோகமிக்கதாக மாற்றிவிட்டுச் சென்றார்.

தாங்களும் அரசியல் கைதிகளை விடுவிக்காமல் ஏமாற்றிவிட்டீர்கள். அவர்களின் உடல், மனநிலை, குடும்பச் சூழல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டும் இந்த நாட்டின் சுதந்திர தினத்தை அவர்களும் கொண்டாடும் வகையிலும் இந்த நன்னாளிலாவது அவர்களை விடுதலைசெய்து உங்களது மனிதாபிமானத்தையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்களைக் கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு பின்னர் சிறைத்தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்ட இளைஞருக்குத் தாங்கள் பெருந்தன்மையுடன் மன்னிப்பளித்து விடுதலைசெய்ததைப் பாராட்டும் அதேவேளை, ஏனையவர்களையும் விடுவித்துஉங்களதுஆட்சிக்கும் பெருந்தன்மைக்கும் நன்மதிப்பை ஏற்படுத்திக் கொள்ள விளைகின்றேன்.

நீண்டகாலமாக சிறையில் வாடும் உறவுகளின் பிரச்சினைக்கு சட்ட அணுகுமுறையூடாக தீர்வைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிக்கல் நிலைமைகள் இருப்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள். அதன் காரணத்தினாலேயே தாங்கள் அரசியல் ரீதியான தீர்மானத்தை எடுத்து மேற்குறித்த இளைஞனுக்கு விடுதலையளித்திருந்தீர்கள்.

என்ன காரணத்துக்காக சிறைத்தண்டனை அனுபவிக்கிறோம் என்பதுகூட தெரியாமல் பலர் சிறையில் வாடுகின்றனர். யார் எத்தகைய குற்றங்களை இழைத்திருந்தாலும் அதற்கான சந்தர்ப்பங்களையும் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு இனியொருபோதும் அவ்வாறு நடப்பதற்கான வாய்ப்பில்லை என்பதையும் ஏற்று அவர்களை விடுதலை செய்வதே, இன்றைய சூழலில் பொருத்தமான செயலாக இருக்கும் என்பதையும் தங்களது மேலான கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

சிறைச்சாலைகளில் இருப்பவர்களும் மனிதர்களே!என்னும் மகுடவாசகத்திற்கமைய அவர்களை மனிதர்களாக மதித்து அரசியல் ரீதியான தீர்மானமொன்றையெடுத்துநல்லெண்ண சமிக்ஞையாக அவர்களது குற்றங்களை மன்னித்து விடுதலைசெய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-சி)

## யாழ்.நீதிமன்றில்

சரணடைந்தார்.

குறித்த வழக்கில் சாட்சிப் பதிவுக் காக நீதிமன்றுக்கு வருமாறு யாழ்.நீதிவான் நீதிமன்று, கெஹலியவுக்கு அழைப்பாணை அனுப்பியிருந்தது. அதற்கு அவர் நீதிமன்றுக்குச் சமுகமளிக்கவில்லை.

இந்த நிலையில் சில தவணைகளுக்கு முன்னரே கெஹலிய ரம்புக்வெலவுக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கும் அவர் நீதிமன்றில் முன்னிலையாகாததோடு, நீதிமன்ற பிடியாணை உத்தரவையும் பொலிஸார் நிறைவேற்றவில்லை.

எனினும் தனது சட்டத்தரணி ஊடாக கெஹலிய நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் காணாமற்போனோரைக் கண்டறியும் நாம் இலங்கையர் என்ற கட்சியின் செயற்பாட்டாளர்களான லலித், குகன் ஆகியோர் காணாமற்போயிருந்தனர். அச்சுவேலி ஆவரங்கால் பகுதியிலுள்ள குகன் தனது வீட்டுக்கு லலித்தினை யாழ். பஸ் நிலையத்திலிருந்து அழைத்துச் செல்லும் வழியில் இருவரும் காணாமற் போயிருந்தனர்.

குறித்த இருவரும் காணாமற்போனமை தொடர்பில் குகனின் மனைவியாலும் லலித்தின் தந்தையாலும் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆட்கொண்டர்வு மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த மனு மீதான விசாரணைகளில் சாட்சியப் பதிவு யாழ்.நீதிவான் மன்றில் இடம்பெற்று வருகிறது. அதன்படி 4 ஆவது சாட்சியாக கெஹலிய ரம்புக்வெல குறிப்பிடப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அவர் சாட்சியத்துக்கு அழைப்பாணை ஊடாக நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவர் நீதிமன்றுக்கு வருவதனைத் தவிர்த்து வந்துள்ளார். இதனால் அவருக்கு நீதிமன்று பிடி யாணை பிறப்பித்தது.

எனினும் நேற்றுச் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் முன்னிலையானார். அதன் போது கடந்த தவணை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் இலஞ்ச விசாரணைக் குழுவால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 2 ஆவது சந்தேக நபராக தனது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதனால், அந்த வழக்குக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதனால் யாழ்.நீதிமன்றுக்கு வரமுடியவில்லை என்று தனது சட்டத்தரணி ஊடாக மன்றிடம் தெரிவித்தார்.

இதனையடுத்தே அவர் மீதான பிடியாணை ரத்துச் செய்யப்பட்டது. அதன் பின்னர் குறித்த வழக்கில் சாட்சியப் பதிவு எதிர்வரும் மே மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி நுவான் போபகே, சதுர வெத்தசிங்க ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

நீதிமன்றுக்கு வெளியே வந்த கெஹலியவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே லலித், குகன் பற்றிய கருத்தை முன்வைத்தேன். அது பற்றிய மேலதிக விபரம் எதுவும் எனக்குத் தெரியாது. எனினும் இந்த விடயம் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் அது பற்றிக் கருத்து வெளியிட முற்படவில்லை - என்றார்.

(வ-4,103,106)

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு 04 . 09 . 1960



இறப்பு 31 . 01 . 2016

### திருமதி கமலா சிறீதரன்

யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலா சிறீதரன் 31.01.2016 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் முத்துக்குமாரசாமி(இளைப்பாறிய R.M.P) காலஞ்சென்ற பரமேஸ்வரி(பகவதி) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராசையா-தங்கலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் சிறீதரன் அவர்களின் பாசமிகு மனைவியும் விமலேந்திரன், மோகனச்சந்திரா, கிரிஜா, ஜெயந்தி,ராஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகேசன் (கனடா) காலஞ்சென்றவர்களான பவானி, இரட்ணசுந்தரம், இராதாதேவி, பத்மநாதன், சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

லண்டன்

தகவல்:
கணவர் (Sri)

00447904756484

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி கிருஷ்ணாவைகுந்தவாசன்



காரைநகர் அரசடிகாடு, கதிர்வேலாயுத சுவாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மற்றும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி கிருஷ்ணா வைகுந்தவாசன் கடந்த 20.01.2016 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கிருஷ்ணாவைகுந்தவாசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணப்பிள்ளை - லக்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காண்டீபனின் பாசமிகு தாயாரும் அனிதாவின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், செல்வ நாயகம், விஸ்வலிங்கம், நடராசா, தேவராசா மற்றும் சரஸ்வதி, அருள்பிரகாசம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லண்டனை வதிவிடமாகக் கொண்ட வீணா, மிஷா, சோபிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 021 222 4068 - சகோதரி ([illegible] - பாலசிங்கம்)
077 617 6895 - சகோதரன் (அருள்பிரகாசம்)

### திருமதி கமலாம்பிகை வேலாயுதபிள்ளை



அன்னசத்திர ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை வேலாயுதபிள்ளை நேற்று முன்தினம் (02.02.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - விசாலாட்சி தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், நாகரத்தினம், மதியாபரணம், மகேஸ்வரி, பாக்கியலட்சுமி, அமிர்தாம்பிகை ஆகியோரின் சகோதரியும் சாரதாதேவி, சத்தியபாமா, விவேகானந்தன் ஆகியோரின் தாயும், விமல்நாதன், பாலரட்ணசிங்கம், மகேஸ்வரி ஆகியோ ரின் மாமியாரும் கலைச்செல்வி,கிருபாகரன், சுரேந்திரன் - உமையாள், கலைவாணி - சிவரஞ்சன், சுபாசினி - பாலவிக் னன், பார்த்திபன், காண்டீபன், Dr.சிவசங்கர் - யூலி, Dr.அருட் குமரன், Dr.சந்திரகுமார் - கஷாந்தி, Dr.பிரதீபன் - மின்னா, கோகுலன், குகன் - கலைமகள், மணிமேகலா, திருமகள் ஆகி யோரின் பேர்த்தியும் விக்காஸ், வர்ஷன், கீர்த்தனா, அக்ஷயா, அலிஷா, அஸ்வின், அஞ்சலி, யூட், ரூபன், ஆரியா, லிங்கன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2018) வியாழக்கிழமை பிற்பகல் 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

7/3, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொடர்பு: 021 222 8220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

ஒவ்வொரு வெள்ளியும் ஞாயிறும் இராசா கந்தசாமி. அவர்களின் விருப்பப்படி மாதகல் துரட்டியம்பதி ஆஞ்சநேயர் ஆலயத்தில் அன்னதானம் இடம் பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

www.ullam.net



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## இராசா கந்தசாமி

**04.02.2016 வியாழக்கிழமை மதியம் 12.30 மணி**

மாதகல் துரட்டியம்பதி ஆஞ்சநேயர் ஆலய தர்மகர்த்தாவும் , கொழும்பு 4ம் குறுக்குத்தெரு வெங்கடேஸ்வரா கடையின் உரிமையாளருமான இராசா கந்தசாமி அவர்களின் 1ம் ஆண்டு நினைவுதினத்திற்காக 04-02-16 வியாழக்கிழமை அன்று அவரது 6 பிள்ளைகளும் இணைந்து துரட்டியம்பதி ஆஞ்சநேயர் ஆலயத்திலும், ஆலயத்திற்கு வர முடியாதவர்களுக்கு பக்கத்தில் இருக்கும் தண்ணீர்பந்தல் கட்டடத்திலும் மதியபோசன உணவு வழங்க இருப்பதால் அனைவரும் இந்த நினைவு தினத்திற்கு வந்து மதியபோசன உணவில் கலந்துகொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

6 பிள்ளைகள்

பெரியார் இராசா கந்தசாமி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை கீழ் இருக்கும் முகவரியில் பார்வையிடலாம்.
www.ullam.net

தொடர்புகளுக்கு - கந்தசாமி சேகர்
தொலைபேசி இலக்கம் - 004561736491
டென்மார்க்

## ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி
**தங்கரத்தினம் தவராசா**

திதி : ஏகாதசி (04.02.2016)



தாயின்மடியில்
02.10.1947

இறைவனடியில்
16.01.2015

எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நினைவு தினமான இன்று (04.02.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாவிட்டபுரம்வீதி, குருசுமதவடி,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி உத்தரியம்(நல்லம்மா) நாகேந்திரம்

மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 2 ஆம் வட்டாரம், அல்லைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உத்தரியம் (நல்லம்மா) நாகேந்திரம் அவர்கள் 30.01.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்பு - பிலிப்பான் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளியம்மை தம்ப தியரின் அன்பு மருமகளும் வல்லிபுரம் நாகேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும் அருமை நாயகம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் அன்ரன்நாயகம் (லண்டன்), அருள்நாயகம் (பிரான்ஸ்), வேத நாயகம், மேரிஅனிற்றா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மேரி பிறிஜ்சற் (ராஜீ-பிரான்ஸ்), நீற்றா, வதனி (லண்டன்), கிறேஸ் (பிரான்ஸ்), பிலோமினா, ஆனந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்றவர்களான மாகிறேட், திரேசம்மா, அல்பிரட்ரம்மா மற்றும் ஞானம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் அருள்ஞானத்தின் சிறிய தாயாரும் கிபின், பொலின், ஜோஸ்லின், மதுஷன், தனுஷன், தருசலா, டிலான், டிஜிவன், டனி, யுவானா, ஜெனினா, ஜெனிஷியா, சதீஸ்குமார காலஞ்சென்ற விஜிதா மற்றும் சங்கீத், வினுஜன், விந்துஜன், ஜொனார்த்தன், அஸ்வின் யூலியான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (04.02.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அல்லைப்பிட்டி புனித பிலிப்நேரியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு, அல்லைப்பிட்டி பொது சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2 ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

T.P No :
077 593 9044, 0033 142058935

தகவல்:
குடும்பத்தினர்.


## குற்றமிழைப்பவர்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகனான யோஷித ராஜ பக்ச கைது செய்யப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கெஹலிய இதனைக் கூறியுள்ளார்.

காணாமற்போன லலித், குகன் தொடர்பான வழக்கு விசாரணையில் சாட்சியமளிப்பதற்காக, முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றுக்கு வந்திருந்தார். அதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

நாட்டில் சட்டம் என்ற ஒன்று இருந்தால், அதன்படி நடக்க வேண்டும். உலகிலுள்ள நீதித்துறையில் செயற்திறன்மிக்க நீதித்துறையாக இலங்கை நீதித்துறை உள்ளது.

யோஷித ராஜபக்ச கைது செய்யப்பட்ட விடயம் தெரிந்த ஒன்றுதான். கடந்த வருடம் ஜனவரியில் இடம்பெற்ற குற்றச்சாட்டுடன் தொடர்பு பட்டதாகஅவர்கைது செய்யப்பட்டுள்ளார். சிஎசிஎஸ்என் என்ற மின்னஞ்சலைச் சான்றாக வைத்து அவர்கைது செய்யப் பட்டுள்ளார்.

நிதி மோசடி தொடர்பான குற்றச்சாட்டில் அவர்கைது செய்யப் பட்டமையும் அனைவருக்கும் தெரியும். யார் குற்றம் செய்தாலும் சட்டத்தின் முன் தண்டனை பெற்றுத்தான் ஆக வேண்டும். சட்டத்தின் பிரகாரமே தண்டனை வழங்க வேண்டும் -என்றார்.

(வ-4)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
15 . 12 . 1945



மறைவு
04 . 01 . 2016

**அமரர் லீலாவதி நடராசா**

கடந்த 04.01.2016 இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை நடைபெற்று, 07.02.2016 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

பூநாரி மரத்தடிலேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

## நினைவலைகள்

20ஆம் ஆண்டு 10ஆம் ஆண்டு

தோற்றம்
13.07.1922



தோற்றம்
07.11.1927

மறைவு
01.02.1996

மறைவு
25.01.2006

அமரர்
**தம்பிப்பிள்ளை சின்னராஜா**
(உரிமையாளர் - ராஜா கிறீம் ஹவுஸ்)

அமரர்
**சின்னராஜா சரஸ்வதி**

அகல் விளக்காய் ஒளிதந்து
ஆலமரம் போல் தழைத்தோங்கி
இகமதில் செழிப்புடன் வாழ்வதற்கு
அன்பின் வழிகாட்டிய எம் தெய்வங்களுக்கு
அஞ்சலிகள் பல...

(68474)

என்றென்றும் உங்கள் நினைவுகளில் **குடும்பம்** (ராஜா கிறீம் ஹவுஸ்)

## மரண அறிவித்தல்



### சின்னையா மயில்வாகனம்

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

நெல்லியடி பொன் கந்தையா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா மயில்வாகனம் அவர்கள் 02.02.2016 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற பத்தினிப்பிள்ளையின் அன்புக்கணவரும் மகேந்திரன் (இந்தியா), கௌசலியா, மனோகரன் (ஜேர்மனி), மகேஸ்வரன், மதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜேஸ்வரி (இந்தியா), ராசேந்திரம் (NSR நெல்லியடி), வசந்தி (ஜேர்மனி), செல்வரதி, ரேணுகா ஆகியோரின் மாமனாரும் வைஷாலி, கௌதம், தர்மிதா, தயானந், தயானி, ஹர்சிகா, மாதங்கி ஆகியோரின் அன்புப்பேரனும் ஜிஸ்ணுவின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், சபாபதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன் கந்தையா வீதி, நெல்லியடி. தகவல்: **குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுடன்

கையெழுத்திட்டுள்ளது.

அலரி மாளிகையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஜனநாயக கட்சி சார்பில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவும் இந்த கூட்டணி உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

இதேவேளை, ஐக்கிய தேசிய கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக பீல்ட் மார்சல் சரத் பொன் சேகா நியமிக்கப்படவுள்ளதாகவும், அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளியான போதும், அதுபற்றி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்று இரண்டு கட்சிகளும் தெரிவித்துள்ளன.

எனினும், வரும் 8ஆம் திகதி நடக்கவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்குவது குறித்து முடிவெடுக்கப்படும் என்று கூறப்படுகிறது. (வ)


## மரண அறிவித்தல்கள்



### தியோகுப்பிள்ளை மரியதாஸ்

(முன்னாள் உரிமையாளர் தாசன்ஸ் சோடா கொம்பனி)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியோகுப்பிள்ளை மரியதாஸ் கடந்த (02.02.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோகுப்பிள்ளை - மாகிறேட் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பெர்ணதேத் அவர்களின் பாசமிகு கணவரும் ஜெகதாசன் (ஜேர்மன்), யோகதாசன் (லண்டன்), அமலதாசன் (கனடா), அமலதேவி (உயரப்புலம் ஆனைக்கோட்டை), பிறேமதாசன் (சுவிஸ்), விமலாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிள்ளையம்மா, டோட்டி, அனற் ஐராங்கனி, அன்ரனிராசன், சாமினி, ராஜரட்ணம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜெயந்தினி, ஜெமிலா, ஜெனிற்றா, யூலியன், யுஸ்ரீனா, தியோறன், திபூஸன், தினூஷன், அனுஷிகா, ஷனுஜா, மேரிஅனோஜா, றோச்டனிஸ்ரன், நிறுஜா, டினுஷன், டினுஷா, ஜெசின்ராஜ், ஜெஸ்மன்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் நேசம், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை மற்றும் ஜேசுதாசன், ஞானசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் உயரப்புலம் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக காக்கை தீவு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.

### சரவணமுத்து லிங்கேஸ்வரி



பிறப்பு 16 . 11 . 1944 — இறப்பு 02 . 02 . 2016

அல்வாயைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து லிங்கேஸ்வரி 02.02.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பாக்கியத்தின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும், தேவலிங்கராஜா, ஜெயந்தா, வசந்தன், றமேஸ் (சவூதிஅரேபியா) ஆகியோரின் அன்புத்தாயும், பகீரதன் (இலங்கை மின்சாரசபை), சரோஜினிதேவி, சிவச்செல்வி, சுகந்தி ஆகியோரின் அன்பு மாமியும், கஸ்தூரி, கரிகாலன், பபிலா, நிறஞ்சன், தனஞ்சன், தனுசன், தர்மிலன், வாஹினி, கர்னிஹா, கர்சிஹா, கனிஸ்ரன், வசிகரன், கவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கடவைப்புலம் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 069 7161, 077 632 2437

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை சண்முகரத்தினம் (சண்)



காரைநகர் களபூமி பாலாவோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சண்முகரத்தினம் நேற்று (03.02.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மற்றும் தகோமணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், ரோகினியின் (யாழ்ரன் கல்லூரி மாணவி) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அஞ்சனா தேவியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02. 2016) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவோடை,
களபூமி, காரைநகர்.

தகவல்: குடும்பத்தினர்.
T.P: 077 433 9915



பிறப்பு 1940 . 11 . 14 — இறப்பு 2016 . 02 . 03

### திருமதி நல்லம்மா சிதம்பரப்பிள்ளை

மீசாலை மேற்கை பிறப்பிடமாகவும் பூநகரி ஆலங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சிதம்பரப்பிள்ளை நேற்று (03.02.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக சாமிப்புலம் பூநகரியில் அமைந்துள்ள 5 அடிவான் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

### திருமதி இராசம்மா முருகையா



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா முருகையா நேற்று (03.02.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான வைரவப் பிள்ளை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற முருகையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லநாதனின் (ஓய்வு பெற்ற கூட்டுறவு பரிசோதகர்) பாசமிகு சகோதரியும், கணே சானந்தன் (ஆசிரியர், யா/புத்தூர் சோமஸ் கந்தா கல்லூரி), சிவானந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், வலி தெற்கு பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தாயும், க. சிவரஞ்சினி (அதிபர், யா/புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலயம்), சி.பகீரதி (ஆசிரியர் கிளி/அக்கராயன் ம.வி) ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கவி (மாணவி யா/இந்து ஆரம்ப பாடசாலை) லக்சகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.02.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பிப்பிள்ளை
[illegible]
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
T.P: 021 221 3152

தகவல்:
மு. கணேசானந்தன் (மகன்)
மு. சிவானந்தன் (மகன்)

## மரண அறிவித்தல்கள்

### மரியாம்பிள்ளை பத்திராசா



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா R.D.S றோட், பட்டைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை பத்திராசா நேற்று (03.02.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (04.02. 2016) வியாழக்கிழமை வேப்பங்குளம் சூசையப்பர் ஆலயத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நெடுங்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன முகாமையாளரும், ஊழியர்களும் - முல்லைத் தீவுக்கிளை.

### திருமதி கனகம்மா கந்தையா



புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா கந்தையா நேற்று (03.02.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையாவின் அன்பு மனைவியும் இராசம்மா, பேரின்பதாஸ், ஜெயக்குமார், யோகநாதன், வதனி, வனிதா ஆகியோரின் அன்புத்தாயாரும் கார்த்திகேசு, சறோஜாதேவி, செல்வராணி, பாலேஸ்வரி, சுந்தரலிங்கம், திலகநாதன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முனையப்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.



மலர்வு 20.06.1932

உதிர்வு 03.02.2016

### செல்லையா சோதிமணி

உரும்பிராய் மேற்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சோதிமணி நேற்று (03.02.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான செல்லம்மா, நவரத்தினம் மற்றும் சுந்தரலிங்கம் காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ் சென்ற இராசையா மற்றும் புவனேஸ்வரி, சர்வேஸ்வரி காலஞ்சென்ற நவரத்தினம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

மானிப்பாய் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்: பெறாமகன்
நவரத்தினம் பிறேமகுமார்
சகோதரி (அச்சா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பந்தப் பட்டியலில் நீக்கப்பட்டமை ஏமாற்றம் என்கிறார் தீவுகளின் சமி


இந்த வருடத்துக்கான மேற்கிந்தியத் தீவுகளின் வீரர்களின் ஒப்பந்தப்பட்டியலில் இருந்து தன்னை விலக்கியமை பெரும் ஏமாற்றம் தருவதாக தீவுகளின் ரி-20 தலைவர் சமி தெரிவித்துள்



ளார்.

கடந்த சில நாள்களுக்கு முன் மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வீரர்களின் ஒப்பந்தப் பட்டியலை வெளியிட்டது. இதில் டேரன் சமி இடம்பெறவில்லை.

இதுகுறித்து சமி தெரிவிக்கையில்:- மேற்கிந்தியத் தீவுகளின் ஒப்பந்தப் பட்டியலில் எனது பெயர் இடம் பெறாதது பெரிய ஏமாற்றமளிக்கிறது. கடந்த 8 ஆண்டுகளாக நான் வீரர்கள் ஒப்பந்தப் பட்டியலில் இடம் பிடித்து வந்தேன். ரி-20 தலைவராக இருக்கும் பொழுது ஒப்பந்தத்தில் இடம்பெறாமை நம்பமுடியாத வகையில் உள்ளது. ஆனால், இது என்னுடைய முடிவல்ல- என்றார். (ம)



# ஆஸியை சுருட்டியது நியூசி. முதல் ஆட்டத்தில் அபாரம்

ஆஸ்திரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் 159 ஓட்டங்களால் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி தொடரில் 1:0 என்று முன்னிலை வகிக்கிறது நியூசிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்ய ஆரம்ப வீரர்களாக மக்கலம் மற்றும் குப்தில். வழக்கம்போல் சிறப்பித்தார் குப்தில். சிறிய இடைவேளையின் பின்னர் ஆஸியை மிரட்ட ஆரம்பித்தார் மக்கலம். 10 பந்துப்பரிமாற்றங்களில் 70 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து. 44 ஓட்டங்களுடன் பல்க்நெரின் பந்தில் போல்ட் ஆனார் மக்கலம். வில்லியம்சன் ஓர் ஓட்டத்தைத்தானும் நிறைவு செய்யவில்லை. குப்தில் - நிக்கொல்ஸ் இணை நியூசிலாந்துக்கு மேலும் பலம்சேர்த்தது. இணைப்பாட்டமாக நூறு ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் 10 ஓட்டங்களால் சதத்தைத் தவறவிட்டார் குப்தில். 51 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் நிக்கொல்ஸ். கிடைத்த ஓரிரு பந்துகளை யும் சிறப்பாகப் பயன்படுத்தி பின்வரிசைவீரர்கள் மிரட்ட முடிவில் நியூசிலாந்து 307-8. பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கசில்வூட், பல்க்நெர், மிச்செல் மார்ஷ் மூவரும் தலா இரு இலக்குகளையும் கஸ்ரிங்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு இரண்டாவது பந்துப்பரிமாற்றத்திலேயே இலக்குச் சரிவு ஆரம்பமாகியது. ஐந்தே ஓட்டங்களுடன் சோன் மார்ஷை வீழ்த்தினார் ஹென்றி. வோர்ணர், சிமித் இருவரும் பதின்மத்தைத் தாண்டவில்லை. பெய்லி இரண்டு ஆட்டங்களுடன் ஹென்றியிடம் வீழ்ந்தார். மக்ஸ்வெல், மிச்செல் மார்ஷ் இருவரும் ஓட்டம் எதனையும் பெறாமல் போல்ட்டின் பந்தில் வீழ்ந்தார்கள். தற்பொழுது ஆஸ்திரேலியா 41-6. வேட், பல்க்நெர் இணை துவண்டு கிடந்த ஆஸியை தூக்கிநிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. சிறிது வெற்றியும் கண்டது. இருவரும் முப்பது ஓட்டங்களைத் தாண்டினர். இணைப்பாட்டமாக 79 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த வேளையில் வேட் ஆட்டமிழந்ததுதான் தாமதம் 148 ஓட்டங்களில் சுருண்டது ஆஸ்திரேலியா. பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக போல்ட், ஹென்றி இருவரும் தலா மூன்று இலக்குகளையும் சான்நெர் இரு இலக்குகளையும் மில்னி, அன்டர்சன் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## ஐ.பி.எல். தொடரில் டோனியை எதிர்ப்பது வேடிக்கையாக இருக்கும் - ரெய்னா


ஐ.பி.எல். தொடரில் தானும் டோனியும் வெவ்வேறு அணிகளில் விளையாட இருப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கும் என்று ரெய்னா தெரிவித்துள்ளார்.

ராஜ்கோட் அணியின் பெயர் அறிவிப்பு விழா டெல்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அந்த அணிக்கு குஜராத் லயன்ஸ் என்று பெயரிடப்பட்டுள்ளது. ரெய்னா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பெயர் அறிவிக்கப்பட்ட பிற்பாடு டெல்லியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே ரெய்னா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ரெய்னா மேலும் தெரிவிக்கையில் - நாம் இருவரும் ஐ.பி.எல். தொடரில் வெவ்வேறு அணியாக இருப்பது எப்படி இருக்கும் என்று ஆஸ்திரேலியாவில் வைத்து பேசிக்கொண்டோம். அது ஒரு வேடிக் கையாக இருக்கும். டோனியை ஜடேயா ஆட்டமிழக்கச் செய்தால் மகிழ்ச்சியில் துள்ளி குதிப்பதை கற்பனை செய்து பாருங்கள். அதேபோல், நான் துடுப்பெடுத்தாடும் போது டோனி இலக்குக் காப்பாளராகப் பணி புரிவதையும் எண்ணிப் பாருங்கள். கடந்த 8 ஆண்டுகளாக நான் சென்னை அணிக்காக விளையாடியுள்ளேன். என்னையும் டோனியையும் ஒன்றாக பார்த்த ஐ.பி.எல். உலகம் இந்த வருடம் வெவ்வேறாக பார்க்கவுள்ளது-என்றார். (ம)



## தரப்படுத்தலில் பத்துக்குள் இல்லாதமை ஏமாற்றமே என்கிறார் வோஸ்னியாக்கி

புதிதாக வெளியான பெண்களுக்கான ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் இல்லாதமை ஏமாற்றம் தருவதாகத் தெரிவித்துள்ளார் வோஸ்னியாக்கி.

பெண்கள் ஒற்றையர் பிரிவு தரப் படுத்தல் நேற்றுமுன்தினம் வெளியானது. வழக்கம்போல செரீனாவில்லியம்ஸ் முதலிடத்தில் தொடர்கிறார். ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரை வென்ற கெர்பர் சடுதியான முன்னேற்றம் கண்டு இரண்டாவது இடத்தைப் பிடித்தார். கடந்த மூன்று வருடங்களாக முதல் பத்து இடங்களுக்குள் இடம்பெற்றுவந்த வோஸ்னியாக்கி இந்தத் தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் இடம் பிடிக்கவில்லை.

தரப்படுத்தலில் ஏற்பட்ட பின்னடைவு தொடர்பாக வோஸ்னியாக்கி தெரிவிக்கையில்: - ஆஸ்திரேலியத் தொடர் எனக்குச் சிறப்பாக அமைய வில்லை. ஆனால் இந்த ஒரு தொடரில் ஒட்டுமொத்த தரப்படுத்தலும் தங்கிவிடவில்லை. அடுத் தடுத்த தொடர்களில் சாதித்தால் நிச்சயமாக ஏற்றம்காணமுடியும். அடுத்தடுத்த தொடர்களில் வென்று எனது இருப்பைத் தக்கவைப்பேன்- என்றார். (ம)

## விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் நாளை வவுனியாவுக்கு பயணம்

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தானின் அழைப்பை ஏற்று விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் நாளை வெள்ளிக்கிழமை வவுனியாவுக்கு பயணம் செய்யவுள்ளார்.

வவுனியா பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் வவுனியா மாவட்ட விளையாட்டு வீரர்கள், விளையாட்டுக் கழகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. இதனால் வவுனியா மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்துவோர் மற்றும் விளையாட்டு வீரர்கள் நாளை காலை 9 மணிக்கு வவுனியா பிரதேச செயலக கேட்போர் கூடத்துக்கு வருகை தந்து தமது பிரச்சினைகள் தொடர்பாக தெரியப்படுத்தி, வவுனியாவின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் தெரிவித்துள்ளார். (ம-402)

## டைமனின் தொடர்கள்

முல்லைத்தீவு, பெப். 4

முள்ளியவளை மாமூலை டைமன் விளையாட்டுக் கழகத்தினரால் வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடர், துடுப்பாட்டத் தொடர் என்பவற்றுக்கான விண்ணப்பங்கள் குறித்த கழகத்தினால் கோரப்படுகின்றன.

மார்ச் மாதம் டைமன் வி.கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இந்தத் தொடர்களில் பங்குபற்ற விரும்பும் அணிகள் இந்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-102)

## சென்.நீக்கிலஸ் அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 4

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் சென்.நீக்கிலஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான இந்தத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இதில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலைகண்ட ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், பெப். 4
சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் வடதாரகை அணியை எதிர்த்து யுனிபைட் அணி மோதிய ஆட்டமும், சக்தி அணியை எதிர்த்து அம்மன் அணி மோதிய ஆட்டமும் சமநிலையில் முடிவடைந்தன.

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வடதாரகை அணியை எதிர்த்து யுனிபைட் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா 2 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. பிறிதொரு ஆட்டத்தில் சக்தி அணியை எதிர்த்து அம்மன் அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேரமுடிவில் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)

# கரவெட்டி ஸ்ரார் வி.கழகத் தொடரில் சுப்பர் 8 சுற்றுக்கான அணிகள் தெரிவு

கரணவாய், பெப். 4
கரவெட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வடமராட்சி ரீதியாக நடத்திய அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் துடுப்பாட்டத் தொடரில் சுப்பர் 8 சுற்றுக்கான அணிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

24 அணிகள் பங்குபற்றிய இந்தத் தொடரில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம், கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகம், நெடியகாடு யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை யுத் விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை உதயசூரியன் விளை யாட்டுக் கழகம், அரசடி ஸ்போட்ஸ் விளையாட்டுக் கழகம், தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம் மற்றும் நெல்லியடி சுப்பர் விளையாட்டுக் கழகம் என்பன சுப்பர் 8 சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டன.

இதில் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் அரசடி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு யங்ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து இடம்பெறும் ஆட்டத்தில் பருத்தித்துறை யுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 4
*யங்ஸ்ரார் வி.கழகம்*
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து எ.பி.சி அணி மோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழகம்**
ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் அணி மோதவுள்ளது. மாலை 5.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. அணி மோதவுள்ளது. (ம-23)



# சம்பியனானது ஈகிள்ஸ்

## பண்டாரவன்னியன் கிண்ணத் தொடரில்

யாழ்ப்பாணம் பெப். 4
பண்டாரவன்னியன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் ஈகிள்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் பண்டாரவன்னியன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில், கடந்த சனிக்கிழமை பலப்பரீட்சை நடத்தியது. முதல்பாதியின் முடிவுவரை கோல்கள் எவையும் பதிவாகவில்லை. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே இரண்டாம் பாதியும் நகர்ந்துகொண்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்கள் வரை கோல்கள் பதிவுசெய்ய முடியாதுபோக சமநிலைத் தவிர்ப்பில் கிண்ணம் தீர்மானிக்கப்படும் நிலை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் ஈகிள்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23)

# கல்வியுடன் விளையாட்டும் இணைந்தாலே ஆளுமையுடையவர்களாக மாற்றமடையலாம்

## *மேலதிக கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு*

மாங்குளம், பெப். 4
பாடசாலை மாணவர்கள் வெறுமனவே புத்தகப் படிப்புடன் மாத்திரம் நின்று விடாது இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் விளையாட்டுச் செயற்பாடுகளிலும் மேலோங்கி நின்றாலே பூரண ஆளுமையுடையவர்களாக மாற்றமடைவார்கள் என வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேணியஸ் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பாடசாலையின் முதல்வர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;- பூரண ஆளுமை பெறுவதற்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் வெற்றி தோல்விகளை சரிசமமாக ஏற்றுக்கொள்வதற்கும் விளையாட்டு பெரும் பங்காற்றுகின்றது.

பிள்ளைகளின் கல்விக்கு பெற்றோர் கொடுக்கும் முக்கியத்துவத்தை அவர்களின் உடல் வலுவுக்கும் கொடுக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் உடல், உள, சமூக ரீதியாக ஆளுமையுடையவர்களாக உருவாக்க முடியும். பெண்பிள்ளைகள் தமது பாதுகாப்பை பல தரப்பிலும் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (ம-422)

# வவுனியாவை வீழ்த்தியது அநுராதபுரம்

யாழ்ப்பாணம் பெப். 4
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் ஒன்றில் வவுனியா லீக் அணியை வீழ்த்தியுள்ளது அநுராதபுரம் லீக்.

19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. வவுனியா லீக் அணியை எதிர்த்து அநுராதபுரம் லீக் அணி மோதிக் கொண்ட இந்த ஆட்டத்தில் அநுராதபுரம் லீக் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# இமையாணன் மத்தியின் தொடர்கள்

கரணவாய், பெப். 4
இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக கரப்பந்தாட்டத் தொடரையும், துடுப்பாட்டத் தொடரையும் நடத்தவுள்ளது. தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக தம்முடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ம-108)



யாழ்ப்பாணம் விக்ரோரியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியை முன்னிட்டு நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் சிறந்த முதல் நான்கு இடங்களை முறையே நி.பத்மபிரியன், ந.உதயகுமார், அ.ஜனார்த்தனன், த.ஜீவரூபன் ஆகியோர் கைப்பற்றினர். (ம-21)

# நீக்கிலஸ் - விண்மீன் ஆட்டம் சமநிலையில்

யாழ்ப்பாணம், பெப். 4
ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதிக்கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம்சமநிலையில்முடிவடைந்தது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19வயதினருக்கான உலகக்கிண்ணத்தில் பெயர், வயது முறைகேட்டுச் சர்ச்சை



19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரின் நேபாள அணியின் தலைவரான ராஜு ரிஜாலின் வயது குறித்து புதிய சர்ச்சை எழுந்துள்ளது.

பங்களாதேஷில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடர் நடக்கிறது. சமீபத்தில் இந்தியாவுக்கு எதிராக நேபாளம் விளையாடிய போது வீரர்களின் விவரங்கள் குறித்து காண்பிக்கப்பட்டது. இதில் நேபாள அணியின் தலைவரின் பெயரும், வயதும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. அதாவது நேபாளத்தின் தலைவரது பெயர் ராஜு ரியால் இல்லை அவரது உண்மையான பெயர் ராஜு சர்மா என்றும், இவர் ஏற்கனவே 15 வயதுக்கு உட்பட்டோருக்கான மும்பை அணியில் விளையாடியுள்ளார் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தற்போது அவருக்கு 25 வயது இருக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மை

வலி வடக்கு, பெப். 4

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் அதிபர் சிராணியின் தலைமையில் நடைபெற வுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சனத் ஜயசூரியா கலந்துகொள்ளவுள்ளார். (ம-86)

# ரி-20 உலகக்கிண்ணத் தொடர் இந்திய அணி நாளை அறிவிப்பு

ஆசியாக்கிண்ண ரி-20 தொடர் மற்றும் ரி-20 உலகக்கிண்ணம் ஆகியவற்றுக்கான இந்திய அணி நாளை தெரிவுசெய்யப்படும் என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் இந்தியாவில் எதிர்வரும் 9ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடருக்கான இந்திய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டாயிற்று. அதன்பின் ஆசியாக் கிண்ணத் தொடரும், ரி-20 உலகக்கிண்ணத் தொடரும் நடைபெறவுள்ளன. இந் நிலையில் குறித்த தொடர்களுக்கான இந்திய அணி நாளை அறிவிக்கப்படவுள்ளது.



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் விளையாடிய வீரர்களில் சிறிய மாற்றம் செய்யப்பட்டு அணி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி வேகப்பந்து வீச்சாளரான பாண்டியாவும், மொகிற் சர்மாவும் நீக்கப்பட்டு யாதேவ், சமி இருவரும் சேர்த்துக் கொள்ளப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எதிர்பார்ப்பு நிஜமானால் இந்திய அணி அஸ்வின், ஜடேயா, யுவராஜ் என மூன்று சுழலையும் பும்ரா, சமி, யாதேவ், நெக்ரா, புவனேஸ் குமார் என ஐந்து வேகத்தையும் அணியில் வைத்துக்கொள்ளும்.

எதிர்பார்க்கப்படும் இந்திய அணி போனி (தலைவர்), ரோகித் சர்மா, தவான், கோக்லி, ரெய்னா, ரகானே, யுவராஜ், அஸ்வின், ஜடேயா, சமி, பும்ரா, யாதேவ், நெக்ரா, ஹர்பஜன்சிங், புவனேஸ்குமார். (ம)

# அசைக்க முடியாத ஜோகோவிக் பெரும் வித்தியாசத்தில் முதலிடம்



சர்வதேச ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு தரப்படுத்தல் நேற்று வெளியிடப்பட்டது. தொடர்ந்தும் முதலிடத்தில் தொடர்கிறார் ஜொகோவிக்.

முதலிடத்தில் உள்ள ஜோகோவிக்குக்கும் இரண்டாம் இடத்தில் உள்ள முர்ரேக்கும் இடையில் 7ஆயிரத்து 845 புள்ளிகள் வித்தியாசம் பேணப்படுகிறது. இதன்படி முர்ரே 8ஆயிரத்து 945 புள்ளிகளையும் ஜோகோவிக் 16ஆயிரத்து 790 புள்ளிகளைப் பெற்றுள்ளனர். மூன்றாவது இடத்தில் பெடரர் உள்ளார். ஆனால் பெடரருக்கும் முர்ரேக்கும் இடையில் 200 புள்ளிகள் மட்டுமே வித்தியாசம் உள்ளது. இதன்படி பெடரர் 8ஆயிரத்து 745 புள்ளிகளைப் பெற்றுள்ளார். 6ஆயிரத்து 325 புள்ளிகளுடன் வாவ்ரிங்கா நான்காவது இடத்தில் உள்ளார். 4ஆயிரத்து 880 புள்ளிகளுடன் நடால் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

ஆறு முதல் பத்து வரையான இடங்களுக்குள் முறையேபெரர், நிசிகோரி, பெர்டிச், சோங்கா, ரிச்சார்ட் ஆகியோர் உள்ளனர். (ம)

# ரி-20 உலகக்கிண்ணம் இந்தியாவுக்கே சங்காவைத் தொடர்ந்து லாராவும் கணிப்பு



ரி-20 உலகக் கிண்ணத்தை இந்திய அணி வெல்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமுள்ளது என்று பிரையன் லாரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றுவரும் மாஸ்டர்ஸ் லீக் ரி-20 தொடரில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ரி-20 உலகக் கிண்ணத் தொடர் தொடர்பாக லாரா தெரிவிக்கையில் - தொடர் இந்தியாவில் நடைபெறுவதால் கிண்ணத்தை இந்தியாவே வெல்லும். தற்போதைய நிலையை பொறுத்தவரையில் உலகின் சிறந்த அணிகளுடன் சிறப்பான ஆட் டத்தை வெளிப்படுத்தி வருவதால் இந்தியாவுக்கான வாய்ப்புக்கள் மேலும் அதிகரித்துள்ளன. யுவராஜின் மீள்வருகையை ஆதரிக்கும் பலரில் நானும் ஒருவன். மேற்கிந்தியத் தீவுகளும் பலமான அணியை அறிவித்துள்ளது. வீரர்கள் ஒற்றுமையாகச் செயற்பட்டால் தீவுகளுக்கான வாய்ப்புக்களும் உள்ளன என்றார்.

# பாகிஸ்தான் கழகத்துக்கு விளையாட ரகுமானுக்கு அனுமதி மறுக்கப்பட்டது

பாகிஸ்தானின் கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடரில் பங்களாதேஷின் வேகப்பந்து வீச்சாளரான ரகுமான் விளையாடுவதுக்கு பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மறுத்துள்ளது.

கடந்த வருடம் இந்தயாவிற்கு எதிராக ஒரு நாள் தொடரில் அறிமுகமாகிய ரகுமான், தற்பொழுது அந்த அணியின் முக்கிய பந்து வீச்சாளராக மாறியுள்ளார். இவர் தொடர்ச்சியாக ஆட்டங்களில் பங்கெடுத்து வருவதால் அண்மையில் நடைபெற்ற சிம்பாப்வேக்கு எதிரான ரி-20 தொடரில் இறுதி இரண்டு ஆட்டங்களிலும் இவருக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஆசியாக் கிண்ணம், ரி-20 உலகக்கிண்ணம் ஆகியன அடுத்தடுத்து வருகின்றமையால் ரகுமானை முழு உடற்தகுதியுடன் வைத்திருக்க பங்களாதேஷ் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை விரும்புகிறது. பாகிஸ்தானின் இந்த மாதம் நடைபெறவுள்ள கழகங்களுக்கு இடையிலான ரி-20 தொடரில் ரகுமான் ஓர் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும் அவர் விளையாடுவதற்கு குறித்த கட்டுப்பாட்டுச்சபை அனுமதி வழங்கவில்லை.

PEARSON edexcel
BTEC HND
CIVIL ENGINEERING
SOFTWARE ENGINEERING
BUSINESS MANAGEMENT
மேலதிக விபரங்களுக்கு
071 777 5666
அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்
மாணவரின் உள்ளத்திலிருந்து
IIS இன் கல்விச் சூழல் உயர்கல்விக்கே உரிய நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடியதாக அமைவதுடன் எனது வாழ்வின் புதிய இனிமையான அனுபவமாகவும் மதிப்பு மிக்க எதிர்காலத்தின் வழிகாட்டியாகவும் உள்ளது. பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருந்தும் கூட ஹற்றனில் இருந்து யாழ்ப்பாணம் வந்து IIS இல் துறைசார் வல்லுனர்களிடம் நாம் பெறும் அனுபவமானது வாழ்வின் நம்பிக்கை மற்றும் ஊக்குவிக்கும் உந்துசக்தியை உணரக் கூடியதாக உள்ளது. ஏனைய உயர்கல்வி நிறுவனங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது மிகக்குறைந்த கட்டணத்துடன் இக்கற்கை நெறியை நான் பயிலக்கூடியதாக உள்ளது.

அனுசா
சாவகச்சேரி
IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Web: www.iis.edu.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.